
# வித்துவம்

## VITHTHUVAM



## ஆசிரியர் மாநாடு - 2016
## சிறப்பு மலர்

**மன்னார் கல்வி வலயம்**

# வித்துவம்

பூரண ஆளுமையுள்ள சமுதாயத்தை உருவாக்குவோம்

வலயக்கல்விப் பணிமனை

மன்னார்

## மன்னார் கல்வி வலய

## ஆசிரியர் மாநாடு - 2016

## சிறப்பு மலர்

**வெளியீடு :**

**மன்னார் வலயக்கல்விப் பணிமனை**

**மன்னார்**

# நூன்முகம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | 'வித்துவம்' |
| மலராசிரியர் | : | திரு. எம். ஆர். பிறின்ஸ் டயஸ் |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | ஆசிரியர் மாநாடு சிறப்பு மலர் |
| ஆண்டு | : | 2016 |
| அச்சு எழுத்து | : | 12 |
| பக்கங்கள் | : | 108 |
| உரிமை | : | வலயக்கல்விப் பணிப்பாளருக்கே! |
| வெளியீடு | : | மன்னார் வலயக்கல்விப் பணிமனை |
| வடிவமைப்பு | : | செல்வி. ச. மிதினா |
| வரைகலை, அட்டைப்படம் | : | திரு. எஸ். சதீஸ். |
| அச்சகம் | : | 'சைபர் சிற்றி' அச்சுக்கலையகம், மன்னார். 023 2251668, 0715 797 597 |

# விஷேட நன்றிகள்

ஆசிரியர் மாநாட்டிற்கு

அனுசரணை வழங்கிய

மத்திய கல்வி அமைச்சு மற்றும்

வடமாகாண

கல்வி அமைச்சிற்கும்

வடமாகாண

கல்வித் திணைக்களத்திற்கும்

எமது

மனமார்ந்த நன்றி !

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே-நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே
நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே-நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே
நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே – நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே
நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே – நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!

ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே!

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையக மே!

தொல்லை வினை தருதொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழி யே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே!

# ஆசிரியர் கீதம்

*ஆ ஆ ஆ......ஆ ஆ ஆ..........*
*முத்து முத்தான சித்திரங்கள்*
*இலங்கை முற்றத்தில் சிந்திய ரத்தினங்கள் (முத்து)*
*பற்றும் பாசமும் வைத்தவற்றை*
*நல்ல பாதையில் சேர்க்கும் பணி எமதே! (2)*
*(முத்து)*

*அன்னை மடியில் அரவணைத்த பிள்ளை*
*பள்ளி வரும் பிஞ்சு பாலகனாய் (அன்னை)*
*அவன் தன்னம் தனிமையைப் போக்கிடவே*
*உள்ளத்தில் நம்பிக்கை அன்பை ஊட்டிடுவோம் (அவன்) (முத்து)*

*எண்ணும் எழுத்தும் உணர்த்திடுவோம்*
*உள்ள தேவைகள் அறிந்து பூர்த்தி செய்வோம் (எண்ணும்)*
*அவன் ஒழுங்குடன் ஒழுக்கமும் பேணி நல்ல*
*சிந்தனை ஆற்றலை தூண்டிடுவோம் (அவன்) (முத்து)*

*கற்பித்தல் கற்றல் நிகழ்ந்திடவே*
*நல்ல கட்டுப்பாட்டுடன் வகுப்பறையில் (கற்பித்தல்)*
*தினம் பெற்ற கடமையை பேணி ஏற்றே*
*ஞாலம் போற்றும் சமூகத்தை நாம் படைப்போம் (தினம்) (முத்து)*

# தூரநோக்கு

***தேர்ச்சி நிறைந்த சமூகம் ஒன்றை உருவாக்குவோம்***

# பணிக்கூற்று

***மன்னார் கல்வி வலய மாணவர்களை சமநிலை***
***ஆளுமையும் தேர்ச்சியுமுடைய நல்ல குடிமக்களாக***
***உருவாக்குவதன் பொருட்டு தேசிய கல்விக்***
***கொள்கைகளை நடைமுறைப்படுத்தி வினைத்திறன்மிகு***
***வலயக் கல்வி முறைமையினை***
***கட்டமைத்துப் பேணுவதனூடாக***
***பாடசாலைகளுக்கு வசதிகளையும்***
***வாய்ப்புக்களையும் வழங்கி***
***ஆற்றுப்படுத்தல்***

# மலர் வெளியீட்டுக் குழு

**திருமதி. செலின் சுகந்தி செபஸ்ரியன்**
வலயக்கல்விப் பணிப்பாளர்

**ஜனாப். A.M. யுனைற்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்)

**செல்வி. அமலதாஸ் இவோன்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி)

**திருமதி. பயஸ் ரதி யுடெக்சியா பீரிஸ்**
முகாமையாளர் - அக்ரகனிய ஆசிரிய வளநிலையம்

**திரு. S. தாவீது**
சுற்றாடல் முன்னோடி ஆணையாளர்

**திரு. மரியன் றெஜினோல்ட் பிறின்ஸ் டயஸ்**
**(மலராசிரியர்)**
ஆசிரிய ஆலோசகர் சமூக விஞ்ஞானம்.

*இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்*
*இனிய நீர்த் தண்சு னைகள்இ யற்றல்*
*அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்*
*ஆல யம்பதி னாயிரம் நாட்டல்*
*பின்ன ருள்ள தருமங்கள் யாவும்*
*பெயர்வி ளங்கிஒ ளிரநி றுத்தல்*
*அன்ன யாவினும் புண்ணியங் கோடி*
*ஆங்கோ ரேழைக்கெ ழுத்தறி வித்தல்*
*- பாரதி -*



# மன்னார் வலய கல்விப் பணிப்பாளரிடமிருந்து

2016ம் ஆண்டிற்கான மத்திய கல்வி அமைச்சின் கல்விக்கான நிதியீட்டத்தின் மூலம் வடமாகாணக் கல்வி அமைச்சும் கல்வித்திணைக்களமும் இணைந்து நடாத்தும் ஆசிரிய மாநாட்டில் வெளியிடப்படும் "வித்துவம்" சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வெளியிடுவதில் பெருமையடைகின்றேன்.

இன்று ஆசிரிய தொழிலில் உலகளாவியரீதியில் மிகுந்த முக்கியத்துவமுடைய வாண்மைத்துவமிக்க தொழிலாக உயர்ந்த நிலையில் நோக்கப்படுகின்றது. தொடர்ந்து கற்றல், கற்றுக்கொண்டிருத்தல், அறிவைப் புதுப்பித்தல் ஆகியன ஆசிரியர்களுக்கு மிகவும் அவசியமாகும். ஆசிரியர்கள் தமது நுண்முறைக் கற்பித்தல் பிரயோகத்தை உரியவாறு செய்யவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. தம்மிடம் கற்கும் மாணவர்களின் கற்கைக்கு எதிர்வுகூறும் பொறுப்பையும் ஏற்கவேண்டிய கட்டாயத்திற்கு உட்படுத்தப்படுகின்றனர். இவர்களின் தொழில்துறைப்பிரயோகம் ஏனைய வாண்மைத்துவ தொழில்களான மருத்துவம், சட்டம் ஆகிய துறைகளுக்கு சமமானதாக இருக்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சமகால மாணவர்கள் தகவல்தொழில்நுட்பத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாக அறிவுத்துறையில் பாரிய சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளனர். இத்தகைய சூழலில் மாணவர்களுக்குப் பொருத்தமான வகையில் வழிகாட்டும் பொறுப்பு ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பொதுவாக கல்விச் செய்முறையை நோக்கும் போது கற்றல், கற்பித்தல் செய்முறையின் முகவராக விளங்குபவர்கள் ஆசிரியர்களே. இவர்களிடம் கற்பித்தல் தொடர்பான பல்வகை ஆளுமைகள் எதிர்பார்க்கப்படுகிறது. மாறும் உலகில் பங்கேற்கும் இவர்கள் கற்போரின் தேவையை நிறைவுசெய்ய வேண்டுமாயின் பல்வகைத் தேர்ச்சிகளைக் கொண்டிருப்பதோடு காலத்திற்குப் பொருத்தமான வகையில் மாறும் இயல்பையும் கொண்டிருத்தல் ஆசிரிய வாண்மையின் அடிப்படையாகும்.

மாணவப்பருவத்திலுள்ளவர்கள், நீதி நியாயத்தை மதிப்பவர்கள், பேணுபவர்கள், எதிர்பார்ப்பவர்கள். தமது ஆசிரியர்கள் வகுப்பறையில் நியாயமாக நடந்து கொள்ளவேண்டும், தம்மை மதிக்கவேண்டும் என்றும் எதிர்பார்ப்பவர்கள். மாணவர்கள் பலவிதமான குடும்ப அழுத்தங்கள், சமூக அழுத்தங்களோடு பாடசாலைக்கு வருகின்றனர். இத்தகையோரை அறிந்து கவனிக்கவேண்டிய பொறுப்பு ஆசிரியர்களுடையது. மாணவர்களை மதித்து அவர்களது தேவைகளை உணர்ந்து அபிப்பிராயங்களை செவிமடுத்து உதவுபவர்களே சிறந்த ஆசிரியர்களாவர்.

குருகுல திண்ணைப்பள்ளி முறையில் அமைந்திருந்த பண்டைய கல்விமுறை மானிடப்பண்புகளை மாணவர்களிடையே உயிர்ப்பிக்கச் செய்தது. உன்னத மாணவ சமுதாயத்தை அப்போதைய ஆசிரியர்களே உருவாக்கினார்கள். தொழில்நுட்ப வசதிகள் இல்லாத காலமாக இருந்தாலும் ஆசிரிய மாணவ உறவுமுறை சிறந்து விளங்கியதை வரலாற்றின் மூலம் அறியலாம். நிகழ்காலத்தில் மனிதனின் விஞ்ஞான தொழில்நுட்ப, கணனி அறிவு பன்மடங்கு மேலோங்கியுள்ளது. அதேவேளை மனித வாழ்வியலின் துன்பங்கள், பிரச்சினைகள், சுயநல வேட்கை, பேராசை, பொறாமை, ஆரோக்கியமற்ற போட்டி மனப்பான்மை, முறையற்ற வகையில் பொருள் தேடல், வஞ்சகம், பகைமை, வெறுப்புணர்ச்சி போன்ற தீயசெயல்கள் மேலாண்மை செலுத்துகின்றன. பெரும்பாலான கல்விமான்கள் இத்தீய சக்திகளின் வயப்பட்டு பேய் பிடித்தவர்களின் நிலையிலுள்ளனர்.

எனவே அன்பான ஆசிரியர்களே நம்முன்னோர் நமக்களித்த கல்விச் செல்வங்களையும் பண்பாட்டுச் செல்வங்களையும் பழமையென்ற ஒரே காரணத்திற்காக அவற்றை தள்ளிவிடுதல், ஒதுக்கிவிடுதல், ஏற்காது புறக்கணித்தல் அறிவுடமையாகாது. பண்டைய காலத்திற்குரிய பழமைக்கருத்துக்களை உற்று நோக்கி ஆராய்ந்துபார்த்து சீர்செய்து பக்குவப்படுத்தி நிகழ்காலத்திற்குரியதாக மாற்ற வேண்டும். பண்டுதொட்டு மனிதரை மனிதத்தன்மையோடு கூடிய மனிதராகச் சீர்செய்து பண்பாட்டுள்ளோராக வளர்த்துவந்த ஆன்மீகம் சார்ந்த விழுமியக்கல்வியே இன்றைய தேவை என்பதை நீங்கள் உணர்ந்து நல்ல ஆசூஇரியராக (குற்றம் களைபவர்) செயற்பட்டு ஒழுக்கமிக்க மாணவ சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என ஆசித்துநிற்கின்றேன்.

திருமதி செலின் சுகந்தி செபஸ்ரியன்,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
மன்னார்.



# கௌரவ கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சரின் வாழ்த்துச்செய்தி


மன்னார் வலயத்தினரால் நடாத்தப்படவுள்ள ஆசிரிய மாநாட்டின் போது வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதனையிட்டு மகிழ்வடைகிறேன்.

அன்னையும் தந்தையும் உலகத்திற்கு ஒரு குழந்தையைத் தருகின்றனர். ஆனால் ஒரு ஆசிரியன் உலகத்தையே குழந்தைகளுக்கு தருகின்றான். மொத்தத்தில் இறந்த பின்னும் மண்ணில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் வரிசையில் ஆசான்களுக்கே முதல் இடம் உண்டு என்பது யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை. ஆசிரியர் பணி எவ்வளவு தூய்மையாகக் காணப்பட்டாலும் அண்மைக்காலங்களில் புறம்பான பல தகவல்களை ஊடகங்களில் வெளிவருவதை காணக்கூடியதாக உள்ளது. இது ஆசிரியத்துவத்தின் மகிமையை சீர்குலைக்கும் செயற்பாடாகவே கருதுகிறேன்.

ஆசிரியத்துவத்தின் சிறப்புக்களை விரிவாக்க பல செயற்றிட்டங்கள் ஆசிரியர் மாநாட்டில் உள்ளடக்கப்பட்டிருப்பது ஆசிரியர்களின் கற்பித்தலுக்கு நிச்சயம் துணை புரியும் என்றே நம்புகிறேன்..

மன்னார் வலயத்தின் ஆசிரியர் மாநாட்டின் மூலம் வலயத்தின் அனைத்து ஆசிரியர்களும் ஆசிரியத்துவத்தின் சிறப்பினை உணர்ந்து இன்றே தமது காத்திரமான சேவையை வகுப்பறைக் கற்பித்தலில் வழங்கி சிறந்த எதிர்காலச் சிற்பிகளை உருவாக்க முன்னிற்க வேண்டும் என இம்மலரூடாகக் கேட்டுக்கொள்வதோடு, மலர் வெளியீடு சிறப்புடன் நடைபெறவும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

திரு. த. குருகுலராசா
கௌரவ கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்,
வடக்கு மாகாணம்.



# வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரின் வாழ்த்துச்செய்தி

மன்னார் வலயக் கல்வி அலுவலகத்தினால் நடாத்தப்படவுள்ள ஆசிரிய மாநாட்டை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கற்றல் கற்பித்தல் தொடர்பாக வெற்றியடைந்த ஆசிரியர்களின் அனுபவங்களையும் முன்மொழிவுகளையும் வலய ஆசிரியர்களிடையே பகிர்ந்துகொள்வதன் மூலம் விளைதிறன்மிக்க ஆசிரியத்துவத்தை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு சகல வலயக் கல்வி அலுவலகங்களுக்கும் நிதி ஒதுக்கப்பட்டு ஆசிரிய மாநாடு நடாத்தப்படுகின்றது.

ஆசிரிய மாநாட்டை முன்னிட்டு வெளியிடப்படும் இச்சிறப்பு மலரானது ஆசிரியர்களுக்கு பயன்தரும் வகையிலான விடயங்களை உள்ளடக்கி வெளியிடப்படுகின்றது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது மாணவர்களிடமிருந்து சிறந்த பெறுபேற்றை பெற்றக்கொள்ள முடியும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

ஆசிரிய மாநாட்டின் ஒரு பகுதியாக இந்நூல் வெளியீடு அமைகின்றது. ஆசிரியர்களுக்கு பயன்மிக்க இம்மலரினை வெளியிடும் மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் இம்மலரானது ஆசிரியர்களுக்கு பயன்மிக்கதாக அமைந்து சிறந்த பெறுபேற்றை பெற்றுக்கொடுக்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டி ஆசிரிய மாநாடு சிறப்புற அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இ. இரவீந்திரன்
செயலாளர்
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சு,
வடமாகாணம்.



# வடமாகாண கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

ஆசிரியர்களது வாண்மைத்துவத்தை மேம்படுத்தும் நோக்குடன் நடாத்தப்படுகின்ற ஆசிரியர் மாநாட்டினையொட்டி வெளியிடப்படும் மலரிற்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

கல்வி அமைச்சினது வழிகாட்டலின் கீழ் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் ஆசிரியர் மாநாடு நடாத்தப்படுகின்றது. ஆசிரியர்கள் மத்தியில் தொழில் விருப்பினையும், வினைத்திறனான விளைதிறன் மிக்க செயற்பாடுகளையும் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே இம் மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. ஆசிரியத் தொழில் மகத்துவமானது புனிதமானது சின்னஞ் சிறார்களை கல்வியூட்டி, வழிகாட்டி அவர்களை எதிர்கால வாழ்விற்கு தயார்ப்படுத்துகின்ற பாரிய பொறுப்பு ஆசிரியர்களிடம் வழங்கப்பட்டுள்ளது. எனவே அப்பாரிய பொறுப்பினை ஏற்றிடுகின்ற ஆசிரியர்கள் வாண்மைத்துவ முடையவர்களாக இருத்தல் வேண்டும்.

21ம் நூற்றாண்டில் வாழ்கின்ற மாணவர்களுக்குத் தேவையான கல்வியினை வழங்குவதற்கு நாம் தயாராக வேண்டும். ஆசிரியர்கள் புதிய தகவல் தொடர்பாடல் தொழிநுட்பங்களை பயன்படுத்தக் கூடியவர்களாகவும் மாற்றமடைந்து வருகின்ற நவீன கல்விச் செல்நெறிகளுக்கும் ஏற்றதான கல்வியை வழங்குவதற்கும் ஏற்றவர்களாக தங்களை மாற்றிக்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு ஆசிரியரும் தங்களிடம் ஒப்படைக்கப்படுகின்ற பிள்ளைகளை அரவணைத்து, கல்வியூட்டி அவர்களை ஆளுமையுள்ள, ஒழுக்கமுள்ள பிரஜைகளாக உருவாக்குகின்ற போது ஆசிரியத்துவம் சிறப்படையும். ஆசிரியர்களது திறன்களை வளர்க்கும் நோக்கில் நடாத்தப்படும் ஆசிரியர் மாநாடு சிறப்புடன் நடைபெற வாழ்த்துகின்றேன்.

செ. உதயகுமார்
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
வடக்கு மாகாணம்

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | முகப்பு | I |
| 02. | நூன்முகம் | II |
| 03. | விஷேட நன்றிகள் | III |
| 04. | தேசிய கீதம் | IV |
| 05. | தமிழ்மொழி வாழ்த்து | V |
| 06. | ஆசிரியர் கீதம் | VI |
| 07. | தூரநோக்கு, பணிக்கூற்று | VII |
| 08. | மலர் வெளியீட்டுக்குழு | VIII |
| 09. | மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்து | IX |
| 10. | வடமாகாண கல்வி, ... அமைச்சரின் வாழ்த்துச் செய்தி | XI |
| 11. | வடமாகாண கல்வி, ... அமைச்சின் செயலாளரின் வாழ்த்துச்செய்தி | XII |
| 12. | வடமாகாண கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி | XIII |
| 13. | உள்ளடக்கம் | XIV |
| 14. | ஒழுக்கவிருத்தி | 01 |
| 15. | தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையும் பெற்றோர் மனப்பாங்கும் | 06 |
| 16. | இரண்டாந்தேசிய மொழியாக சிங்கள, தமிழ்மொழியைக் கற்பதிலும், கற்பிப்பதிலும், பயன்படுத்தக்கூடிய நுட்பங்களும், முறைகளும் | 16 |
| 17. | அகரம் தொடக்கிய சிகரங்கள் | 19 |
| 18. | தமிழ்மொழி பாட ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்கள் | 20 |
| 19. | உதய சூரியன் | 24 |
| 20. | வெளிநாடு சென்ற தாய்மாரின் பிள்ளைகளின் கல்விநிலை | 28 |
| 21. | இருமொழிக்கல்வியில் ஆங்கில மொழி மூலம் கற்பிக்கும் ஆசிரியர்கள் தொடர்பான பிரச்சனைகளும், தீர்வுத்திட்டங்களும் | 33 |
| 22. | அறிவு மைய நூற்றாண்டில் ஆசிரியத்துவம் | 43 |
| 23. | ஆசிரியரும் சமூக வகிபாகமும் | 48 |
| 24. | தமிழ் மொழி வளர்க்கும் பணியில் பாடசாலைகளின் பங்கு | 54 |
| 25. | பாடசாலை மட்ட ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டம் | 57 |
| 26. | Think a Minute | 65 |
| 27. | வரலாறு பாடத்தில் உயர் அடைவைப் பெறுவதற்கான இடர்பாடுகளை இழிவளவாக்குதல். | 66 |
| 28. | மன்னாரின் மாண்பும் நல்மாணவர் பண்பும் | 73 |
| 29. | பாடசாலைக் கலாசாரத்தை கட்டியெழுப்புவதில் ஆசிரியரின் பங்கு | 76 |
| 30. | மன்னார் வலயப் பாடசாலைகளின் உயர்தர கணித, விஞ்ஞான பிரிவின் பரீட்சைப் பெறுபேறுகளின் சமகால நோக்குகள் பற்றிய ஓர் ஆய்வு | 78 |
| 31. | வட மாகாணத்தில் பெருகிவரும் வனவிலங்கு சரணாலயங்களும், தேசிய பூங்காக்களும் | 82 |
| 32. | உயர்வான எண்ணங்கள் | 88 |
| 33. | தனது மகனின் ஆசிரியருக்கு ஆபிரகாம் இலிங்கன் எழுதிய மடல் | 89 |
| 34. | வலயத்தின் தரவுகள் ஒரே பார்வையில் | 91 |
| 35. | கல்வியின் மூலம் எதிர்பார்க்கப்படும் அடிப்படை மானுடப் பண்புகள் | 93 |
| 36. | நன்றி நவில்கின்றோம் | 94 |

# ஒழுக்கவிருத்தி
## (Moral Development)

திருமதி. அக்னேஸ் சிவானந்தன்
ஆசிரியர் - மன்/ புனித லோறன்ஸ் றோ.க.த. பா., தலைமன்னார் கிராமம்.

ஒருவன் ஒழுகும் முறையே, செயற்படும் முறையே ஒழுக்கம் எனப்படும். இதில் இருவகை உண்டு. அவை நல்லொழுக்கம், தீயொழுக்கம் என்பனவாம். ஒழுக்கம் என்பதற்கு நாம் நல்லொழுக்கம் என்றே பொருள் கொள்கின்றோம்.

பல்வேறு உயிரிகளுள் மனிதனிடம் மட்டுமே ஒழுக்கப் பண்புகள் எனப்படுவன காணப்படுகின்றன. கல்வியின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று மாணாக்கரிடையே நல்லொழுக்க வளர்ச்சிக்கான வாய்ப்புக்களை அளித்தலாகும். ஹேர்பார்ட் போன்ற கல்வியியலாளர்கள், ஒழுக்கமே கல்வியின் நோக்கமாகும் என்றும் கூறுவர். நுண்ணறிவைக் காட்டிலும் நல்லொழுக்கமே இன்றைய முக்கிய தேவை எனப்படுவதில் பெருமளவு உண்மை உள்ளது. நுண்ணறிவுத் திறன்மிக்க ஆனால் ஒழுக்கம் குறைந்த தலைவர்களால் சமூகத்திற்கு தீமையே எழும். ஏனெனில் சமூகநலனுக்கு மாறாக தமது குறுகிய நலன்களை அடைவதற்கே இத்தகையோர் தமது உயர் ஆற்றல்களைப் பயன்படுத்திக் கொள்வர். கற்றல், சமூகவியல் பிணைப்புப் பெறுதல் ஆகியவற்றின் நிலைத்த பயன் ஒழுக்கமாகும். உயர்ந்தனவும் சிறந்தவையுமான குறிக்கோள்களின் அடிப்படையில் அமைந்த நல்லொழுக்கத்தினைப் பெற்றவனால்தான் சிறந்த சமூகவியல் பிணைப்பைப் பெற்றுவிளங்க முடியும். நல்லொழுக்கத்துடன் இணைந்து வலுமிக்க மனவுறுதியும் மாணவர்களில் உருவாக்கப்பட வேண்டும்.

ஒழுக்க வளர்ச்சி தனிப்பட்ட முயற்சியால் தோன்றுவதன்று. கூட்டு முயற்சிகளின் பலனாக எழுவது. மாணவர்களிடம் நல்ல ஒழுக்கம் வளர்ச்சியுற ஆசிரியர்கள் சில முறைகளைக் கையாளலாம். குறிப்பாக அறநெறிப்போதனை இல்லாவிடினும் சிலவகை நடத்தைகளை பாராட்டுவதன் வழியேயும் வேறு சிலவற்றை கண்டிப்பதன் வழியாகவும் ஒழுக்கப் பயிற்சியினை முறைமுகமாக பாடசாலைகள் அளிக்கின்றன. மாணவர்களிடம் அறப்பற்றுக்கள் வளர அவர் நேர்முகமாகவும் வழிகோலுதல் வேண்டும். ஒழுக்க வளர்ச்சியில் பார்த்துச் செய்தல் (Imitation) பெரும்பங்கு கொள்கிறது. ஆகவே, ஆசிரியர் இப்பற்றுக்கள் உள்ளடங்கிய நற்பண்புகளை தாமே பெற்றிருப்பது

மட்டுமன்றி அப் பண்புகளை பெறுதலை ஒரு குறிக்கோளாக மாணவர் ஏற்கும் படியும் செய்யவேண்டும். நற்பண்புகள் நிறைந்த பெரியோர்களுடைய தொடர்பும் இலக்கியங்களில் காணப்படும் உயர்ந்த கருத்துக்களும் இதைச் செய்வதில் ஆசிரியர்களுக்குப் பெரிதும் துணைநிற்பன ஆகும். நற்பண்புகள் ஒரு நிலைமையில் மாணவர் கற்கும்போது இது பொருந்தும் என்று அவர்கள் தவறாக எண்ணிவிடாமல் வாழ்க்கையில் தோன்றும் எந்தச் சந்தர்ப்பத்திற்கும் அவை பொருந்துமென எண்ணும்படி ஆசிரியர் செய்ய வேண்டும். எடுத்துக்காட்டாக உண்மை பேசுதல் என்பது சில நிலமைகளில் மட்டுமே மேற்கொள்ள வேண்டியதன்று. வாழ்க்கை முழுவதும் எப்பொழுதும் மேற்கொள்ள வேண்டிய ஒரு பண்பாகும் என்பது மாணவர் மனதில் பதிய வேண்டும்.

அறப்பற்றுக்கள் நிலைக்க வேண்டுமாயின் அவை செயலில் வெளிப்பட பல வாய்ப்புக்கள் பாடசாலை வாழ்க்கையில் மாணவருக்கு அமைத்துத் தரப்படவேண்டும். அறநெறிகளைப் பற்றிய அறிவைப் போதிப்பதன் வழியே மாணவர்களின் ஒழுக்கம் தானாகவே வளர்ச்சியுறும் என ஆசிரியர்கள் நினைப்பது தவறாகும். ஒழுக்கப்போதனை (Moral Instruction) மாணவர்களின் அறப்பற்றுக்கள் செயற்பட வாய்ப்பளிக்கப்பட வேண்டும். ஒழுக்கத்தின் அடிப்படை 'தான்' எனும் உணர்ச்சியாகும். இவ்வுணர்ச்சி மாணவர்களுக்குத் தோன்றுதல் இன்றியமையாதது. பாடசாலையின் பாங்கும், பண்பும் அதன் மரபும் பாடசாலையிலுள்ள கூட்டுவாழ்க்கையும் ஒழுக்க வளர்ச்சிக்கு பெரிதும் உதவுவன. ஒழுக்கவளர்ச்சியில் சமயப் போதனைக்கு சிறப்பிடம் உண்டு. ஏனெனில் நல்லொழுக்கம் உள்ளவனால்தான் கடவுளின் அருளைப் பெறமுடியும் எனுங்கருத்தை எல்லா உலக சமயங்களுமே வலியுறுத்துகின்றன.

ஒழுக்க விருத்தி பற்றி பியாஜே (Piajet) நிறைந்த ஆய்வுகளைச் செய்துள்ளார். அவரது ஆய்வுகளின் படி அவர் இருபடிநிலைக் கோட்பாட்டை (Two stage theory) ஒழுக்கவிருத்தி தொடர்பாக முன்வைத்துள்ளார். இதன்படி 10-11 வயதிற்குட்பட்டோரிடம் ஒழுக்கம் என்பது மாறாதது, உறுதியானது என்றும் அது கடவுளால் அல்லது நம் முன்னோர்களால் வழங்கப்பட்டது என்றும் வளர்ந்த பிள்ளைகள் இதனின்றும் வேறுபட்டுச் சிந்திக்கிறார்கள். அதாவது ஒழுக்கம் விருத்தியடைகையில் மாறக்கூடியது என்றும் கூட்டுணர்வு என்றும் விளங்கிக் கொள்கிறார்கள் என விளக்குகிறார்.

பியாஜேயின் கருத்துக்களால் நன்கு கவரப்பட்டவரும் ஒழுக்கவிருத்தி தொடர்பாக ஆராய்ந்து அதில் ஆய்வுகளை நிகழ்த்தியவருமான லோறன்ஸ் கோல்பேர்க் (Lawrence Kholberg) ஒழுக்கவிருத்தி தொடர்பாக ஆறு படிநிலைகளைக் கூறுகின்றார். இவற்றை 3 மட்டங்களுள் உள்ளடக்கியுள்ளார். ஒவ்வொரு மட்டத்திலும் இரண்டு படிநிலைகள் வருமாறு விளக்கிக் கூறுகின்றார். அவையாவன:

Level 1. Preconventional Morality

Stage 1. Obedience and Punishment Orientation

Stage 2. Individualism and Exchange

Level 2. Conventional Morality
Stage 3. Good Interpersonal Relationships
Stage 4. Maintaining the Social Order
Level 3. Postconventional Morality
Stage 5. Social Contract and Individual Rights
Stage 6. Universal Principles

இவரின் முதல் மட்டத்தில் உள்ள இரண்டு படிநிலைகளிலும் ஒழுக்கவிருத்தியானது பியாஜேயின் முதலாவது படிநிலையை ஒத்ததாக வுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஒழுக்கவிருத்தியானது முதலாவது படிநிலையில் பியாஜே குறிப்பிடுவது போன்று மாறாதது என்ற கருத்தே பிள்ளைகளிடம் காணப்படும் என்பதை இவரும் தனது பரிசோதனைகளின் மூலம் எடுத்துக் கூறுகின்றார். உதாரணமாக பியாஜேயின் ஆய்வுகளில் அம்மாவுக்கு உதவி செய்யும் போது ஒரு பிள்ளை 15 கோப்பைகளைத் தவறுதலாகப் போட்டு உடைத்து விட்டது. இன்னொரு பிள்ளை 1 கோப்பையை உடைத்துவிட்டது எனக்கூறி இதுபற்றி வினவியபோது பிள்ளைகள் முதலாவது பிள்ளை மிகவும் மோசமானது என்று கூறினார்கள். கோல்பேர்க் தனது ஆய்வில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட மனைவியைக் காப்பாற்ற கணவன் மருந்துக் கடையை உடைத்து திருடியமை பற்றிக் கூறப்பட்ட போது பிள்ளைகள் கணவனைக் குற்றவாளி என்றே கூறினர். இதிலிருந்து சிறு பிள்ளைகள் ஒழுக்கம் பற்றி கருத்தேற்றக் கருத்துக்களையே கொண்டுள்ளமையை இருவரது ஆய்வுகளும் தெரிவிக்கின்றன. வளர்ந்த நிலையில் பிள்ளைகள் படிப்படியாக ஒழுக்கம் பற்றிய யதார்த்த, நடைமுறைக் கருத்துக்களை அறிந்து, அனுபவித்து ஏற்றுக்கொள்கின்றார்கள் என்பதை இந்தப் படிநிலை விளக்கங்கள் முன்வைக்கின்றன.

உண்மை, நேர்மை, அடக்கம், கீழ்ப்படிவு போன்ற அறநெறிகளைக் குழந்தைகள் தெரிந்தவர்களாக இருக்க வேண்டுமென நாம் எதிர்பார்க்கின்றோம். வேண்டியன எவை, வேண்டாதன எவையென அவர்கள் அறிந்திருக்க வேண்டுமென விரும்புகின்றோம். ஆரம்பத்தில் அவர்கள் பெற்றோரின் நடத்தைகளையும் மனப்பான்மை களையும் பாவனை செய்தே கற்கின்றனர். இவ்வாறு எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக்கூடாது எனப் பெற்றோர் கூறுவதன் மூலமும் நல்ல செயல்களுக்கு வெகுமதி, அங்கீகாரம், மெச்சுதல் ஆகியனவற்றை வழங்குவதன் மூலமும் குழந்தைகளின் அறநெறி வளர்ச்சியடைந்து இறுதியில் தமக்கென ஓர் அறநெறிக் கோலத்தை ஆக்கிக்கொள்வர். இதற்கெதிராக அவர்கள் செயற்படும்போது குற்றவுணர்வு பெறுவர்.

குழந்தைக்கு ஆசிரியர் படிப்பறிவு, செயற்றிறன் ஆகிய பல கற்பிக்கும் பொறுப்பை மேற்கொண்டுள்ளார். ஆனால், இவற்றிற்கெல்லாம் மாறாக நல்லொழுக்கத்தை வளர்த்தலை தலையாய கடமையாகப் போற்ற வேண்டும். எக்காலத்தையும்விட இன்று மனித வாழ்க்கைக்கு நல்லொழுக்க நடத்தையின் தேவை இன்றியமையாததாகியுள்ளது. நல்லொழுக்கத்துடன் இணைந்து அதனைச் செயற்படுத்த உதவும் வலுவான

மனவுறுதியும் (Strong will) மாணாக் கரிடையே வளர்க்கப்படல் வேண்டும். நல்லொழுக்க வளர்ச்சியில் ஆசிரியர், பெற்றோர் ஆகியோரது முன்மாதிரி நடத்தை முக்கியமானது.

ஐந்து வயதடையும் முன்பே குழந்தைகள் பாலியல் வேறுபாடு பற்றிய வினாக்களை கேட்கத் தொடங்குவர். ஆண், பெண் உடலுறுப்பு, குழந்தை பிறத்தல் ஆகியன பற்றியே வினாக்கள் இருக்கும். பாலியல் பற்றி தவறான கருத்துக்களை அவர்கள் பெற்று விடாதவாறு பெற்றோர் நடந்துகொள்ள வேண்டும். வாழ்நாள் முழுவதும் அவர்கள் பாலியல் பற்றி கொண்ட மனப்பான்மைகள் பெற்றோர் அதில் காட்டும் மனப் பான்மையைப் பொறுத்தே அமையும்.

குடும்பத்தின் செல்வாக்குகள் குடும்பத்திலுள்ள பல்வேறு உறுப்பினர் களின் நடத்தை குழந்தைகளின் ஒழுக்க வளர்ச்சியில் முக்கியமான பங்கைப் பெறுவனவாகும். இவற்றுக்கு அடுத்து குழந்தை நல்லொழுக்கப் பண்புகளைப் பெற அதற்கு உதவுவதில் பாடசாலை யின் செல்வாக்கு முக்கியமானது. இச் செல்வாக்கின் விளைவாக உயர்ந்த வாழ்க்கைக் குறிக்கோள்களையும் அறக்கருத்துக்களையும் தமது உள்ளத்தே அமைத்து இவற்றுக்கேற்ற முறையில் நடந்துகொள்ளும் பழக் கத்தை குழந்தை அடைகிறது. பாட சாலைக் கல்வியின் வழியே இத்தகைய ஒழுக்கப் பழக்கங்களை குழந்தைகள் அடையவேண்டுமென்று சமுதாயம் எதிர்பார்க்கிறது. பள்ளியில் மாணவர் களுக்கு நல்லொழுக்கப் பண்புகளது வளர்ச்சிக்கான பயிற்சியளிக்கையில் அவர்களது குடும்ப சூழ்நிலை, சுற்றுப்புறச் சூழ்நிலை ஆகியவற்றின் முழுத்தன்மையினையும் ஆராய்ந்து அவற்றில் காணப்படக்கூடிய குறுக் கீடுகள், குறைபாடுகள் ஆகியவற்றைக் கடந்து நல்வளர்ச்சியினை மாணவர்கள் பெறுவதற்கான வாய்ப்புக்களை பாடசாலை உருவாக்கித் தரவேண்டும். மாணவர்களது சூழ்நிலையை உயர்த்தி சீராக்கவுதவும் ஒரு கருவியாக பாட சாலை செயலாற்றல் அவசியமாகும்.

குழந்தைகளின் ஒழுக்கம் பல நிலைகளில் வளர்ச்சியுறுகிறது. சிறு குழந்தைகளின் நடத்தையினை நாம் அறப்பண்புகளின் கோணத்தில் நின்றும் நோக்கி மதிப்பிடுவது தவறு. குழந்தை பிறக்கும்போதே நல்லொழுக்க முடையதாகவோ, தீயொழுக்கத் தினைப் பெற்றதாகவோ பிறப்பதில்லை. அதன் ஆரம்ப நடத்தை இயல் பூக்கங்கள் (Instincts), மனவெழுச்சி (Emotion) ஆகியவற்றால் உந்தப்பட்டு எழுவதாகும். குழந்தை மேலும் வளர்ச்சியுற்று அதன் அனுபவங்கள் விரிவடைவதன் விளைவாக இயல் பூக்கங்களும் இவற்றோடு இணைந்து காணப்படும் மனவெழுச்சிகளும் பல்வேறு பொருள்கள், கருத்துக்கள், நிலையங்கள் ஆகியவற்றைச் சுற்றி ஒழுங்கமைக்கப்பட்டு பற்றுகளாக (Sentiments) உருப்பெறுகின்றன. இப்பற்றுக்களில் உண்மை பேசுதலில் விருப்பம், நேர்மையில் விருப்பம் போன்ற அறப்பண்புகள் (Moral Sentiments) காணப்படும். இவையே குழந்தையின் நல்லொழுக்கத்தின் அமைப்புக் களாகும். இப்பற்றுக்கள் அதன் நடத்தைக்கு ஒருமைப்பாட்டினையும் நிலைத்ததன்மையினையும் அளிக் கின்றன. இவ் அறப்பற்றுக்கள் யாவும் சிறப்பான தன்னுணர்ச்சியின் கட்டுப்

பாட்டுக்குள் அமைந்து ஒழுக்கத்தினையும் அதனின்றும் எழும் அறநடத்தைகளையும் உருவாக்குகின்றன. குழந்தையின் ஒழுக்கவளர்ச்சி தனிப்பட்டு நிகழ்வதில்லை. அதனறிவு வளர்ச்சி, மனவெழுச்சிகளின் வளர்ச்சி, சமூகப்பண்புகளது வளர்ச்சி ஆகியவற்றுடன் இணைந்தே நிகழ்வதாகும். நல்லொழுக்கம் பற்றிய போதனையினைக் காட்டிலும் மகிழ்ச்சி பரவிய சிறப்பான குடும்ப சூழ்நிலையும் பாடசாலைச் சூழ்நிலையும் மாணவர்களது நல்லொழுக்க வளர்ச்சிக்கு அதிகளவு பயனுள்ளதாகும்.

மாணவர்களின் ஒழுக்க வளர்ச்சியை ஊக்குவித்தலில் பாடசாலை ஆசிரியர்களுடன் அம்மாணவர்களின் பெற்றோர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்பது அவசியம். மாணவர்களின் குடும்ப சூழ்நிலை அவர்களது ஒழுக்க வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கிறது. நல்ல பண்புள்ள குடும்பங்களிலிருந்து வரும் மாணவர்கள் சிரமமின்றி நல்ல ஒழுக்கங்களைப் பெறுகின்றனர். சீரழிந்த குடும்ப சூழ்நிலையில் வளரும் குழந்தைகள் ஒழுக்கம் சிதைந்து வளருகிறார்கள். சூழ்நிலையிலிருந்து எழும் சில காரணிகள் மாணவர்களிடம் பொருத்தப்பாடின்மையைத் தோற்றுவித்து, அவர்களது நடத்தையைப் பாதித்து அவர்களை இடர்தரும் சிறுவர்கள் அல்லது நெறிபிறழ்வான சிறுவர்களாக ஆக்குகின்றன. ஆகவே, ஒழுக்க வளர்ச்சியில் பெற்றோரின் பங்கு முக்கியமானது. இதில் தங்களது பொறுப்பை அவர்கள் சரிவர நிறைவேற்றாமல் விடுமிடத்து ஆசிரியர் எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் யாவும் பயனற்றுப்போகும்.

**உசாத்துணைகள்**

1. முத்துலிங்கம். ச. (2002) கல்வியும் உளவியலும் பகுதி 1, லங்கா பொத்தகசாலை, கொழும்பு 12.

2. சந்தானம். எஸ்., கணபதி. வி. (2004) கல்வி உளவியல், சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை.

3. Thomas Lickona ,The stages of Moral Reasoning Preschool to Adulthood, www.charactereducation.info/articles/stages of moral development.htm

4. http/faculty.plts.edu/gpence/html/kohnerg.htm

**இரு கைகளையும் பையினுள் போட்டுக்கொண்டு வெற்றி என்னும் ஏணியில் ஏற முடியாது**

**– அமரிக்க பழமொழி –**

**வருடத்திலே நாளை என்பது எப்பொழுதும் வேலை நிறைந்த நாளாகும்.**

**– ஸ்பானிய பழமொழி–**

# தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையும் பெற்றோர் மனப்பாங்கும்

**திரு. எம். சிவானந்தன் M.Ed, M.A., B.A., PGDE, PGDIT.**
***உதவிக்கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி)***

*முறைசார்ந்த கல்வி அமைப்பிலே மதிப்பீடு என்பது மிக முக்கியம் வாய்ந்தது. எந்தவொரு செயல் தொடர்பாகவும் அதன் விளைவினை அறிந்து கொள்வது அவசியமானது. அந்த விளைவை அளக்க மதிப்பிடல் அவசியம். அந்தவகையில் கற்றல் செயற்பாட்டிலும் மாணவரின் நிலையை அறிந்து கொள்ளவும் அதன் அடிப்படையில் அடுத்தகட்ட கற்றல் நடிவடிக்கைகளை முன்னெடுக்கவும் மதிப்பிடல் அவசியமாகின்றது. மதிப்பிடலுக்காக பல்வேறுபட்ட அளக்கும் முறைகள், அதாவது பரீட்சை முறைகள் உள்ளன.*

*இலங்கையில் பரீட்சைகளை நாடு தழுவிய ரீதியில் நடாத்தி, பெறுபேறுகளைக் கணித்து வெளியிடுவதற்கெனப் பரீட்சைத் திணைக்களம் உள்ளது. பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளை மதிப்பிடுவதற்காகத் தேசிய ரீதியில் பல பரீட்சைகள் நடாத்தப்படுகின்றன. இதில் பாடசாலை சார்ந்த முதலாவது தேசிய பொதுப் பரீட்சையாகத் தரம் ஐந்தின் புலமைப் பரிசில் பரீட்சை காணப்படுகின்றது. பிள்ளை தனது பத்தாவது வயதில் இப் பரீட்சைக்கு முகம் கொடுக்கின்றது.*

*இந்த வகையில், தேசிய ரீதியாக நடாத்தப்படும் பொதுக்கல்வி சார்ந்த பரீட்சையாக விளங்கும் இப் புலமைப் பரிசில் பரீட்சையானது 'பாடசாலைக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை' என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.*

*இலவசக் கல்வியின் தந்தை எனப்போற்றப்படும் W.W.கன்னங்கர அவர்களால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இதன்மூலம் அக் காலத்தில் நாட்டிலுள்ள பிரதான மத்திய மற்றும் இடைநிலைப் பாடசாலைகளில், பின்தங்கிய மாணவர்கள் அனுமதி பெற்று, கல்வியைப் பெற வாய்ப்பு அளிக்கப்பட்டது. இப் பரீட்சையின் மூலம் அரசாங்கத்தினால் வரையறுக்கப்பட்ட குறிப்பிட்ட அளவான மாணவர்களுக்கு மாவட்ட அடிப்படையில் உதவிப் பணத்தை வழங்குவதற்கும் மேலும் சிறந்த வசதிகளையுடைய தேசிய மட்டத்திலே பாடசாலைகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கும் இப் பரீட்சையிலே கிடைக்கப்பெற்ற மொத்தப் புள்ளிகள் அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது.*

வருடாவருடம் பரீட்சைத் திணைக்களமானது இப் பரீட்சையின் பிரமாணங்களை சகல பாடசாலைகள் ஊடாகவும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பாதுகாவலர்கள் என சகல தரப்பினருக்கும் விளக்கமளிக்கும் வகையில் அனுப்பி வைக்கின்றது. அதிபர்கள் மூலம் சகல தரப்பினருக்கும் விளக்கமளிக்கப்பட வேண்டும் என்பதையும் வேண்டி நிற்கின்றது. இப் பிரமாணக் குறிப்பில் பின்வரும் நோக்கங்கள் குறிப்பிடப் படுகின்றன.

1. ரூபா 54000/= அல்லது அதற்கும் குறைந்த வருடாந்த வருமானத்தையுடைய பெற்றோர்களின் / சட்டரீதியான பாதுகாவலர்களின் பிள்ளைகளுக்கு உதவிப் பணத்தை வழங்குதல்.

2. தெரிவு செய்த பாடசாலைகளில் 6 ஆம் தரத்திற்கு மாணவர்களை அனுமதித்தல்.

மேற்கண்ட முதலாவது நோக்கத்தின்படி தகைமை பெறும் மாணவர்களுக்கு 6 ஆம் தரம் தொடக்கம் 13ஆம் தரம் வரை வருடமொன்றுக்கு ரூபா 5000/= உதவிப் பணம் வழங்கப்படும். முதலில் 6 வருடங்களுக்கு மட்டும் என மட்டுப்படுத்தப்படும் உதவு தொகையானது, க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஒரே தடவையில் உயர்தரத்திற்கு தெரிவு செய்யப்பட்டால், மேலும் இருவருடங்களுக்கும், முதல் தடவையிலேயே பல்கலைக்கழகத் திற்குத் தெரிவுசெய்யப்பட்டால், பாடநெறி தொடங்கும் நாளில் இருந்து மாதம் ரூபா 3000 வீதமும் கல்வி கற்கும் காலப்பகுதிக்கு வழங்கப்படும்.

இரண்டாவது நோக்கத்தின்படி தகைமை பெறும் மாணவர்களுக்கு பெற்றோரின் விருப்பத்திற்கு அமைய கல்வியமைச்சின் செயலாளரினால் பாடசாலைகள் ஒதுக்கப்படும்.

மேலும் இப் பரீட்சையிலே சித்திகள் ஏதும் தீர்மானிக்கப்படமாட்டா. ஆகவே, இப் பரீட்சை பெறுபேறுகளின் சார்பிலே சான்றிதழ்கள் எவையும் வழங்கப்படமாட்டா. ஏனைய ஏதும் தேவையின் சார்பிலே அத்தகைய பெறுபேறுகள் தகைமையொன்றாக ஏற்றுக்கொள்ளப்படவும் மாட்டா என மிகத் தெளிவாக பிரமாணக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில் மேற் கூறிய இரு நோக்கங்களின் அடிப்படையில் நடத்தப்படுகின்ற இப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்கள், சாதாரணமாக அவர்களுக்குரிய கலைத்திட்ட, பாடத்திட்ட, தேர்ச்சிமட்ட நிலமைகளுக் கேற்ற வகுப்பறைச் செயற்பாடுகள் மற்றும் இணைப்பாடவிதானச் செயற் பாடுகள் ஊடாக வழிநடத்தப்படுவதே போதுமானதாக இருக்குமென்பதே அரசின் எதிர்பார்ப்பாகும். இதனை உறுதிப்படுத்தும் வகையில் குறித்த பரீட்சைக்கென பிரத்தியேகமான அம்சங்கள், அணுகுமுறைகள் எவையும் கலைத்திட்டத்திலோ, ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளிலோ பரிந்துரைக்கப்படவில்லை.

குழந்தைகளுக்கான விடுதலைச் சாசனத்தை உருவாக்கியவராகப் போற்றப்படும் கல்வியியலாளர் ரூசோ அவர்கள் "நிச்சயமற்ற எதிர்காலத் திற்காக குழந்தையின் இனிமையான நிகழ்காலத்தைப் பாழாக்காதீர்கள்" என்ற கூற்று முற்றுமுழுதாகப்

பின்தள்ளப்பட்டு, போட்டி போட்டுக் கொண்டு பெற்றோர்கள் இப் பரீட்சையை எதிர்கொள்ளத் தயாராகி விடுகிறார்கள்.

ஆரம்ப வயதுப் பிள்ளைகளின் உடல், உள விருத்தி நிலைகளின் தத்துவார்த்த, உளவியல் ரீதியான ஆராய்வு பூர்வமான முடிவுகளைக் கொண்டு, தரம் ஒன்று தொடக்கம் ஐந்து வரையான வகுப்புக்கள் மூன்று முதன்மை நிலைகளாக்கப்பட்டு, அதற்கேற்ப கலைத்திட்ட ஏற்பாடுகளும் ஆசிரியர் பயிற்சிகளும் வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

எனினும் இதில் எந்தவொரு அம்சத்தையும் கவனத்திற் கொள்ளாத விதமாகவே தரம் ஐந்துக்குரிய புலமைப் பரிசில் பரீட்சையை மையமாகக் கொண்டு இடம்பெறுகின்ற கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் அமை கின்றன. ஆரம்பப் பிரிவு மாணவர்களின் உடல், உள ஆற்றல்களுக்கு அப்பாற்பட்ட, அனுபவத்திற்கு இடங் கொடாத 'வைப்பு முறைக் கல்வி' எண்ணக்கருவின் பாற்பட்டதான, 'அறிவுத் திணிப்பு' நடைபெற்று வருவதை இன்று காணக்கூடியதாக வுள்ளது. இதன் காரணமாக மாணவர்கள் எதிர்கொள்கின்ற மன அழுத்தங்களும் நெருக்கீடுகளும் பாரதூரமானவை. மாணவர் மட்டுமின்றி கற்பிக்கும் ஆசிரியர்களும் பாரிய அழுத்தங்களுக்கும் மன உளைச்சல் களுக்கும் ஆளாகி வருகின்றனர்.

இவ்வாறானதொரு பரீட்சையானது, ஆரம்பகாலங்களில், எந்த நோக் கங்களுக்காக ஏற்படுத்தப்பட்டதோ, அந்த நோக்கங்களை அடைந்து கொள்வதில் வெற்றி பெற்றதா, இல்லையா என்பதைவிட, இன்று அது முற்று முழுதாக குறித்த நோக்கங் களையே விட்டு விலகிச் செல்லும் போக்கையே காணக்கூடியதாக உள்ளது. அதாவது குறைந்த வருமானத்தையுடைய, பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர் களுக்கு நன்மை பெற்றுக் கொடுக்கக் கூடிய இப் பரீட்சையானது, இம் மாணவர்களுக்கு எவ்வித நன்மையையும் பெற்றுக்கொடுக்க முடியாத நிலையில் உள்ளது.

இப் பரீட்சை நடைமுறைக்கு வந்து தற்போது ஏழு தசாப்தங்களைக் கடந்துள்ள நிலையில், அண்மைய இரு தசாப்தங்களாக இதன் போக்கும் எதிர்பார்ப்பும் எல்லையற்ற வகையில் வியாபித்துக் காணப்படுகின்றது. கடந்த 10 ஆண்டுகளில் நாடளாவிய ரீதியில் பாடசாலைகள் இப்பரீட்சைக்காக மிக்க பிரயத்தனங்களை மேற்கொள்கின்றன.

வலயக் கல்விப் பணிப்பாளர் தொடக்கம் வகுப்பாசிரியர் வரை இப் பரீட்சையை ஒரு சவாலாகவும் மாணவர் கள் ஈட்டிக்கொள்ளும் உயர் புள்ளிகளைத் தமது ஆளுகைப்புல ஆளுமைசார் வெற்றியாகவும் கருது கின்றனர். இவர்களுடன் போட்டிக்குத் தாமும் சளைத்தவர்கள் அல்ல என்றவகையில் தனியார் கல்வி நிறுவனங்களும் வெற்றிவிழாக்களைக் கொண்டாடித் தாமே வெற்றிக்குக் காரணம் என்று சுவரொட்டி விளம்பரங்கள் மூலம் உரிமைகோரி, அடுத்தகட்ட நிதி சேகரிப்புக்கு அதிரடியாக இறங்கிவிடுகின்றன. இவர்களையெல்லாம் விட பெற்றோர் கள் தங்களின் பிறவிப் பயனை அடைந்துவிட்டதாகவே தம் பிள்ளை

களின் வெற்றியைக் கொண்டாடு கின்றனர். தமது சமூக மதிப்பு, கௌரவம் எல்லாமும் இந்த வெற்றியினால் தக்கவைக்கப்பட்டதாக அல்லது உயர்த்தப்பட்டதாக குதூகலிக் கின்றனர். ஆனால் இப் பரீட்சைக்குத் தயாராகி, தோற்றி, வெற்றியோ, தோல்வியோ கண்ட மாணவர்களின் நிலையை இவர்களில் எவரும் கவனத்திற் கொள்ளத் தயாராக இல்லை.

பிள்ளைகளின் உடல்சார், உளம்சார், மனவெழுச்சிசார், சமூகம் சார் அம்சங்களுக்கு எவ்வித முக்கியத்து மும் வழங்காது, அறிவுத் திணிப்பையும், தர்க்க ரீதியாக அல்லாமல் நெட்டுருச் செய்து ஞாபகத்தில் வைத்திருந்து ஒப்பவித்தலையும் உத்திகளாகக் கொண்டதே இப் பரீட்சையின் வெற்றிக்கான வழி என்கிற ரீதியில் சகல தரப்பினரும் செயற்படுகின்றனர். கல்வி வலயத்தினையும் கல்விப் பணிப்பாளர் களையும், பாடசாலைகளையும் தரம் 5க்கு கற்பிக்கும் ஆசிரியர்களையும், தனியார் கல்வி நிலையங்களின் வினைத்திறனையும் அளக்கும் தரச்சுட்டியாக இப் பரீட்சை மாறி, தடம்புரண்டு போய்விட்டது. இந்த நிலைமைக்குப் பிரதான பொறுப் பாளிகள் பெற்றோர்களே என்றும் உயர்தர மற்றும் மத்தியதர வர்க்கப் பெற்றோர்களின் வாழ்வியல் மதிப்பீடு களையும் சமூக மதிப்புக்களையும், அபிலாசைகளையும், அந்தஸ்தையும் வெளிப்படுத்துவதாக இப் பரீட்சையின் வெற்றி மாறிப்போனமையே இத் தடம் புரள்வுக்குக் காரணம் எனவும் விமர்சிக்கப்படுகின்றது.

இப் பரீட்சை தொடர்பான மன்னார் வலய நிலையை நோக்கும் போது மன்னார் கல்வி வலயத்தில் பிரசித்தி பெற்ற பாடசாலைகள் என்ற வகையில் மூன்று தேசியப் பாடசாலைகள் உள்ளன. இவை மூன்றும் மன்னார் நகரத்திலேயே அமைந்துள்ளன. இம் மூன்று பாடசாலைகளிலும் தரம் ஆறுக்கோ அல்லது வேறு எந்தத் தரங்களுக்குமோ பிள்ளைகளை அனுமதிப்பதில் பாரிய சவால்கள் எதுவுமில்லை. குறித்த வகுப்பில் எந்தப் பிரிவில் பிள்ளையை அனுமதிக்கலாம் என்பதைத் தீர்மானிக் கையில் வேண்டுமானால் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைப் புள்ளிகள் செல்வாக்குக் காணப்படலாம்.

மன்னாரில் பிரசித்தி பெற்ற தேசியப் பாடசாலைகளின் மாணவர் அனுமதி நிலை இவ்வாறு இருக்கும் போது, வலயத்தின் ஏனைய பாடசாலை களில் பிள்ளைகளை அனுமதிப்பதில் எவ்வித பிரச்சினையும் இருக்கா தென்பது தெளிவாகும். மேலும் அநேகப் பிள்ளைகள் (மாவட்டத்தில் முதல் பத்து இடங்களைப் பெற்றவர்கள் உட்பட) தாம் ஐந்தாம் தரம் கற்ற பாடசாலை யிலேயே தொடர்ந்தும் கற்று வருவதும் இங்கு பொதுப் போக்காகவுள்ளது. எனவே தமது பிள்ளைகளை பிரசித்தி பெற்ற பாடசாலைகளில் சேர்த்து விடுவதற்குத் துணையாகவுள்ள காரணியாக ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைப் புள்ளிகளைப் பெற்றோர் கருத வேண்டிய அவசியம் இங்கு இல்லை.

அடுத்ததாக, உதவிப் பணம் குறித்து நோக்குவோமாயின், குறித்த பரீட்சையில் சித்தியடைய வேண்டும், மிக உயர்ந்த புள்ளிகளைப் பெற

வேண்டும், மாவட்டத்தில் முதல் நிலைகளில் வரவேண்டும் என எதிர்பார்க்கும் பெற்றோர்களில் அநேகர் அரச உத்தியோகத்தர்களாகவும், வியாபாரத்தில் கணிசமான முன்னேற்றம் கண்ட முதலாளிகளாகவும், அரச சார்பற்ற நிறுவனங்களில் அதிக சம்பளத்தில் பணிபுரிபவர்களாகவுமே உள்ளனர். இதில் முதல் பிரிவினரின் பிள்ளைகளுக்கு உதவு தொகை கிடைக்காது. மற்றவர்களுக்கு உதவு தொகை தேவையற்றது. வறிய பிள்ளைகளின் பெற்றோர் உதவு தொகை குறித்து சரியான விளக்கம் பெறாதவர்களாக உள்ளனர். வெட்டுப் புள்ளிகளுக்கு மேலாகப் பெற்று உதவு தொகை பெறுகின்ற வறிய பெற்றோரின் பிள்ளைகளில் அநேகமானோர் க.பொ.த. சாதாரண தரத்துடன் அல்லது உயர்தரத்துடன் கல்வியை நிறுத்தி விட்டு, கூலித்தொழில் அல்லது சிறு வியாபாரம் செய்பவர்களாக உள்ளனர்.

மூன்றாவது விடயமாக, நடுத்தர வர்க்கப் பெற்றோர்கள் மற்றும் வறிய பெற்றோரில் சிலர் இப் பரீட்சையினால் கவரப்பட்டு, தமது இயலுமைக்கும் அதிகமான வகையில் நேரம் மற்றும் பணத்தைச் செலவு செய்கிறார்கள். பரீட்சை முடிவுகள் வெளியான பின்னர் தம் பிள்ளை வெட்டுப்புள்ளிக்குக் குறைவாக, ஆனால் நூறுக்கும் மேல் புள்ளிகளைப் பெற்றிருந்தாலும் கூட தோல்வி ஏற்பட்டு விட்டதாய்த் துவண்டுபோய் விடுகிறார்கள்.

இந்நிலையை கவனத்தில் கொண்டு, வெட்டுப் புள்ளிகளுக்குக் குறைவாகப் பெற்று, தோல்வியடைந்ததாகக் கருதுகின்ற மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் மன அழுத்தங்களைச் சற்றுக் குறைக்கும் முகமாக, இப் பரீட்சையின் இரு பத்திரங்களிலும் தலா *35* புள்ளிகள் அல்லது அதற்கும் கூடுதலாகப் பெற்று மொத்தம் *70* புள்ளிகள் அல்லது அதற்கும் அதிகமாகப் பெற்றவர்களுக்குக் குறித்த மாவட்டத்தின் வெட்டுப் புள்ளியிலும் குறைவாக இருந்தாலும் கூட குறித்த பரீட்சையில் சித்தியடைந்ததாகச் சான்றிதழ் வழங்கும் முறை கடந்த இரு ஆண்டுகளாகப் பரீட்சைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையும் இங்கு குறிப்பிடத் தக்கது.

இலங்கையில் பெரும்பாலும் அரசின் கட்டுப்பாட்டிலேயே பாடசாலைகள் உள்ள போதிலும் எல்லாப் பாடசாலைகளிலும் வளங்கள் சமமாகப் பகிரப்பட்டிருக்கவில்லை. நகரப் புற பாடசாலைகள் அதிக வளங்களைக் கொண்ட செல்வப் பாடசாலைகளாவும் கிராமப்புறப் பாடசாலைகள் வசதி குறைந்த வறுமைப் பாடசாலைகளாகவும் காணப்படுகின்ற நிலை இலங்கை முழுவதற்கும் பொதுவானது. இந் நிலையில் கிராமப் புறத்தில் பயிலும் வறுமை நிலையில் வாழும் மாணவர்களுக்கு நகரப் புறப்பாடசாலைகளில் கற்கும் வாய்ப்பை வழங்குவதை நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையானது இன்று திசைமாறி பெற்றோர்களின் 'கௌரவம்' காக்கும், அந்தஸ்த்தை வெளிக்காட்டும் ஒரு பலப்பரீட்சையாக மாற்றம் பெற்று விட்டது.

மன்னார் கல்வி வலயத்தில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்விலிருந்து பெற்றோர் மனப்பாங்கு சார்பாக

பின்வரும் அம்சங்கள் வெளிக் கொணரப்பட்டன.

1. ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் மிக உயர்ந்த புள்ளிகளைத் பெற்றுவிட வேண்டும் எனப் பெற்றோர்கள் அதிகம் எதிர்பார்க்கின்றனர்.

2. பாடசாலை தொடக்கம் மாவட்டம் வரையாக தமது பிள்ளைகள் பாராட்டப்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

3. ஐந்தாந் தரப் புலமைப் பரிசில் பரீட்சையின் நோக்கங்களைவிட பெற்றோர்களின் எதிர்பார்ப்புகள் அதிகமாகவுள்ளன.

4. தம் பிள்ளைகள் மிக உயர்ந்த புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதானது தமது சமூக அந்தஸ்த்தை உயர்த்திவிடுவதாக பெற்றோர் உணர்கின்றனர்.

5. தம் பிள்ளைகளின் பரீட்சைத் தோல்வியானது தமக்கு ஏற்பட்ட தோல்வியாக பெற்றோர் கருதுகின்றனர்.

6. சக மாணவர்களைவிட தம் பிள்ளை உயர்வான புள்ளிகளைப் பெறுவதுதான் தமக்கு கௌரவம் எனப் பெற்றோர் கருதுகின்றனர்.

7. பிள்ளையின் இயலுமைக்கு அதிகமான சுமையாக இந்தப் பரீட்சை இருப்பதை பெற்றோர் ஏற்றுக்கொள்ளும் அதேவேளை அதில் வெற்றி கண்டேயாக வேண்டும் என்பதிலும் முனைப்பாக உள்ளனர்.

8. பெற்றோர்களின் அதிக எதிர் பார்ப்பானது ஆசிரியர்களுக்கும் அழுத்தத்தைக் கொடுக்கிறது.

9. ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பாக மாணவர்களுக்கு அழுத்தம் தருவதில் பெற்றோரின் வாழும் சூழல், உத்தியோகம், கல்வியறிவு என்பன அதிக வேறுபாடுகளைக் காட்டுவதில்லை.

10. பிற பொதுப் பரீட்சைகளைவிட ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் பிள்ளைகள் சார்பாகப் பெற்றோர் அதீதமாகச் செயற்படுகின்றனர்.

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பாக பெருமளவிலான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அவை தொடர்பான முன்மொழிவுகளும் முடிவுகளும் தொடர்ந்தும் வெளியிடப் பட்ட வண்ணமே உள்ளன. எடுத்துக்காட்டுக்களாக சிலவற்றை நோக்கலாம்.

📖 ஒரு போட்டிப் பரீட்சையாக இது மாறிவிட்டது. இப் பரீட்சை எடுக்கும் சிறார்கள் மனத்தாக்கங்களுக்கும் மன அழுத்தங்களுக்கும் உள்ளாக்கப்படுவதால் பிள்ளைப் பராயத்தின் இன்பத்தை இழந்த நிலை பெரும்பாலும் காணப் படுவதுடன் இவர்களது உள நலன் பாதிப்படைகிறது. பெற்றார், ஆசிரியர், பாடசாலைகளின் அபிலா

சைகளை நிறைவேற்ற இச் சிறார்கள் வதைக்கப்படும் பல நிகழ்வுகள் தொடர்பாக செய்திகள் தொடர்ந்து வெளியாகி வருகின்றன.

- மாணவர்களின் உளவயதிற்கும் அறிவு நிலைக்கும் ஒவ்வாத வகையில் மிக உயர் நிலையில் அமைந்த பொது விவேகம், பொது உளச்சார்பை பரீட்சிக்கும் வகையில் வினாத்தாள் அமைந்திருந்தது

- பல பெற்றோர்கள் தமது பிள்ளைகள் சரியாகப் படிக்காததால்தான் விடையளிக்க முடியாமலிருந்தது என தம் பிள்ளைகளுக்குத் தண்டனைகளையும் வழங்கியுள்ளார்கள். பரீட்சைக்கு முன்னர் பெற்றார்களும் பொது நிறுவனங்களும் தனியார்களும் இவர்களைப் படுத்தும்பாடு பெரும்பாடாக உள்ளது. அதிகாலையிலேயே நித்திரையால் எழுப்பிவிடல், தொடர்ந்து பாடசாலைச் சீருடையுடன் ரியூசன், பின் பாடசாலை, பாடசாலை முடிந்ததும் பாடசாலையிலேயே விசேட வகுப்பு, பின் ரியூசன், மாலை 6 மணிக்குப்பின் பாடசாலைச் சீருடையுடன் வீட்டிற்கு வருதல், காலையிலிருந்து 12 மணித்தியாலங்களுக்கு மேல் கடினமாகப் படித்துப் பின் வீட்டிலும் இரவு பத்து மணிவரை பெற்றார் வழிகாட்டலில் கற்றல். இந் நிலைமையைப் பெரும்பாலான மத்தியதரக் குடும்பங்களில் காணலாம். நாளாந்தம் இச் சிறார்கள் வதைக்கப்படுவதால் அவர்களது உடல் நிலையும் மன நிலையும் பெரிதும் பாதிக்கப்படுகின்றது

- "இப் பரீட்சைகளில் குறைவான புள்ளிகளைப் பெறும் மாணவர்கள் மண்டபங்களில் இருந்து வெளியே வரும்போதே பெற்றோர் வாசலில் பரீட்சைப் புள்ளிகளைக் கேட்டு தலையில் குட்டுவதையும் அடிப்பதையும் நேரடியாகக் காண முடியும்.

- கற்ற பாடசாலைகளில் மாணவர்களிடமிருந்து பல அன்பளிப்புக்கள் பெறப்பட்டு, மாணவர்களின் பெற்றோர்களால் பாராட்டுப் பெற வைக்கின்ற முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் குறைவான புள்ளிகள் பெற்ற மாணவர்களையும் இணைத்துப் பாடசாலைக்குப் பெயரைப் பெற்றுத் தந்த மாணவர்களைப் பாடசாலைச் சமுதாயமே பாராட்ட வேண்டும். அதை விடுத்து பல மாதங்களாக ரியூசன் என்றும் புத்த

கங்கள், சஞ்சிகைகள், கருத்தரங்குகள் என்கிற பல்வேறு கோணத்தில் பணத்தை பிடிங்கிய நிலையில் மீண்டும் பல ஆயிரங்கள் மாணவர்களின் பெற்றோர்கள் மூலமாக கறக்கப்பட்டு விழா எடுப்பது சிலருக்கு சந்தோசமாக இருக்கிறது

- இப் பரீட்சைக்காக பிள்ளைகள் போட்டியிடுவதைவிட பெற்றோர்களே போட்டி போடுகின்ற நிலை காணப்படுகின்றது. இப் பரீட்சை பிள்ளைகளுக்கான பரீட்சை என்பதைவிட பெற்றோர்களின் பரீட்சை என்றே கூறும் அளவிற்கு பெற்றோர்கள் அதிக ஈடுபாடு காட்டுவதுடன் பிள்ளைகளுக்கு அதிகளவு அழுத்தங்களையும் கொடுக்கின்றார்கள்.

- பெற்றோர்களும் போட்டி போட்டுக்கொண்டு எங்கெல்லாம் புலமைப் பரிசில் பரீட்சைக்குரிய வகுப்புக்கள் நடக்கின்றதோ அங்கெல்லாம் அழைத்துச் செல்கின்றனர். மற்றவர்களின் பிள்ளைகளைவிட தங்கள் பிள்ளைகள் கூடுதலான புள்ளிகளைப் பெற வேண்டும் என்பதில் அதிக ஆர்வம் காட்டுகின்றார்கள். அதற்காக இரவு, பகல் பாராது ஓடிக் கொண்டேயிருக்கின்றார்கள்.

- குழந்தைகளின் விருப்பு வெறுப்புக்கள் ஆசைகள் சுதந்திரம் விளையாட்டுக்கள் என்பன புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் வரைக்கும் பறிக்கப்பட்டு விடுகிறது. அவர்களுக்கு பயிற்சிப் புத்தகங்கள், மாதிரி வினாத்தாள்கள், வகுப்புக்களுக்கு ஓடுதல், பெற்றோரின் கண்டிப்புகள் என்பவையே வாழ்க்கையாகிவிடுகிறது.

எனவே எதிர்காலத்தில் பெற்றோர்கள் இப் பரீட்சை தொடர்பாக பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். இதன் மூலம் பிள்ளைகளின் ஒப்பற்றதும், திரும்பக் கிடைக்காததுமான இனிமையான நிகழ்காலத்தை, பிள்ளைகளின் வயதிற்கேயுரிய இனிமையான நினைவுகளை, நிகழ்வுகளைத் தட்டிப் பறித்து, வேதனையை உண்டாக்குகின்ற பெற்றோர்களாக நாம் மாறாமல் இருக்கலாம்.

- தமது பிள்ளைகள் மிக அதிகப் புள்ளிகளைப் பெற்றுவிட வேண்டும் என்ற பெற்றோரின் மனப்பாங்கு மாற்றப்பட வேண்டும்.

- தமது பிள்ளைகள் பாராட்டுப் பெற வேண்டும் என்பதைவிட அப் பிள்ளைகளுக்காகப் பிரயத்தனப்பட்ட தாங்கள் பாராட்டுப் பெற வேண்டும் என்ற மனப்பாங்கு மாற்றம் பெற வேண்டும்.

- பரீட்சையின் நோக்கங்களை அறிந்து அதற்கேற்ப தம் பிள்ளைகளை பெற்றோர் வழிநடத்த வேண்டும்.

- தமது சமூக அந்தஸ்த்து, கௌரவம் என்பவற்றை இப் பரீட்சையின் பெறுபேறுகளோடு ஒப்பிட்டுப் பார்ப்பதை பெற்றோர் கைவிட வேண்டும்.

- இப் பரீட்சையில் ஏற்படுகின்ற வெற்றி மற்றும் தோல்விகளை ஏற்கச் செய்கின்ற மனப்பாங்கை பெற்றோர் பெற்று தம் பிள்ளைகளுக்கும் ஊட்ட வேண்டும்.

- பிள்ளைகளின் தனியாள் வேறுபாடுகளைக் கவனத்தில் கொண்டு தம் பிள்ளைகளை அறிந்து அதற்கேற்ப வழிநடத்த வேண்டும். பிற பிள்ளைகளோடு ஒப்பிட்டுப் பேசுவதை நிறுத்த வேண்டும்.

- பிள்ளையின் இயலுமை, இயலாமை அறிந்து செயற்பட வேண்டும். தங்கள் விருப்பங்களைப் பெற்றோர் பிள்ளை மீது திணிக்கக் கூடாது.

- ஆசிரியர்களுக்கு அதிக அழுத் தம் கொடுக்கும் வகையில் அமைகின்ற பெற்றோர் நடத்தைக்குக் காரணமான மனப்பாங்கு குறித்து சிந்திக்க வேண்டும். அவ்வாறான அழுத்தம் தம் பிள்ளைகளைப் பாதிக்கும் என்பதை உணர பெற்றோர் உணர வேண்டும்.

- இப்பரீட்சையின் உண்மையான பயனாளிகளுக்கு இதனால் கிடைக்கின்ற சலுகை சென்றடைவதற்கு ஏனைய பெற்றோர் வழிவிட வேண்டும்.

- தொடர்ந்தும் இப் பரீட்சை தொடர்பாக பிள்ளைகளுக்கு அழுத்தம் கொடுக்கின்ற நிலையில் இருந்து பெற்றோர் விடுபட்டு, பிள்ளைகளின் உளவயது நிலையைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும்.

## நிறைவாக...

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையின் நோக்கானது பெரும் பாலும் அதன் பாதையில் இருந்து விலகிச் சென்றுவிட்டது என்றுதான் கூற வேண்டும். இப் பரீட்சையின் பெறுபேற்றினை அதாவது பிள்ளை பெறுகின்ற உயர் புள்ளியை பெற்றோர் தமக்கான கௌரவமாக, தமது தகுதி நிலையின் குறிகாட்டியாக நினைத்துச் செயற்படத் தொடங்கியதே இதற்கான பிரதான காரணமாகவுள்ளது. இதன் பின்னணியிலேயே பாடசாலைகள், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், அச்சுப் பதிப்பு நிறுவனங்கள், ஏனைய அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் இதற்கு ஊக்கமளித்து வருகின்றன. ஆனால் இவையெல்லாம் அந்தப் பிஞ்சு உள்ளங்களில் பெருஞ் சுமையை ஏற்றி வைப்பதை ஏனோ சிந்திப்பதில்லை.

உளவியலாளர்களும், கல்வியிய லாளர்களும் இந்தப் பரீட்சையின்

போக்குப் பற்றிச் சிந்தித்து, பாதகமான நிலையினை ஊடகங்கள் ஊடாக வெளிப்படுத்திக் கொண்டிருந்தாலுங் கூட நிலைமை மாறவில்லை. இவ்வாறு தொடர்ச்சியாக இப் பரீட்சை தொடர்பான எதிர்பார்ப்புகள் அதிகமாகி, பிள்ளைகள் தொடர்ந்தும் உடல், உள ரீதியாக பாதிக்கப்படுவதற்கு பெற்றோரின் மனப்பாங்குதான் பிரதான காரணம் என்பதை இவ் ஆய்வு வெளிப்படுத்தி நிற்கின்றது. அத்துடன் எதிர்காலத்தில் பெற்றோரின் இத்தகைய மனப்பாங்கு மாற வேண்டும் எனவும் விதப்புரை செய்கிறது.

## உசாத்துணைகள்:

### உசாத்துணை நூல்கள்


சின்னத்தம்பி, க. (2011) கல்வி ஆய்வியல், கொழும்பு, சேமமடு பதிப்பகம்.

சின்னத்தம்பி, க. (2010) கல்வியில் அளவீடும் மதிப்பீடும், கொழும்பு, சேமமடு பதிப்பகம்.

சின்னத்தம்பி, க., சுவர்ணராஜா, க. (2007) அறிகைத் தொழிற்பாடுகளும் ஆசிரியரும், வவுனியா, குரு வெளியீடு

ஜெயராசா, சபா. (2006) ஆய்வு முறையியல், யாழ்ப்பாணம், புக் லேப்.

இராசநாயகம், ஜெ. (2010) கமுதி

கினிகே, ஐ.எல். (2006) புதிய கலைத்திட்ட நோக்கும் பாடசாலைக் கல்வியில் எதிர்பார்க்கப்படும் மாற்றமும், கொழும்பு, தேசிய கல்வி நிறுவகம்.


### உசாவப்பட்ட பருவ வெளியீடுகள்


தனபாலன், பா. (2009 ஏப்பிரல்) அகவிழி.

ஜெயராசா, சபா. (2008 நவம்பர்) அகவிழி.

மோகனதாஸ், தெ. (2008 டிசம்பர்) அகவிழி,

இராஜேஸ்வரன், பரா. (2008 ஒக்டோபர்) அகவிழி

தனபாலன், பா. (2009 ஏப்பிரல்) அகவிழி

கனகலிங்கம்; க.மு. (2009 ஜனவரி) அகவிழி

மன்சூர், எஸ்.எல்., (2008 ஏப்ரல்) அகவிழி

. மிதிலா. சி., கதம்பம், வீரகேசரி வார வெளியீடு, 16.09.2012 ●


**கப்பல் மூழ்கிய பின்புதான் அதை எப்படிக் காப்பாற்றியிருக்கலாம் என்று ஒவ்வொருவருக்கும் தெரியும்**

**– இத்தாலிய பழமொழி –**

# இரண்டாந்தேசிய மொழியாக சிங்கள, தமிழ் மொழியைக் கற்பதிலும், கற்பிப்பதிலும், பயன்படுத்தக்கூடிய நுட்பங்களும், முறைகளும்

**திருமதி. S. H. இஸ்மா ஹாதியா**
***மன் / எருக்கலம்பிட்டி மகளிர் ம.வி. மன்னார்.***

மொழியெனப்படுவது பேசப் படுவதும், எழுதப்படுவதாகும். இந்த வகையில் சிங்கள மொழியில் பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு என்ற இருவகை வழக்கு காணப்படுகின்றது. மொழியின் பிரதான தொழிற்பாடுகளுள் ஒன்று பண்பாட்டு பரிவர்த்தனைக் காவியாக இயங்குவதாகும். பல இனங்கள் கொண்ட சமூகச் சூழலில் இனங்களுக் கிடையிலான புரிந்துணர்வையும் சமரச சமாதானப் போக்கையும் ஏற்படுத்து வதற்கு ஒவ்வொருவரும் ஏனைய சமூகத்தினரின் மொழியில் ஓரளவாவது புலமை பெற்றிருப்பது அவசியமாகும்.

நமது நாடான இலங்கையின் வரலாற்றை எடுத்து நோக்கும்போது இனங்களுக்கிடையே பிரச்சினைகள், மோதல்கள் இடம்பெற்றதில் மொழியின் செல்வாக்கு மேலோங்கியிருந்த நிலைமைகளை நாம் காணக்கூடியதை அறிந்து கொண்டோம். தனிச் சிங்கள மேலாதிக்கத்தால் இன்று எம்மத்தியில் நிலவுகின்ற புரிந்துணர்வின்மை, ஒருவரை ஒருவர் சந்தேகப்படுகின்றமை என்பன எமது நாட்டின் பல்வேறு சமூக, பொருளாதார மட்டங்களில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான சூழ்நிலைகளில் இருந்து விடுதலை பெற வேண்டுமானால் இலங்கையில் வாழ்கின்ற ஒவ்வொரு குடிமகனும் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருப்பது அவசியமாகின்றது.

இரண்டாந்தேசிய மொழியைக் கற்பதனால் எமது அறிவை வளர்த்துக் கொள்ள முடியும். பல்வேறான வேலைவாய்ப்புக்களைப் பெற முடியும். பதவி உயர்வுகளை பெற்றிட முடியும். பல்வேறான பரீட்சைகளுக்கு தோற்ற முடியும். இரண்டாந் தேசிய மொழியை அறியாதவர்களுக்கு கற்றுக் கொடுக்க முடியும். அதனால் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் சேவை செய்ய முடியும். இரண்டாம் மொழியைக் கற்றுக் கொண்டு கற்றுக் கொடுப்பதன் மூலமும், வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். அதனால் வேற்று மொழிகளில் உள்ள கதை, கட்டுரை, கவிதை, புத்தகங்கள் போன்றவற்றை மொழிபெயர்ப்புச் செய்ய முடியும்.

இன்று காலந்தாழ்த்தியேனும் இதன் முக்கியத்துவத்தை உணர்ந் துள்ள அரசு பெரும்பான்மை மக்களான சிங்கள மக்களுக்கு தமிழ்மொழியையும், தமிழ் மக்களுக்கு சிங்கள மொழியையும்

கற்பிக்கும் செயற்றிட்டமொன்றை நாடு முழுவதும் அமுல் நடாத்தி வருகின்றது. இக்கட்டுரையின் நோக்கமே இரண்டாந் தேசிய மொழியை கற்பதிலும், கற்பிப்பதிலும் பயன்படுத்தக்கூடிய சில நுட்பங்களையும் முறைகளையும் ஆராய்வதே ஆகும்.

முதலாம் மொழியை (தாய் மொழி) கற்பிப்பதற்கு பயன்படுத்தும் சகல முறைகளையும், நுட்பங்களையும் இரண்டாந்தேசிய மொழிக்கு பயன் படுத்துவது பொருத்தமுடையதாக அமையாது. காரணம் கற்கின்ற மாணவர்கள் அடிப்படையில் அடிமட்ட நிலையில் இருப்பதால் தமது தாய் மொழியில் பரிச்சயம் பெற்ற தமது சிந்தனை, செயற்பாடு அனைத்திலும் தமது தாய்மொழியின் ஆதிக்கத்துக்கு உட்பட்டுள்ள கற்போனுக்கு இரண்டாம் தேசிய மொழியை கற்பிக்க முனையும் போது நாம் விசேட வழிமுறை நுட்பங்கள் பலவற்றை பின்பற்ற வேண்டியேற்படும். இந்நிலையில் இரண்டாந்தேசிய மொழியாக பல மொழிகளை கற்பிக்கின்ற அனுபவம் மிக்க நிறுவனமாக இந்தியாவில் மைசூரில் அமைந்துள்ள இந்திய மொழிகளின் நடுவன் மையம் (Central Institute of Indian Leage (CIIL)) இதற்காக பல்வேறு விசேட வழிமுறைகளைப் பின்பற்றுகின்றது. இவற்றுள் பல்வேறான வழிமுறைகள் எமது நாட்டுக்கு பொருந்தக் கூடியதாக அமைவதைக் காணலாம்.

பின்வரும் விசேட வழிமுறைகள் இரண்டாந்தேசிய மொழியொன்றைக் கற்பிக்கும்போது கற்பித்தலை இலகு படுத்துவதற்கு உறுதுணையாக அமையும்.

எழுத்துக்களை அறிமுகப் படுத்துவற்கு விசேட முறையான ஒத்தவடிவ எழுத்து அமைப்பு முறையை (Shape similarity Method) பயன் படுத்துதல்.

இரண்டு மொழிக்கும் அதாவது கற்போனின் மொழிக்கும், கற்கின்ற மொழிக்கும், இடையிலான ஒத்த சொற்களை அறிமுகப்படுத்துதல். உதாரணம் அம்மா, அக்கா, அன்னாசி சொற்களஞ்சிய விருத்திக்காக நடைமுறைப் பாவனையில் உள்ள சொற்களைத் திரட்டி வழங்குதல். (Vocabulary Development)

மிக எளிய பாடல்கள், உரையாடல்கள், கதைகள், பழ மொழிகள் என்பவற்றை தேர்வு செய்து பயன்படுத்துதல்.

சொற்களை சரியாக இனங் கண்டு உச்சரிப்பதற்காகக சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒலிப்புச் சார் முறையை பின்பற்றுதல்.

மிக எளிமையான சொற்களை மீண்டும், மீண்டும் உச்சரித்தல்.

கற்போனின் தாய் மொழியை அவசியமான சந்தர்ப்பங்களில் பொருத்த மாகப் பயன்படுத்திக் கற்பித்தல். (Bilingual Method)

ஒரு விடயப்பகுதியைக் கற்பித்த தன் பின்னர் பல வகையான கணிப்பீட்டு – மதிப்பீட்டுப் பயிற்சிகளை வழங்குதல். (ஆகக் குறைந்தது ஒரு விடயத்திற்கு 10ற்கு குறையாத மதிப்பீடுகளை மேற்கொள்ளல்)

எழுத்துக்களைச் சரியாக உச்சரிக்க நாடிப்பயிற்சி நா நெகிழ் பயிற்சி என்பவற்றை வழங்குதல்.

இலக்கணப் பகுதிகளை சுவை மிகு பாடப்பகுதிகள் ஊடாக மிக எளிமையான முறையில் அறிமுகம் செய்தல்.

இரண்டாம் மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர் தாய்மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர் என்ற நிலையிலிருந்து கீழ் இறங்கி கற்போனின் நிலையை உணர்ந்து இரண்டாம் மொழியை கற்பிக்கும் ஆசிரியர் என்ற வகிபாகத்தை ஏற்க வேண்டும்.

மாணவர்கள் விளங்கிக் கற்பதற்கு எளிய பயிற்சிகள் பலவற்றை வடிவமைத்து சுயமாக கற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களை வழங்குதல்.

எழுத்து மொழிக்கும் பேச்சு மொழிக்கும், இடையிலான வேறுபாட்டை உணரச்செய்து மிக எளிய முறையில் இவற்றை பயன்படுத்துவதற்கான வழிமுறைகளை திட்டமிட்டு வழங்க வேண்டும். (பேச்சு மொழி பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபடுவது உணர்த்தப்பட வேண்டும்)

சிங்கள மொழிக்கும், தமிழ் மொழிக்கும் இடையிலான வேறுபாடான அம்சங்களை இனங்காட்டி உணரச் செய்தல் இவற்றுக்காக எளிய பயிற்சிகளை உருவாக்கி வழங்க வேண்டும்.

இரண்டாம் மொழியைக் கற்கும் மாணவருக்கு எப்போதும் அவனது தாய்மொழி இடைஞ்சலை அல்லது தடையை ஏற்படுத்தும். இத்தகைய சந்தர்ப்பங்களை இனங்கண்டு பொருத்தமான செயற்பாடுகள் ஊடாகத் தடையை படிப்படியாக அகற்ற வேண்டும்.

சிங்கள மாணவர் மத்தியில் தமிழ் மொழிக்கற்றல் தொடர்பான நேர்மனப் பாங்கை ஏற்படுத்த வேண்டும். தமிழ் மாணவர்கள் மத்தியில் சிங்கள மொழி கற்றல் தொடர்பான நேர்மனப்பாங்கை ஏற்படுத்த வேண்டும்.

**இரண்டாந் தேசிய மொழியைக் கற்பதற்குப் பயன்படுத்தக்கூடிய முறைகள்.**

ஒத்த அமைப்பு எழுத்து முறை
(Shape & Similarity Method)

சமமான இலக்கண விதிகளைப் பிரயோகித்தல்
(Grammar Transilation Method)

ஒலி நாடக்களைப் பயன்படுத்தல்..
(Audio Lingual Method)

சந்தர்பத்திற்கு ஏற்ற முறைகளைப் பயன்படுத்தல்
(Situational Method)

இருமொழிப் பிரயோகம்
(Bilingual Method)

தொடர்பாடலை மையமாகக் கொண்டு கற்பித்தல்
(Communication Method)

இயற்கை முறைகளைப் பயன்படுத்துதல்.
(Nature method)

பல்வகை முறைகளைப் பயன்படுத்துதல்.
(Electic Method)

கற்போனின் உள நிலைக்கு ஏற்ப கற்பித்தல்.
(Psycologial Method)

வாசிப்பு அடிப்படையிலான முறை.
(Reading Method)

அலகு அடிப்படையிலான முறை
(Unit Method)

பல்வேறுபட்டவர்களின் பேச்சு, பாவனை முறையை கற்பித்தல்.
(Mimicry Memorization Method)

மேற்கூறப்பட்ட விடயங்களை கருத்திற்கொண்டு இரண்டாந்தேசிய மொழியைக் கற்பிப்பதிலும், கற்பிலும் பயன்படுத்தக்கூடிய நுட்பங்கள் பலவற்றையும், முறைகள் பலவற்றையும் பயன்படுத்தி கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வோமானால் இரண்டாந்தேசிய மொழியைக் கற்று நாம் பல்வேறு துறைகளில் முன்னேறுவோம் என்பதில் எந்தவொரு ஐயமுமில்லை. ●

# அகரம் தொடக்கிய சிகரங்கள்

அறிவுத் தருவின் வேராகி
ஆயிரமாயிரம் கிளைபரப்பி
இற்றைப்படுத்தலின் ஊடே
ஈடிணையில்லாக் குருவாகி
உயர்நோக்கில் மாணவரை
ஊக்கமுடன் நகர்த்தி
எவரையும் ஏற்றிவிடும்
ஏணியாய் நின்றுழைத்து
ஐயங்கள் களைந்து
ஒழுக்கம் போதித்து
ஓயாமல் இயங்கி
ஔடதமாம் கல்வியை
முக்கனிச் சாறாக்கி
மங்காச் சுவையுடன்
மெச்சிடும் வண்ணம்
பிஞ்சு நெஞ்சங்களில்
ஊட்டும் விதத்தில் ஊட்டி,
எண்ணும் எழுத்தும்
எத்தனையோ வேற்றிவும்
சிந்தனையினுள் செலுத்தி,
முப்பொழுதும் பயனளிக்கும்
எம்மதமும் சம்மதிக்கும்
பொய்யா மொழிக்குறளின்
பூர்த்திமிக்க புகழுரையை
நல்ல நடத்தையினால்
பவ்வியமாய்ப் புரியவைத்து
வாழ்வின் தத்துவத்தை
தெள்ளியதாய்த் தெரியவைக்கும்
கற்பித்தல் நாயகரே
என்னவென்பேன் உம்பணியை!

மன்னூரான் ஷிஹார்
ஆசிரியர்

# தமிழ்மொழி பாட ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்கள்

**திருமதி. T.C. சகிலா பாய்வா** B.A. Hons. PGDE (Merit) M.Ed.
***மன்/ புனித லூசியா மகா வித்தியாலயம், பள்ளிமுனை.***

எட்டுத்திக்கும் தமிழ் பரப்புவோம் என்ற மகாகவியின் வார்த்தைகள் இன்று நிஜமாகிக் கொண்டிருக்கின்றன என்பதையிட்டு தமிழர் நாம் தலைநிமிர்ந்து நிற்கின்றோம். இப்பெருமைக்கு காரணமான தமிழ் ஆர்வலர்கள், அறிஞர்கள், அருங்கொடையாளர்கள், அர்ப்பணிப்பாளர்கள் என அனைவரையும் தலை வணங்கி வாழ்த்துவதில் நாம் சந்தோஷமடைகின்றோம்.

சிறப்புமிகு செம்மொழியாம் எம் தமிழ்மொழியின் தனித்துவங்கள் தழைத்தோங்கி வளர்வதில் எம் ஒவ்வொருவருக்கும் பல கடமைகளும் பொறுப்புக்களும் உள்ளன. இவைபற்றி இங்கு முழுமையாக முன்வைக்க முயல்வது முடியாத காரியம். எனவே, பாடசாலையில் தமிழ் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் மட்டில் நாம் கொள்ளவேண்டிய கரிசனைகள் கடப்பாடுகள் பற்றி மட்டும் இங்கு நோக்கலாம்.

## தமிழ்மொழி பாட ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்கள்

க.பொ.த. சாதாரண வகுப்பில் மாணவர்கள் கட்டாய பாடமாகவும், உயர்தரத்தில் குறிப்பிட்ட பிரிவுக்குரிய பாடமாகவும் (மாணவர்கள்) தமிழ் மொழியும் இலக்கியமும் உள்ளது. இப்பாடத்தின் அடைவு மட்டங்களை அதிகரிப்பதில் பங்களிப்புச் செய்பவர்களாகப் பல தரத்தினர் இருந்த போதும்கூட மிகச்சிறப்பான பொறுப்பைக் கொண்டவர்களாக தமிழ் கற்பிக்கும் ஆசான்களே விளங்குகின்றனர் என்பதில் ஐயமில்லை. இவர்கள் தத்தம் வகுப்பு மாணவர்களைத் தயார் செய்து அனுப்புவதிலும் அவர்கள் பெறுகின்ற பெறுபேறுகளில் அதிகரிப்பை ஏற்படுத்துவதிலும் பல சவால்களை எதிர்கொள்கின்றனர்.

பொதுவாக தமிழறிவில் தற்போதைய மாணவர்கள் உரிய தரத்தில் (பொதுவான அறிவு) இல்லை என்ற குற்றச்சாட்டை கேட்கக் கூடியதாக உள்ளது. அது சரியா, தவறா என்பது பற்றி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமல்ல (மன்னாரைப் பொறுத்தவரை மொழிப்பாட அடைவு மட்டம் முன்னிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது) தமிழ்ப்பாடத்தைக் கற்கும் மாணவர்களுக்கு அப்பாடத்தில் ஆர்வத்தை அதிகரிக்கவும், அறிவைப் பெருக்கவும் பொறுப்பானவர்கள்

எதிர்நோக்கும் சவால்களை முன்வைப்பதும், அவற்றை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கான வழிமுறைகளை எனது கருத்தாக முன்வைப்பதுமே கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது. இந்நோக்கம் சார்ந்த விடயங்கள் மிகமிகச் சுருக்கமாகவே ஆராயப்படுகின்றன என்பதுடன் எவரையும் சுட்டுவதாகவோ குற்றம் சாட்டுவதாகவோ அல்லாமல் கட்டுரையாசிரியரின் அனுபவங்களின் ஆதங்க வெளிப்பாடாக மட்டுமே இது அமைகின்றது.

**முதலில் பாடசாலைகளில் தமிழ்ப்பாட அடைவு மட்டங்களில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக**

1. ஆரம்பக் கல்வியிலிருந்து இடைநிலைக் கல்விக்குள் நுழையும் மாணவர்களுள் குறிப்பிட்ட வீதமானோர் எழுத்தறிவு குறைந்தவர்களாயிருத்தல். (இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம்)
2. போதிய பயிற்சியற்ற, அல்லது வேறுபாட ஆசிரியர்கள் தமிழ்ப்பாடம் கற்பிக்கும் சந்தர்ப்பங்கள்.
3. பாட அலகுகளில் ஏற்படும் சந்தேகங்களை, கற்பிக்கும் முன்னரே தீர்த்துக்கொள்ளாமை
4. சந்தேகங்களை மற்றவர்களிடம் வினவுவதில் ஆசிரியர் சிலர் கொண்டுள்ள தயக்கமும், கௌரவப் பிரச்சினையும்
5. ஆசிரியர்களுக்குப் பரவலான இலக்கிய அறிவு இல்லாமை
6. தமிழ்ப்பாடத்துக்கென மேலதிக நேரத்தை ஒதுக்குவதில் ஏற்படும் சிக்கல்கள்.
7. ஏனைய பாடங்களுக்கு மாணவர்கள் கொடுக்கின்ற முக்கியத்துவம் (கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம்)
8. தனியார் வகுப்புக்களின் ஆதிக்கம்.
9. மாணவர்கள் மத்தியில் அதிகரித்து வருகின்ற நவீன தொடர்பாடல் சாதனங்களின் பாவனை.
10. தொடர்பாடலில் பயன்படுத்தப் படுகின்ற முறையற்ற தமிழ்மொழிப் பாவனை. (இலக்கணங்கள் பற்றி)
11. வெவ்வேறு பேச்சுமொழி வழக்குகளால் பாதிக்கப்படுகின்ற எழுத்துவழக்கு.
12. மொழிப்பாடத்தில் உயர்பெறுபேறுகள் பெறவேண்டிய அவசியமில்லை எனும் மாணவர்களின் மனநிலை.
13. இடைநிலை வகுப்புகளில் எழுத்தறிவில் பின்தங்கிய மாணவர்கள் தம்மை விஷேட கவனிப்புக்குட் படுத்துவதை விரும்பாமையும் (வெட்கம்) ஒத்துழைக்காமையும்.
14. ஏனைய பாடங்களில் மொழிச் செம்மைக்கு முக்கியத்துவம் கொடுப்பது மிகக்குறைவாக இருத்தல்.
15. பாட நூல்களில் உள்ள செய்யுள்களுக்குரிய பொதுமைப் படுத்தப்பட்ட உரைவிளக்கங்கள் இல்லாமை.
16.. வெவ்வேறு பயிற்சி நூல்களினது வெளியீடும் தனியார் நடத்தும் தமிழ்கல்வி வகுப்புக்களின் பாதிப்பும்.
17. பாட நூல்களில் காணப் படுகின்ற ஒரு சில பிழைகள்
18. பாட நூல்களுக்கும் அதன் ஆசிரியர் கைந்நூலுக்குமிடையே உள்ள சில முரண்பாடுகள்.
19. அறிமுகப்படுத்தப்படுகின்ற நூல்களிலுள்ள இலக்கணத்தெளிவின்மையும், தொடர்பற்ற போக்குகளும்.
20. மாணவர் வயதுக்கும் அறிவுக்கும் பொருந்தமற்ற சில பாட அலகுகள்.
21. பொதுப்பரீட்சைகளில் வினவப்

படுகின்ற சில வினாக்களுக்குரிய விடைகள் மாணவர் பக்கம் நோக்கப் படாமல் தயாரிப்பவரது அறிவுக்கும், மனநிலைக்கும், புரிந்துணர்வுக்கும் ஏற்ப அமைத்தல்.

22. பாடசாலையில் தமிழின் பாடப்பரப்புகளுக்கும் தமிழ்சார்ந்த உயர் படிப்புக்களுக்குரிய பாடப்பரப்புகளுக்கு மிடையில் தொடர்பும், ஒருமைப்பாடும், பொதுமைப்பாடும் பேணப்படாமை. (இவற்றுக்கான எடுத்துக்காட்டுக்கள் இங்கு தவிர்க்கப்பட்டுள்ளன.)

போன்றவற்றை குறிப்பிடலாம். அதேவேளை இவற்றைவிடவும் வேறு காரணிகளும் இருக்கலாம்.

இவ்வாறான காரணிகளின் பாதிப்புக்களிலிருந்து படிப்படியாக விடுபட வேண்டுமாயின் சம்மந்தப்பட்ட சகல தரப்பினரும் சற்றுக் கரிசனை கொள்ள வேண்டும். திறந்த மனதுடன் தவறுகளைத்திருத்தி சீர் செய்ய வேண்டும். மற்றவர்களைச் சுட்டாமல் நான் செய்ய வேண்டும் என்ற மனநிலை யுடன் ஒவ்வொருவரும் செயற்பட முனையும் போது முன்னேற்றம் காணமுடியும்.

முதனிலை வகுப்புகளில் (தரம் 1,2) கற்பிக்கும் ஆசிரியர்கள் தம்மிடம் தரப்பட்ட பிள்ளைகளின் தமிழ் மொழியறிவில் (குறிப்பாக எழுத்து, வாசிப்பு) மிகக் கூடிய அக்கறை கொள்ளல். அதுவும் வீட்டில் பெற்றோரால் கவனிக்க முடியாத கவனிக்கபடாத சிறுவர்களில் கரிசனை கொண்டு கற்பித்தல். (ஏதேனும் குறைபாடுள்ள பிள்ளைகளைத்தவிர சாதாரண பிள்ளைகள் யாரேனும் எழுத்தறிவற்று வெளியேறும் பட்சத்தில் அத்தாங்களில் கற்பித்தவர்களே அதற்கு வகைகூற வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.)

அடுத்தடுத்த வகுப்புக்களைப் பொறுப்பேற்கும் ஆசிரியர்கள் தமக் குள்ள வேலை இதுவல்ல என மாணவர்களின் பின் தங்கிய நிலையை புறந்தள்ளிவிடாமல் பொறுப்புடன் எழுத்துப்பயிற்சிகளை வழங்கல்.

தமிழ்க்கற்பிக்கும் ஆசிரியர்கள் தமக்குள்ள உயரிய பொறுப்பையுணர்ந்த ஆர்வத்துடனும், இரசனையுணர் வுடனும் கற்றல்கற்பித்தலில் ஈடுபடல்.

மாணவர்களின் ஆக்கங்களில் மொழிச்செம்மைக்கு முக்கியத்துவம் கொடுத்து வழிப்படுத்தல்.

இலக்கணங் கற்பித்தலில் எளிமையும், கவர்ச்சிகரமான வழி முறைகளைக் கையாளல்.

பாடநூல்கள், கைந்நூல்களி லுள்ள தவறுகள், முரண்பாடுகளை இனங்கண்டு உரியமுறையில் தெளிவு பெற்றபின் கற்பித்தல்.

தமிழாசிரியர்களுக்கு என நடத்தப்படுகின்ற செயலமர்வுகள், பயிற்சி வகுப்புக்களில் தவறாது பங்கு கொண்டு அறிவை விருத்தி செய்தல்.

ஆசிரியர்கள் பாடம் சார்ந்த உயர்கற்கை நெறிகளில் ஈடுபட்டு தம்மை வளப்படுத்திக்கொள்ளல்.

இவை ஆசிரியர்கள் பக்கம் சார்ந்தவையாக இருக்க மறுபுறம் பாடத்திட்டங்கள், பாடநூல்கள் வழி காட்டிகள் தயாரிப்பதில் அதிகார

முடையோரும் பங்களிப்புச் செய்வோரும், சம்மந்தமுடையோரும் பதிப்பாளர்களும் மொழி விருத்தியில் பல கடப்பாடுடையவர்களாக இருக்கின்றார்கள்.

மாணவர்களின் வகுப்பு, வயது என்பவற்றைக் கருத்திற்கொண்டு பாட அலகுகளைத் தெரிவு செய்தலும், தயாரித்தலும்.

பாட நூல்களில் தவறுகள் ஏற்படாதவண்ணம் தொடர்ச்சியாக மேற்பார்வைக்குட்படுத்தல்.

பாட நூல்களுக்கும், கைந்நூல்களுக்கும்மிடையிலுள்ள முரண்பாடுகளைத் தவிர்த்தல்.

சகல பாடநூல்களின் தயாரிப்பின்போதும் செய்யுள்கள் போன்றவற்றுக்குப் பொதுமைப்படுத்தப்பட்ட உரைநடை விளக்கம் கொடுத்தல். (தனியார் பயிற்சி நூல்களின் ஆதிக்கம் குறையும்)

வினாவிடை மதிப்பீட்டாளர்கள் தம் பணியில் பொறுப்புணர்வைக் கடைப்பிடித்தல்.

பாட அலகுகளில் ஒரு காப்பியத்தின் அல்லது சிற்றிலக்கியத்தின் ஒரு பகுதியை மட்டும் இணைத்துக் கொள்ளும்போது மாணவர்கள் அதன் முழுமையை அறியக்கூடிய சந்தர்ப்பம் மிகக் குறைவாகவே அமைந்துவிடுவதால் (பரீட்சைக்குத் தேவையில்லை என்ற உணர்வு) அவற்றைக் கதைச்சுருக்கமாக சாதாரண உயர்தரங்களில் சேரத்தல். அல்லது இடைநிலை வகுப்புகளில் தொடர்பகுதியாக இணைக்கப்படல். (முன்னர் 10ம் தரத்தில் மகாபாரதச் சுருக்கம் சேர்க்கப்பட்டிருந்தது போல)

உயர் கற்கை நெறிகளில் தமிழ்ப் பாடப்பரப்புக்களில் தொடர்பையும், ஒருமைப்பாட்டையும் பேணல்.

எல்லாவற்றுக்கும் மேலாக தாய்மொழிக்கல்வி சகல உயர்தரப் பிரிவுகளிலும் (ஓரளவு இலகுப்படுத்தப்பட்டு) கட்டாய பாடமாக்கப்பட ஆலோசனை வழங்கல்.

இவ்வாறான முயற்சிகளில் சகல தரப்பினரும் மனமுவந்து ஈடுபட முன்வரும் போது மாணவர்களிடையே மொழிவிருத்தியும், தமிழிலக்கிய பரவலாக்கமும் வளர்ச்சியடையும் என்பதில் மாற்றுக்கருத்துக்களிருக்க மாட்டா. ●

**நேற்றிலிருந்து கற்றுக்கொள்**

**இன்று வாழ்**

**நாளையில் நம்பிக்கை வை**

# உதய சூரியன்

**திருமதி. F.R.F. றஹ்மான்**
***மன்/ எருக்கலம்பிட்டி மகளிர் ம.வி. மன்னார்.***

வகுப்பறை முழுவதும் ஒரே நிசப்தம். எல்லோர் முகங்களிலும் பயத்தின் ரேகைகள். தமிழாசிரியர் கமலக்கண்ணன் வகுப்பறைக்குள் நுழைகிறார். எல்லோரும் ஒருமித்த குரலிலே "வணக்கம் சேர்" என்றார்கள். வகுப்பறைக்குள் நுழைந்ததும் பாதி பழுத்த அணிஞ்சில் பழ கண்களால் நெருப்புக் கொள்ளிகள் எரிவது போல குற்றம் கடியும் மோப்பப் பார்வையுடன் அவர் சுட்டெரிக்கும் போதெல்லாம் தேகம் பதறும். கவலை பொங்கும். உள்ளம் ஏங்கும். "இன்று வீட்டுப்பாடம் செய்யாதவர்கள் எழும்பு" என்றுதான் கேட்பார். செய்யாதவர்கள் இருந்தால் அது அவர்களின் தலைவிதி. யாராலும் தடுக்க முடியாது. மாணவர் மத்தியில் ஒரே அமைதி, பரபரப்பு ஆசிரியரின் வளைத்து கிழிந்து சிராய்ந்து தொங்கும் பிரம்பு தம்மைப் பதம் பார்த்து விடக்கூடாது என ஆயிரம் முறை பிராத்தனை செய்கின்றனர்.

அவர்கள் நினைத்தது போலவே அவரும் அதே வினாவைத்தான் கேட்டுக்கொண்டு வந்தவரின் கண் களில் பாரதி பட்டுவிட்டான். தன்னை மறைத்துக் கொள்ள முயன்றும் தோற்றுப் போகிறான். அடுத்து அவன் முறைதான் இரவில் படிக்க நேரமிருந் தால் தானே வீட்டுப்பாடம் செய்வதற் கும், படிப்பதற்கும் அவன்மேலே அவனுக்குக் கோபம் வந்தது. "பாடசாலை விட்டு வீட்டுக்குப் போன பாதி வழியிலேயே வந்து புத்தகப் பையை வாங்கிக் கொண்டு ஆட்டுக்குக் குழைவெட்டவும் மாட்டுச் சாண மெடுக்கவும் என என்னை அனுப்பினால் நானெங்கு படிப்பதும் கிழிப்பதும்" என தன்னையே நொந்து கொள்கிறான்.

ஆசிரியரின் குணம் தெரிந்தும் பாடம் செய்யாமல் வந்தது யாரின் குற்றம். தன் விதியை எண்ணி வேதனைப்பட்டுக்கொள்கிறான். அவனது பிரார்த்தனைகள் இன்றும் பொய்யாய்ப் போகின்றன. "போடா போய் தரவையில சாணி பொறுக்கு. நீயெல்லாம் படிச்சு எந்தக் கோட்டையைப் பிடிக்கப் போறே உனக்கெல்லாம் எதற்குப் படிப்பு சனியனே" என்ற ஆசிரியரின் வழக்கமான ஆராதனை அவனது காதுகளில் எதிரொலித்தது. ஆசிரியரின் ஏச்சுக்கள், பேச்சுக்கள் மட்டுமன்றி அவரின் பிரம்பு கூட அவனைப் பதம்பார்த்தது. கையெங்கிலும் பச்சைத் தழும்புகள், அடியின் அகோரத்தால்

கண்ணீர்துளிகள் அவன் கைகளை முத்தமிடுகின்றன. ஏந்திக் கொண்டான். அந்த நொடியில் பாடசாலையை விட்டோடி அடுப்பங்கரையிலே ஈரவிறகுடன் சதா போராடிக் கொண்டிருக்கும் தாயின் மடியில் முகம் புதைத்து கதறி அழ வேண்டும் போலிருந்தது அவனுக்கு.

தழும்புகளை ஊதிஊதி மனதார ஆசிரியரைத் திட்டித் தீர்த்துவிடுகிறான். வகுப்பறையில் அனைவரும் அவனை ஒரு ஜந்துவைப்போல பார்க்கின்றனர். ஆனால் அவர் வீசிய வார்த்தை அம்புகள் மட்டும் அவன் மனதை முள்ளாய்த் தைத்தது. இலட்சிய மில்லாத அவனது வாழ்க்கை ஆணியில் தொங்கும் சட்டையைப் போல உள்ளீடற்றுத் தள்ளாடியது.

ஆசிரியரின் ஆராதனை களையும் அபிஷேகங்களையும் உடனிருந்து பார்ப்பவள்தான் தோழி நித்யா. "டேய் உனக்குத் தெரியாதாடா அந்த சிடுமூஞ்சியின்ட குணம்...?" ஏனோ தெரியல நீ என்றதும் எரிகிறார். ஆனா வசந்த் பாடம் செய்யாட்டா கோபம் வராது. சிரிப்புத்தான் வரும். அவனைப் போல நீயும் டாக்டர் மகனா இருந்தால் உனக்கேன் இந்தக்கதி" அதுக்கேற்றாற் போல நீயும் அதில்ல, இதில்லை எண்டு, இந்தா இதப்பார்த்து எழுது" என அன்பாய் இதமாய் அவன் காயத்துக்கு ஔடதமாகப் பேசினாள். உடுக்கை இழந்தவன் கை போல ஆங்கே இடுக்கண்களைவதாம் நட்பு என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க இருந்தது அவளது நட்பு ஒன்றுதான். நூறு வைத்தியர் களால் செய்ய முடியாத சிகிச்சையை ஒரு நண்பனால் செய்ய முடியும் என்பது போல பல நேரங்களில் நித்யாவின் வார்த்தைகள்தான் தனக்கு ஒரு மருந்து என எண்ணிக்கொண்டான்.

காலச்சக்கரம் யாருக்காகவும் காத்திராமல் சுழன்றது. அன்றும் ஆசிரியரின் அக்கினிச் சுடர் பாரதியைப் தீண்டவே அவனது பாடப்புத்தகங்கள் காற்றிலே பறந்து வீசி எறியப்பட்டன. அனைத்தையும் ஒன்று சேர்த்த "நித்யா" பாடசாலை முடிந்து அதனை வீட்டுக்குக் கொண்டு சென்று ஒட்டி செப்பனிட் டாள். அதனைப் புரட்டிப் பார்த்த அவளது கண்களில் அழகாய், தத்ரூபமாய் வரையப்பட்ட அழகிய அவனது கைவண்ணங்கள். அவளால் நம்பவே முடியவில்லை. "பாரதி இவ்வளவு பெரிய ஓவியனா. இவனுக்குள் இத்தனை திறமைகளா" இறைவா! இவனுக்கு இவ்வளவு ஆற்றலா இத்தனை நாளாய் வெளிப்படுத்தாமல் இலைமறை காயாகவே இருந்துவிட்டானே" இதனை விடக்கூடாது இந்த உலகுக்கே காட்ட வேண்டும். இவனது திறமை போற்றப்படவேண்டும். ஒரு ஏழை மாணவன் வெற்றி பெற வேண்டும் என அகமகிழ்ந்து முகமலர்ந்தாள்.

இதற்கேற்றாற் போல் அன்றைய தகவற் பலகையை அலங் கரித்தது ஒரு சுற்று நிருபம் அதில் மாகாண ரீதியிலான சித்திரப் போட்டி வெற்றிபெறும் மாணவருக்கு விலை மதிப்புள்ள பரிசு என அறிவிக்கப் பட்டிருந்தது. அவனது திறமையைப் பறைசாற்ற சந்தர்ப்பம் கதவைத் தட்டியது. உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு 'பசுமைப் புரட்சி' என்ற தலைப்பிலான தத்ரூபமான அவனது சித்திரத்தை அவன் அறியாமலேயே அவள் அனுப்பிவைத்தாள்.

'பெற்றோர் அமைவது உன் விதி நண்பர்கள் அமைவது உன் மதி' என்பது போல அவனது வாழ்க்கையில் இது மட்டும் நிதர்சனமாய் இருந்தது. வழக்கம் போல அன்று தமிழாசிரியர் கமலக் கண்ணன் அதிபர் காரியாலயத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார் "மிஸ்டர் கமலக்கண்ணன் உங்கள் வகுப்பு மாணவன் பாரதியைப் பற்றி என்ன நினைக்கிறீங்க" என மெதுவாகப் பேச்சுக்கொடுத்தார் அதிபர். மடை திறந்த வெள்ளம் போல சரமாரியாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார் ஆசிரியர். "அவனப் பாடசாலையை விட்டு விலக்குவது நல்லது சேர். கல்வியில எந்த முன்னேற்றமில்ல அவனால் நம்ம பாடசாலைக்குதான் சேர் கெட்டபேர்" எனக் கொட்டித் தீர்த்தார். பதிலுக்கு அதிபர் ஒன்றுமே பேசவில்லை. சிரித்தார். மாணவனை மட்டுமே குறை கூறிக் கொண்டிருப்பது ஒரு நல்லாசானுக்கு அழகல்ல சேர். களிமண்ணாகக் கொடுக்கப்பட்ட மாணவச் செல்வங்களை சிற்பங்களாக மாற்றும் சிற்பிகளாக ஆசான்கள் இருக்க வேண்டும். ஒவ்வொரு ஆசானும் ஒரு சிறந்த நண்பன்,நல்ல ஆசானாக மாணவர்களின் உயர்வுக்குப் பாடுபடும் ஏணிப்படிகள் அவர்களுள் புதைந்து கிடக்கின்ற ஆற்றல்களை, திறமைகளை, இனங்கண்டு வெளிக் கொண்டு வருபவன்தான் ஆசிரியன்" அதனால்த்தான் தாரமும், குருவும் தலை விதிப்படி என்பார்கள் சான்றோர்கள். "ஒருவனுடைய குறை களைச் சொல்லி அவனைப் பின் தள்ளுபவன் ஒரு நல்லாசானாக முடியாது. "ஒரு நாள் நிச்சயம் விடியும் – அது உன்னால் மட்டும் முடியும்" என்ற அப்துல்கலாமின் வாசகங்களை மாணவர்களுக்குச் சொல்லி அவர் களைத் தட்டிக்கொடுங்கள். எங்கட காலம் மாதிரி இல்ல ஆசிரியர் கமலக்கண்ணன் இந்தக் கால மாணவர்கள் அவர்கள் அன்புக்குத்தான் அடிமைகள் அதிகாரத்திற்கில்லை. இத நாங்க உணர வேண்டும். பிரம்பு தூக்குகின்ற ஆசிரியரே கைகாலாகாத ஆசிரியர் என்ற காலம் வந்து பல நாட்களாச்சு. எனவே இந்த தடியைத் தூக்கி தூர வீசுங்க. அன்பால முடியாதது எதுவுமே இல்ல சேர். அடுத்து கோபத்தால் வார்த்தைகளைக் கொட்டா தீங்கள் அந்தச் சுடு சொல் சாகும்வரை உள்ளிருந்து வலிக்கும் சேர். இத நான் சக ஆசிரியர் முன்னால சொல்வது நாகரீகமாக இருக்காது நீங்கள் ஒரு ஸின்ஸியறான டீச்சர் என்றுதான் தனியக் கூப்பிட்டு சொல்ல வேண்டிய தாகிவிட்டது. நீண்ட நாட்களாக இத சொல்ல வேணுமென்டு நினைச்சன். அதுதான். அதுசரி. இத்தன குற்றச்சாட்டுக்கள முன்வச்சிங்களே, அந்த மாணவன்தான் இன்று எங்களுடைய பாடசாலைக்கே புகழை சேர்த்திருக்கிறான் தெரியுமா? மாகாணத்திலே 1ம் இடத்தைப் பிடிச்சிருக்கிறான். நீங்க செய்ய வேண்டிய வேலையை அவனுடைய சக தோழி நித்யா செய்திருக்கிறாள் அவள்தான் அவனுக்கே தெரியாமல் இத அனுப்பி வெற்றிபெற வைத்தது. இந்தாங்க சேர் நீங்களே இந்த வெற்றிக்கிண்ணத்தை அவனுக்கு உங்களது கைகளாலேயே கொடுங்க சேர். சந்தோசப்படுவான். "சந்தோஷத்தி லேயே பெரிய சந்தோசம் மற்றவங்கள சந்தோஷப்படுத்திப் பார்ப்பதுதான்" ஆ.. அடுத்த கிழமை அவனை கௌரவிப் பதற்கான நிகழ்வு கொழும்பு பண்டார நாயக்கா சர்வதேச மண்டபத்தில் நடைபெற இருப்பதால் நீங்களே

அவனைக் கூட்டிக்கொண்டு போக வேணும் சேர், சரிதானே”

“என்ன மன்னிச்சிடுங்க சேர். இவ்வளவு நாட்களாக மூடிக்கிடந்த என் இதயவறைகளையும் இருண்டு கிடந்த என் மனதையும் ஒளியேற்றி, அறிவூட்டி விட்டீங்க. நன்றி. ஒருவனுடைய திறமையை கைகளால் மூடி மறைத்துவிட முடியாது என்ற உண்மையை மட்டுமில்ல ஆசிரியன் என்பவன் ஒரு மெழுகுவர்த்தி போல தன்னை உருக்கி உலகத்துக்கு ஒளி கொடுப்பவன் என்பதையும் புரிந்து கொண்டேன் நன்றி சேர்.”

“மன்னிப்பு என்னிடம் கேட்கா தீங்க சேர் அந்த மாணவனிடம் கேளுங்க.” அதுதான் சாலச்சிறந்தது என்பது போல அதிபர் அவரைப் பார்த்துப் புன்னகைத்தார். ஆசிரியர் தன் தவறை அதிபரின் இங்கிதமான பேச்சுக்கள் மூலம் விளங்கிக் கொண்டார். எமக்குள்ளும் எத்தனையோ கமலக் கண்ணன்களும், எத்தனையோ பாரதி களும் இருக்கத்தான் செய்கின்றனர். இல்லாமலில்லை. மாணவர்கள் முன் தேவையற்ற வார்த்தைப் பிரயோகங் களைப்பாவிப்பதன் மூலம் மட்டும் அவர்களை திருத்திவிட முடியாது. கமலக்கண்ணன்கள் திருந்த வேண்டிய வர்கள். பாரதிகள் ஊக்குவிக்கப்பட வேண்டியவர்கள். அன்புக்காய் ஏங்கு பவர்கள் அவர்களை அணைக்க வேண்டிய கைகள் எமதாய் இருக்க வேண்டும். இதனையே சமுகம் எதிர்பார்க்கிறது. மாணவனும் எதிர்பார்க்கிறான். ஆசிரியனுடைய தியாகங்களுக்கு ஈடு இணையில்லை தான். இது தேய்ந்து மணக்கும் சந்தனக் கட்டைகளாய் சமுதாயப் பணி செய்யும் ஆசான்களுக்கல்ல. மாறாக இவ்வா சானைப் போன்றவர்களுக்காக மட்டுமே.

“எத்தனை நட்சத்திரங்கள் இருந்தாலும் அந்த நிலவுதான் பளிச்சென்று இருக்கிறது” அவ்வாறு தான் அன்று அவர்கண்களுக்குத் தெரிந்த பாரதி “எனது இந்த வெற்றிக்குத் காரணம் ஒருவகையில் நீங்களும்தான் சேர்”“ஏன்? என்ற ஆசிரியரின் வினாவு க்கு இல்ல சேர் நீங்க ஏசும்போதெல்லாம் நான் பின்னால இருந்து படம்தான் சேர் வரைவன் அந்த விடயம் தான் என்னை இந்த அளவுக்கு உயர்த்தினது. அதனால நான் உங்களுக்குத்தான் நன்றி சொல்ல வேணும் என்றான் தன்னடக்கமாக”

ஆசிரியருக்கு ஆனந்தக் கண்ணீர் அவனை அணைத்து முத்தமிட்டு நீ மனதால உயர்ந்து விட்டாய் என்றார். “இல்ல சேர் நீங்க ஏன் என்ன ஏசினிங்க நான் நல்லா வரத்தானே நீங்களும் ஆசப்பட்டிங்க அத நான் நிறைவேற்றி விட்டேன் சேர்”

எதையோ பெரிதாக கற்றுக் கொண்ட மகிழச்சியில் பெருமிதத்தோடு வகுப்பறையைவிட்டு வெளியேறினார் கமலக்கண்ணன். ●

**அறிவுபூர்வமான ஒரு பதிலில் இருந்து ஒரு முட்டாள் கற்றுக்கொள்வதை விட முட்டாள் தனமான ஒரு கேள்வியிலிருந்து ஒரு அறிவாளி நிறையவே கற்றுக்கொள்கிறான்**

# வெளிநாடு சென்ற தாய்மாரின் பிள்ளைகளின் கல்விநிலை

## (மன்னார் கோட்டப் பாடசாலைகள் தொடர்பான ஒரு சிறப்பாய்வு)

திரு. G. C. மெல்வின் குருஸ் BSC PGDE MEd
*ஆசிரியர் - மன் / நானாட்டான் மகா வித்தியாலயம்.*

கல்வி மனித மேம்பாட்டின் ஒரு கருவியாக காணப்படுகின்றது. பிள்ளைகளின் குடும்பத்திற்கும் அவர்களின் கல்வி அடைவிற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. அதிலும் தாய் சிறப்பான பங்கை வகிக்கின்றாள். தற்கால சூழலில் குடும்பத்தில் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளால் குடும்ப சூழல் தகர்வுற்று வருகின்றது. அப்பிரச்சினைகளுள் குடும்பத்திற்கு நிரந்தர வருமானமின்மை, குடும்ப தகராறால் குடும்பங்கள் பிரிதல், தந்தை இறத்தல் போன்ற காரணங்களால் ஏற்படும் வறுமை கார்ணமாக பல தாய்மார்கள் குடும்பத்தைப் பிரிந்து வேலை வாய்ப்பிற்காக வெளிநாடு செல்லுதல் இலங்கை நாட்டில் வேகமாக அதிகரித்து வருகின்து. இதனால் குடும்ப சூழலின் கல்வி நிலை பாதிக்கப் படுவதோடு, பிள்ளைகளின் கல்வி கற்கும் சூழலும் குறைவடைந்து வருகின்றது. இவ்வாறான குடும்பத்திலிருந்து வருகைதரும் பிள்ளைகள் பாடசாலையிலும் சிறப்பான கல்வி அடைவு மட்டத்தை பெறுவதில்லை. மன்னார் கல்வி வலயத்தின் மன்னார் கல்வி கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளிலும் வேலை வாய்ப்பிற்காக தாய்மார் வெளிநாடு சென்ற பிள்ளைகளின் எண்ணிக்கை படிப் படியாக அதிகரிக்கின்றது. இது தற்போது பாடசாலைகளின் பிரதான பிரச்சினையாக காணப்படுகின்றது. இந்த ஆய்வுக் கட்டுரையில் வேலை வாய்ப்பிற்காக தாய்மார் வெளிநாடு செல்லுவதற்கும் பிள்ளைகளின் கல்விக்குமான தொடர்பு குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இங்கு குறித்த ஒரு பிரதேச பாடசாலைகள் மட்டுமே ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டுள்ளன. எனினும் இது தொடர்பான பிரச்சினைகள் வேறு பல பாடசாலைகளிலும் பரவலாக நிலவுகின்றன.

இலங்கையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பை எடுத்து நோக்கும் போது தாய்மார் பணிப்பெண்களாக மத்திய கிழக்கு நாடுகளிற்கு செல்வதே மிக அதிகமாக காணப்படுவதை இலங்கை புள்ளி விபரவியல் திணைக்களத்தின் அறிக்கைகள் எடுத்துரைக்கின்றன. இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதியிலும் இவ்வாறான இடப்பெயர்வுகள் அதிகமாக நடைபெறுகின்றன. மன்னார் பிரதேச செயலகத்தின் மகளிர் சிறுவர் அபிவிருத்தி பிரிவின் அறிக்கைகள்

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பிரதேசங்களிலும் இவ்வாறு வேலைக்காக செல்லும் தாய்மாரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை சுட்டிகாட்டுகின்றன.

**இவ் ஆய்வின் ஆய்வுக் கருது கோளாக பின்வருவன காணப்படுகின்றன.**

1. தாய்மார் வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்கு பிள்ளைகளை பிரிந்து செல்வதால் பிள்ளைகளின் பாட அடைவு வீழ்ச்சி அடைகின்து.
2. தாய்மார் வெளிநாட்டு வேலை வாய்பிற்காக பிள்ளைகளை பிரிந்து செல்வதால் பிள்ளைகளின் இணைப் பாடவிதான செய்பாடுகள் வீழ்ச்சி அடைகின்றன.
3. தாய்மார் வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்குச் சென்றுள்ள மாணவர்களின் பாடசாலை வரவுகள் வீழ்ச்சி அடைகின்றன.

ஆய்விற்கான வரையறையாக வெளி நாட்டு வேலை வாய்ப்பிற்காக சென்ற தாய்மாரை விட்டு பிரிந்து இருக்கும் மாணவர்கள் மட்டுமே இவ்வாய்விற்குள் உள்வாங்கபட்டுள்ளனர். இங்கு வெளிநாடு என் குறிப்பிடும் போது மத்திய கிழக்கு நாடுகள் மட்டுமே இவ்வாய்விற்கருத்தில் எடுக்கப்பட்டன.

மன்னார் கல்விக்கோட்டத்திலுள்ள 38 பாடசாலைகளில் படை கொண்ட எழுமர் மாதிரி எடுப்பு மூலம் ஏழு பாடசாலைகளின் இடைநிலைப்பிரிவில் தரம் 6 தொடக்கம் தரம் 9 வரை கல்வி கற்கும் மாணவர்கள் மட்டுமே ஆய்விற்கு உட்படுத்தப்பட்டனர். மாணவர்களின் கல்வி நிலையை அறிந்து கொள்வதற்காக பாட அடைவுமட்டம், இணைப்பாட விதான செய்றபாடுகள், அவர்களின் பாடசாலை வரவுகள் மாத்திரம் கருத்தில் எடுக்கப்பட்டன. பாட அடைவை கண்டறிய 2013 ம் ஆண்டில் மூன்று தவணைப்பரீட்சை புள்ளிகளும் பெற்றுக்கொள்ளப்பட்டன. அதற்காக தமிழ்மொழி, கணிதம் விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் தெரிவு செய்யப்பட்டன. அதே கால வரையறையில் மாணவர்களின் வரவுகளும் கருத்தில் எடுக்கப்பட்டன. தகவல் சேகரிப்பு கருவியாக ஆசிரியர், மாணவர்களுக்கான வினாக்கொத்துக்கள், நேர்காணல், உற்றுநோக்கல், பதிவேடுகளை பார்வையிடல் என்பவை பயன்படுத்தப்பட்டன.

**ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் ஆய்வுப் பிரச்சினையுள்ள மாணவர் எண்ணிக்கை பற்றிய விபரம்**

| இல. | பாடசாலையின் பெயர் | வகை | மாணவர் எண்ணிக்கை | கனிஷ்ட இடைநிலை மாணவர்கள் | ஆய்வுக்கு உட்படுத்திய மாவணர்கள் |
|---|---|---|---|---|---|
| 01. | மன்/ எருக்கலம்பிட்டி மு.ம.ம.வி. | 1AB | 345 | 139 | 05 |
| 02. | மன்/ தலைமன்னார் பியர் அ.த.க.பா. | 1AB | 554 | 173 | 05 |
| 03. | மன்/ கௌரிஅம்பாள் அ.த.க.பா. | 1C | 166 | 60 | 05 |
| 04. | மன்/ அல்மினா மகா வித்தியாலயம் | 1C | 320 | 99 | 04 |
| 05. | மன்/ எழுத்தூர் றோ.க.த.க.பா. | 2 | 253 | 116 | 07 |
| 06. | மன்/ புனித லோறன்ஸ் றோ.க.த.க.பா | 2 | 295 | 120 | 07 |
| 07. | மன்/ தலைமன்னார் பியர் மு.க.பா. | 2 | 205 | 51 | 02 |

வினானக்கொத்துக்கள் ஆசிரியர் களுக்கும் ஆய்வு பிரச்சினையுடைய மாணவர்களுக்கும் வழங்கப்பட்டன. நேர்காணல்கள் ஆய்வு பிரச்சினை யுடைய மாணவர்கள், ஆசிரியர்கள் அதிபர்களுடனும், மன்னார் பிரதேச செயலக வெளிநாட்டு வேலை வாய்ப்பு தொடர்பான அபிவிருத்தி அலுவலர் களிடமும், சிறுவர் உரிமை அபிவிருத்தி அலுவலரிடமும் மேற்கொள்ளப்பட்டது. உற்றுநோக்கல் ஆய்வாளரால் மேற் கொள்ளப்பட்டது. இம்முறைகள் மூலம் பின்வரும் பிரச்சினைகள் இனம் காணப்பட்டன.

1. ஆய்விற்குட்பட்ட பிரதேசத்தில் வாழும் குடும்பங்களில் தந்தைக்கு நிரந்த தொழில் வாய்ப்பற்ற குடும்பங்களின் தாய்மாரே வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காக சென்றுள்ளனர். அவர்களுள் 37.05 வீதமானவர்கள் குடும்பத்தகராறு காரணமாக பிரிந்த குடும்பங்களாகும்.

2. வெளிநாடு சென்ற தாய்மார் தமது பிள்ளைகளின் கல்வி நிலை தொடர்பாக பெரும்பாலும் வகுப்பா சிரியரிடம் விசாரிப்பது மிகக் குறைவாக காணப்படுகின்றது.

3. வெளிநாடு சென்ற தாய்மாரின் பிள்ளைகளின் கல்வியில் அவர்களின் தந்தைமார் மற்றும் பாதுகாவலர் குறைவான அக்கறையே காண் பிக்கின்றனர்.

4. தாய்மார் வெளிநாடு சென்ற பிள்ளைகளின் வீட்டில் கற்க ஊக்க மளிப்பது குறைவாக காணப்படுகின்து.

5. தாய்மார் வெளிநாடு சென்ற பிள்ளைகளின் கல்விநிலை, ஒழுக்கம் என்பவற்றை கண்காணிக்க பாடசாலை களில் திட்டங்கள் காணப்படவில்லை.

6. வெளிநாடு சென்ற தாய்மாரின் பிள்ளைகளின் சுயகற்றல், ஒழுங்கு விதிகளுக்கு அமைந்து நடத்தல் குறைவாக காணப்படுகின்து.

7. பாடசாலைக்கு ஆய்வு மாணவர் களின் வரவு திருப்திகரமாக அமைந்த போதிலும் அவர்களின் பாட அடைவு மட்டம் மிகவும் தாழ்ந்த நிலையில் காணப்படுகின்றது.

8. ஆய்வு மாணவர்களில் 59.96 வீதத்தினரே இணைப்பாடவிதான செயற்பாட்டில் பங்கு பற்றியுள்ளனர்.

9. தாய்மார் வெளிநாடு சென்ற ஆய்வு மாணவர்களின் குழுவாக செயற்படும் ஆர்வம், தலைமைத்துவ பண்பு, பொது சேவைகளில் ஈடுபாடு காட்டல் பாடசாலைகளில் நன்றாக காணப்படுகின்றது.

10. தாய்மார் வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்கு சென்றுள்ளமை மாணவர் களின் பாடசாலை வரவைப் பாதிக்க வில்லை.

இனங்காணப்பட்ட ஆய்வுப் பிரச்சினையை குறைக்கும் பிள்ளை களின் கல்விநிலையை மேம்படுத்து வதற்காக ஆசிரியர்கள் மாணவர் களுக்கு சிறிய நிலையறிப் பரீட்சை களை வைத்து அவற்றை மதிப்பீடு செய்து பரிகார கற்பித்தலை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். வீட்டில் சுயகற்றலுக்குரிய சூழ்நிலை காணப்படாத ஆய்வு மாணவர்களுக்கு பாடசாலைகளில் இரவுவேளைகளில் அவர்களின் பாதுகாவலரின் அனுமதியுடன் ஆசிரி யரின் மேற்பார்வையின் கீழ் சுயகற்றலுக்கு உதவுதல் வேண்டும். பிள்ளைகளின் சமய, ஒழுக்க

விழுமியங்களை மேம்படுத்த ஆலய மத குருமாருடன் அவர்களை தொடர்பு படுத்த வேண்டும். பாடசாலை அதிபர்கள் வகுப்பாசிரியர்களிடம் ஆய்வுப்பிரச்சினையுடைய மாணவர் களை அடையாளம் காட்டி கற்றலில் கூடிய அக்கறை எடுக்க வழிகாட்ட வேண்டும். மேலும் பாடசாலை வழிகாட்டல் ஆலோசனைக்குழுக்கு பொறுப்பான ஆசிரியருடனும், வலயக்கல்வி அலுவலக வழிகாட்டி ஆலோசனை சேவையுடனும் தொடர்பு படுத்த வேண்டும்.

இப்பிள்ளைகளின் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்க அவர்களுக் கென்று வங்கி கணக்குகளை ஆரம்பிக்க பாடசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். சேமிப்பு பழக்கத்தை மேற்பார்வை செய்ய அவர்களை ஒரு குழுவாக்கி அவர்களுக்கு தலைமைத்துவத்தை வழங்க வேண்டும். அக்குழுவிற்கு பொறுப்பாக ஒரு ஆசிரியரை நியமிக்க வேண்டும். பாடசாலையில் மாணவர் மன்ற தலைவர்கள், இல்ல விளையாட்டு போட்டியில் இல்லத்தலைவர்கள், வகுப்புத்தலைவர் பொறுப்புக்களை குறித்த மாணவருக்கு வழங்க வேண்டும். பாடசாலையில் நடைபெறும் தமிழ்த்தின, கணித விஞ்ஞான ஆங்கில தின போட்டிகள், சுற்றாடல் தின போட்டிகளில் பங்கெடுக்க அதிபர் ஆசிரியர்களை ஊக்குவிக்க வேண்டும். இப்பிள்ளைகளின் பொழுதுபோக்கு வசதிகளை மேம்படுத்த சிறுவர் பூங்காக்களை பாடசாலையில் ஏற்படுத்த வேண்டும். மாணவர்களின் வாசிப்பு பழக்கத்தின் மூலம் சுயகற்றல் ஊக்குவிக்க நூலகங்களை அமைத்து உதவுதல் வேண்டும். அரச அரசசார்பற்ற நிறுவனங்கள் வீட்டில் பிள்ளைகளின் சுயகற்றலை அவதானிக் கக் கூடிய பொறிமுறையொன்றை அபிவிருத்தி அலுவலர்கள், கிராம சேவையாளர்கள் ஊடாக நடைமுறை படுத்த வேண்டும். ஆய்வு பிரச்சினை யுடைய பிள்ளைகளின் கற்றலுக்கு தடையாகவுள்ள பிரச்சினைகள், பிள்ளைகளின் தந்தைமார் எதிர் நோக்கும் பிரச்சினைகள், பிள்ளைகளின் பாதுகாவலர் எதிர்நோக்கும் பிரச்சினை களை கண்டறிந்து அவர்களுக்கு வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்க சிறப்பு பிரிவொன்றை பிரதேச செயலகத்தில் அமைத்தல் வேண்டும். பிள்ளைகள் கல்விநிலைகளை வெளி நாட்டிலுள்ள தாய்மார் விசாரிக்கக்கூடிய இணைய வழி தொடர்பாடலை (ஸ்கைப்) ஏற்படுத்திக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். தாய்மார் வெளிநாடு சென்ற பிள்ளைகளுக்கு. துஸ்பிரயோகம் தொடர்பான ஆசிரியர்கள் பொறுப்பு நிற்பதற்கு அஞ்சும் தருணத்தில் அவர்களுக்கு வலுவூட்டுவதற்கு சிறுவர் நன்னடத்தை பிரிவும், பெண்கள், சிறுவர் பாதுகாப்பு பொலிஸ் பிரிவும் பெற்றோருடன் இணைந்து செயற்படும் ஒன்றிணைந்த பொறிமுறை ஒன்றை உருவாக்க கிராமிய சிறுவர் கழகங்கள் மூலமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். பிள்ளைகளுக்கு பாலியல் துஸ்பிரயோக சம்பவங்கள் நடை பெற்றபின் நடவடிக்கை எடுக்காமல் முற்கூட்டியே விழிப்புணர்வை பெற்றோர் பிள்ளைகள், ஆசிரியர்கள் சமூகம் மட்டில் ஏற்படுத்த சிறுவர் நன்னடத்தை பிரிவு, பிரதேச செயலகம், பாடசாலை, பெண்கள் சிறுவர் பாதுகாப்பு பொலிஸ் பிரிவு ஒன்றிணைந்து இயங்குதல் வேண்டும்.

கணவனை இழந்த அல்லது கணவனால் கைவிடப்பட்ட தாய்மாருக்கு அவர்கள் தமது குடும்ப வருமானத்திற்காக பிள்ளைகளை பிரியாமல் இருப்பதற்காக சுய தொழில் வாய்ப்புகளை மேற்கொள்ள உள்ளீட்டு கடனுதவிகளை வழங்க பொருளாதார அபிவிருத்தி அமைச்சினூடாக நடவடிக்கை எடுக்க வேண்டும். வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியத்தினூடாக பிள்ளைகளின் கற்றலுக்கு தேவையான உதவிகளை பெற்றுக்கொள்ள அபிவிருத்தி அலுவலர், கிராம சேவையாளர், பாடசாலை அதிபர் வழிகாட்ட வேண்டும். சட்ட விரோதமாக தாய்மார் வெளிநாடு செல்வதைத் தடுக்க பிரதேச செயலகம் பொலிசாரின் உதவியை பெறுதல் வேண்டும். வெளிநாடு சென்ற தாய்மார் கல்விகற்றலுக்கு தேவையான பணத்தை அனுப்ப தாமதமாகும்போது பிள்ளைகளுக்கு கடன் அடிப்படையில் பணம் வழங்கி கல்வியை ஊக்குவிக்க பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, வங்கிகள் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

பிரதேசங்கள் தோறும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களை அமைத்து பாடசாலை தவிர்ந்த நேரங்களில் அவர்களின் கல்வியை கண்காணிக்க சமூக அமைப்புகள் உதவ வேண்டும். தாய்மார் வெளிநாடு செல்வதால் பிள்ளைகளுக்கு அன்பு, பாதுகாப்பு, வீட்டில் கற்பதற்கான ஊக்கம், கற்பதற்கான பெற்றோரின் உதவி கிடைக்காமல் போகின்றது. எனவே தாய்மார்கள் வெளிநாடு செல்லும் வீத்தினை குறைப்பதற்கு குடும்பங்கள் நிரந்தர வருமானத்தைப் பெற்றுக் கொள்ளும் வழிகளை கண்டடைய வேண்டும். மற்றும் குடும்பத்தில் ஒற்றுமையும், அன்பும், புரிந்துணர்வும் ஏற்பட வேண்டும். இதன்மூலம் பிள்ளைகளுக்கு தேவையான கல்வி, அன்பு, பாதுகாப்பு, என்பவற்றை தாயால் வழங்க முடியும். இதனால் எதிர்காலத்தில் இப்பிள்ளைகள் சிறந்த கல்வியை பெற்று முழு ஆளுமை யுடைய சமூகத் தலைவர்களாக மாறுவார்கள். இதனால் அவர்கள் வாழும் சமுகமும் உயரும். சமுகம் உயரும் போது நாடும் செழிப்புறும்.

**உசாத்துணை நூற்பட்டியல்**

1. தொழிலின் நிமித்தம் வெளிநாடு செல்லும் பெண்களுக்கான அறிவுறுத் தல்கள்
(2013) சிறுவர் பெண்கள் அபிவிருத்தி பிரிவு பிரதேச செயலகம், மன்னார்.

2. மன்னார் கல்வி வலய பாடசாலைகளின் புள்ளி விபரவியல் திரட்டு (2013) மன்னார் கல்வித் திணைக்களம் இலங்கை.

3. மன்னார் கோட்ட பாடசாலை களின் தவணைப் பரீட்சை பெறுபேற்று அறிக்கை (2013 - 2014) மன்னார் கல்வித்திணைக்களம், இலங்கை.

4. மன்னார் கோட்ட பாடசாலை களில் மாணவர் வரவுப்பதிவேட்டு புத்தகம்
(2013 - 2014) மன்னார் கல்வித் திணைக்களம் இலங்கை.

# இருமொழிக்கல்வியில் ஆங்கில மொழி மூலம் கற்பிக்கும் ஆசிரியர்கள் தொடர்பான பிரச்சனைகளும், தீர்வுத்திட்டங்களும்

செல்வி. S.S. ராஜி பெர்னாண்டோ B.Com (Hons), PGDE (Merit), MEd. Reading - ஆசிரியர் - மன் / எருக்கலம்பிட்டி முஸ்லிம் ம.ம.வி.

## அறிமுகம்

நவீன முகாமைத்துவத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கு நாம் இப்பொழுது வாழுகின்ற அறிவுப் பொருளாதார சூழல் அதன் தாக்கங்கள் பற்றிய அறிவு முக்கியமானது. இன்று இயந்திர உலகில் இருந்து விடுபட்டுத் தகவல் தொழில் நுட்ப உலகில் காலடி எடுத்து வைத்திருக்கின்றோம். சகல துறைகளிலும் அடிப்படையில் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டு வருகின்றன. கணினியின் முக்கியத்துவமும் அதன் தாக்கமும் தொழில் நிறுவனங்களில் முக்கியத்துவம் பெறுகின்றன. இப் பின்னணியில் ஆங்கிலமொழி இக்கால கட்டத்தில் மிக முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. இதன் விளைவாக இன்று பல்வேறு மட்டங்களிலும் ஆங்கிலக் கல்வியினை விருத்தி செய்வதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இருமொழிக் கல்வியானது 2001 இலிருந்து மீண்டும் பாடசாலைக் கல்வியில் முதன்மை பெற்றுள்ளது. இதனுடைய அண்மைக் காலத்தின் வரலாற்றுக்கிணங்க இது ஆங்கில மொழிமூல கல்வி என அழைக்கப் படுகின்றது. ஆரம்பத்தில் இது க.பொ.த உயர்தரத்தில் விஞ்ஞான கற்கைகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. 2002 இல் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளுக்கு ஒரு சில பாடங்களை ஆங்கிலத்திலும் ஏனையவற்றை தமது தாய் மொழியிலும் கற்க வழிவகுக்கப் பட்டது. இவ்விரு வகையிலும் ஆங்கில மொழியை ஒரு தொடர்புபடுத்தும் மொழியாக வளர்ப்பதை நோக்காகக் கொள்ளப்படும். எனினும் இருமொழிக் கல்வி பயில்வோரின் ஆளுமை அபிவிருத்தியில் இது பெரிதும் செல்வாக்குச் செலுத்தவில்லை.

இலங்கையில் அண்மைக்கால கல்வி சார் கொள்கைகளில் இருமொழிக் கல்வி மற்றும் அதன் உபயோகம் பற்றி முதன் முதன் முதலில் தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப் பட்டு 2003 இல் அறிக்கைப்படுத்தப் பட்டது. இருமொழிக் கல்வியில் தரம் 6 இலிருந்து வருடாவருடம் இடைநிலையில் கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பமும் கணினியும் மற்றும் சமூகவியல் போன்ற பாடங்களை ஆங்கிலத்தினை ஊடகமாக பயன் படுத்தி வளர்க்கப்பட வேண்டும். இது ஆசிரிய வளத்தில் தங்கியுள்ளது. இதன் மூலம் கனிஷ்ட இடைநிலை கல்வியின் மாணவர்கள் ஆங்கிலத்தில் குறிப்பிடத்

தக்களவு புலமையை அடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்குப் பிறகு எந்தவொரு குறிக்கோள்களும் அறிமுகப்படுத்தப்படவில்லை. கல்வி அமைச்சு சில சுற்று நிருபங்களை 2008 இல் வெளியிட்டிருந்தது.

இருமொழிக்கல்வியானது பாடசாலை மட்டத்தில் அறிமுகப் படுத்தப்பட்டதன் முக்கிய நோக்கம் ஆங்கிலத்திறன் விருத்தியை அதிகரிப் பதற்காகும். அதாவது பாடசாலை மட்டத்தில் காணப்படும் கலைத் திட்டத்தினூடாக ஆங்கில மொழியை ஊக்குவிப்பதே நோக்கமாகும்.

இருமொழியில் கற்போர் பின்வரும் 2 சவால்களை எதிர் கொள்ளவேண்டி ஏற்படுகின்றது.

- இரண்டாம் மொழியை அல்லது வெளிநாட்டு மொழியைக்கற்றல்.
- கலைத்திட்டப் பாடங்களை உள்ளீட்டு இலக்குடன் கற்றல்.

அதேவேளை இருமொழி மூலம் கற்பிக்கும் ஆசிரியர்கள் இருமொழிக் கல்வி மூலம் பாடரீதியான அறிவையும், அதனை கற்பிப்பதற்குரிய வழிமுறைகள் வடிவமைப்பையும் பொதுவாகவும் விசேடமாகவும் கொண்டிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர்.

இன்று பூகோள மயமாக்கல் மற்றும் அறிவுப்பொருளாதார பின்னணியில் தொடர்பாடற் துறையில் ஏற்பட்ட விரைவான மாற்றங்களை அடிப்படையாக வைத்துப்பார்க்கும் போது சர்வதேச மொழியில் கற்பித்தல் அவசிய தேவையாக உள்ளது என்பது புலனாகிறது. இலங்கையர்களுக்கு பழக்கப்பட்ட சர்வதேச மொழியாக இருப்பது ஆங்கில மொழியாகும். பல்கலைக்கழக கல்வி உட்பட உயர்கல்விக்கு அனுமதி பெற வேண்டுமானால் ஆங்கில அறிவு அவசியமாக உள்ளது. அந்த வகையில் ஆங்கிலக்கல்வியையும் ஆங்கில மொழி மூலக்கல்வியையும் முன்னேற்றும் நோக்கிலேயே இருமொழிக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் உருவாக்கப்பட்டன. ஆறாம் தரத்திலிருந்து நடைமுறைப் படுத்தப்படும் இருமொழிக் கல்வி வேலைத்திட்டத்தில், இருமொழி என்றால் தெரிவு செய்யப்பட்ட சில பாடங்களை ஆங்கிலத்திலும், மற்றைய பாடங்களை முதலாம் மொழியாகிய தாய்மொழியிலும் கற்றலாகும். இதில் ஆங்கில மொழி மூலம் கற்பிப்பது தொடர்பில் தேவையான வாண்மை நிறைந்த பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இல்லாதிருப்பது பெரிய குறைபாடாகும். எனவே இவ்வாறு மன்னார் கோட்டப் பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் இடர்பாடு தொடர்பாக ஆய்வு செய்து பிரச்சினைகளைக் கண்டறிந்து தீர்வுகளை முன்வைக்கும் பொருட்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

மன்னார் மாவட்டத்தில் காணப்படும் 2 கல்வி வலயங்களில் மன்னார் கல்வி வலயமும் ஒன்றாகும். இவ்வலயத்திலுள்ள 3 கோட்டக்கல்விப் பிரிவுகளில் மன்னார் கோட்டம், நானாட்டான் கோட்டம், முசலிக் கோட்டம் என்பன காணப்படுகின்றன. 2004 ம் ஆண்டில் மன்னார் மாவட்டத்தில் முதன் முறையாக இருமொழிக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. அதனைத்

தொடர்ந்து பல்வேறு ஊக்குவிப்பு செயலமர்வுகள் காரணமாக 15 மன்னார் வலயப்பாடசாலைகளில் இருமொழிக் கல்வி ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக நடத்திச்செல்லப்பட்டும் வந்தது. பின்பு பல்வேறு வகையில் ஆங்கில மொழி மூல ஆசிரியர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள், இடர்பாடுகள் மற்றும் இடமாற்றங்கள் காரணமாக தற்போது இது மன்னார் கோட்டத்திற்குற்பட்ட 5 பாடசாலைகளில் மட்டுமே இது செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அதிலும் 3 தேசிய பாடசாலைகளில் மட்டுமே இவ் இருமொழிக்கல்வி முறையாக தரம் 6 – 11 வரை செயற்படுத்தப்பட்டு வருகின்ற நிலையும் மிகுதி 2 பாடசாலைகளும் தரம் 6 – 8 வரை மட்டுமே தற்போது கொண்டுள்ள நிலையும் காணப்படுகின்றது. எனவே இதனை முறையாக செயற்படுத்தும் நிலை ஆசிரியர்களின் கைகளிலேயே உள்ளது. இது தொடர்பாக ஆசிரியர்களின் இடர்பாடுகளை ஆராய்ந்து அவர்களின் பலவீனங்களை இழிவளவாக்கி அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள வேண்டிய முறைகளையும் கண்டறிந்து தீர்வுகளை முன்வைக்க இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஓர் ஆய்வின் முக்கிய நோக்கம் அவ்வாய்வு தொடர்பான விடயங்களிலுள்ள முக்கிய அம்சங்களைக் கண்டுபிடித்தலும் அதற்கான தீர்வுகளை முன்வைப்பதுமாகும். இந்த வகையில் இவ் ஆய்வுப்பிரச்சினை சம்பந்தமாக தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு எளிய புள்ளிவிபரவியல் கணிப்புகள் மூலம் ஆய்வுப்பிரச்சினைக்கான காரணங்கள் இனங்காணப்பட்டன. இங்கு இப்பிரச்சினை தொடர்பாக ஆசிரியரை மட்டும் நோக்காது மாணவர், கல்வி நிர்வாகம், கல்விச்சூழல் மற்றும் பெற்றோர் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. இப்பிரச்சினை முழுவதையும் தீர்ப்பது சாத்தியமற்றதாகும். எனினும் இனங்காணப்பட்ட நலிவான விடயங்களை நலிவுகளிலிருந்து மீட்பதற்கும், நலிவுகளை நீக்குவதற்கும் மேலும் முன்னேற்றுவதற்கான வழிமுறைகளை முன்மொழிவதற்கும் உதவுவதாக இவ்வாய்வு அமைகின்றது.

**மாணவர் தொடர்பான பிரச்சினைகள்:**

- உச்சரிப்புத்திறன், வாசிப்புப் பழக்கம், நடைமுறைத் தேவைக்கேற்ப வாசிக்கின்றதான தன்மை, ஆங்கிலமொழி மூல திறன் என்பவை தரமிடும் அளவுப் பெறுமானத்தின்படி சராசரிப் பெறுமானத்திலும் குறைவாகவே காணப்படுகின்றன.
- ஆசிரியர்கள் ஆங்கிலமொழி மூலம் அறிவுறுத்தல்களை வழங்கும் போது மாணவர்கள் அதனை செவமடுத்து துலங்கும் தன்மை இல்லாததையும், அதேவேளை தாய்மொழி மூலம் அறிவுறுத்தல்களை வழங்கும் போது மாணவர்கள் அதனை செவமடுத்து துலங்கும் தன்மையை இங்கு காணக்கூடியதாக இருந்தது.
- இருமொழி, மாணவரிடையே ஒரு இயல்பான கருத்து வெளிப்பாடு காணமுடியவில்லை.
- வகுப்பறையில் வாய்மொழி மூலமான பிரதிபலிப்பிற்கு இருமொழி மாணவர் முகம் கொடுக்க வேண்டிய நிலையை அவதானிக்க முடிந்தது.

- இருமொழி மாணவர்கள் தங்களிடையே கருத்துக்களை ஆங்கிலமொழி மூலம் பரிமாறிக் கொள்வதில் அவதியுறுவதையும், அத்துடன் அவர்கள் களைத்துப் போவதையும் காணக்கூடியதாக இருந்தது.
- இருமொழி மாணவர்கள் தமது சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவு பெறும் தன்மை இல்லாதிருந்தது.

**ஆசிரியர் தொடர்பான பிரச்சினைகள்:**

- இருமொழி ஆசிரியர்களைப் பொறுத்தவரை அவர்களது கல்வித் தகைமை, தொழில் தகைமை என்பவற்றை வளர்ப்பதில் தடைகள் காணப்படுகின்றன.
- இருமொழி ஆசிரியர்கள் அவர்களது தொழில் தொடர்பான வாண்மையை வளர்ப்பதில் பயிற்சியின்மையால் அதிக தடைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய தேவை காணப் படுகின்றது.
- இருமொழியில் கற்பிக்கும் எந்தவொரு ஆசிரியரும் கற்பிக்கும் போது மாணவர்களுக்கு பாடம் தொடர்பான கையேடுகள் (Handouts) வழங்காததை காணக்கூடியதாக இருந்தது.
- பாடத்திற்கு பொருந்தக்கூடிய வகையில் கற்பித்தல் உபகரணங் களை அனேகமான ஆசிரியர்கள் பாவிக்கவில்லை.
- நவீன கற்பித்தல் சாதனங்களை (உதாரணமாக "Multi Media teaching – Power Point presentation") தயாரிப்பதில் இடர்படுகின்றார்கள்.
- ஆங்கில மொழியைப் பேசுவதில் புலமை குறைவான ஆசிரியர்கள் வகுப்பறையில் முன்வைத்தல் நடவடிக்கையில் ஈடுபட மிகவும் அல்லல்படுவதைக் காணக்கூடியதாக இருந்தது.
- ஆங்கிலமொழி மூல அனேக ஆசிரியர்கள் ஆங்கிலத்தில் புலமை குறைந்தவர்களாகவே ஆய்வாளரால் காண முடிந்தது.
- மாணவர்களுக்கு பொருத்தமான கற்றல் சூழலை உருவாக்குவதில் ஆசிரியர்கள் அதிக இடர்களுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக காணப்பட்டனர்.
- அனேகமாக ஆங்கிலமொழி மூல ஆசிரியர்கள் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்களாக காணப் படுவதால் வார விடுமுறைகளில் தமது மாவட்டங்களை நோக்கி படையெடுக்கக் கூடிய தன்மையை அவதானிக்க முடிந்தது. இதன் காரணமாக மேலதிக வகுப்புக்கள் அவர்களால் மேற்கொள்ளப் படாததை அவதானிக்க முடிந்தது.

**கல்வி நிர்வாகம் தொடர்பான பிரச்சினைகள்:**

- ஆங்கில மொழிமூல மாணவர்களுக்கென ஒரு தனியலகு பேணப்படவில்லை.
- பாடசாலை நிர்வாகமானது இருமொழிக் கற்றலுக்கு ஆக்கமோ ஊக்கமோ வழங்கி அதற்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை. ஏனைய தாய்மொழிக்கல்வி போலவே இதையும் எண்ணி

முக்கியத்துவம் அளிக்காததை அவதானிக்க முடிந்தது.

- காலம் (*Time Period*) என்பது இருமொழி மூல ஆசிரியருக்கும் அதே போல் இருமொழி மூல மாணவருக்கும் மிகப்பெரிய சவாலாகவே உள்ளது.

**பெற்றோர் தொடர்பானது**

எல்லா பெற்றோரும் தமது பிள்ளைகள் இருமொழியில் கற்பதில் அதிக நாட்டம் காட்டுவதில்லை. அனேகமான இருமொழியில் கற்கும் மாணவர்களின் பெற்றோர் தமது பிள்ளைகளின் இருமொழிக் கற்றலில் மகிழ்ச்சியுடன் ஆர்வம் காட்டுகின்றனர். ஆனாலும் அவர்களின் ஆங்கில அறிவு குறைவினால் அவர்களது பிள்ளைகளை முறையாக கவனிக்க முடியாத நிலை இங்கு காணக்கூடியதாக உள்ளது. ஒரு சில பெற்றோர் மட்டுமே ஆங்கில அறிவுடன் உள்ளதைக் காணக்கூடியதாக இருந்தது.

**கல்விச் சூழல் தொடர்பானது**

கல்விச்சூழலானது மொழி விருத்திக்கு எதிராக உள்ளது. இருமொழி மூல மாணவர்களைப் பொறுத்தவரை அவர்களது ஆங்கில மொழிவிருத்திக்குரிய சூழல் கட்டாயமாக உருவாக்கப் படல் வேண்டும். அவர்களது வாய்மொழி விருத்தியை வளர்ப்பதற் கேற்ற சூழல் காணப்படவேண்டும். ஆய்வாளரைப் பொறுத்தவரை, ஆங்கில மொழிவிருத்திக்குரிய எந்த வொரு பொருத்தமான சூழலையும் காணவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

**மாணவர்கள் சார்பான பிரச்சினைகளுக்கான பரிந்துரைகள்**

- மாணவர்கள் நாளாந்தம் படிப்பதற்கும், கூடுதலான பயிற்சிகளில் ஈடுபடுதவதற்கும் ஊக்கமளிக்க வேண்டும்.
- இணைப்பாட விதானங் களுக்குரிய பொருத்தமான நேரங்களை ஒதுக்க வேண்டும்.
- மாணவர்கள் விரும்பும் கற்றல் கற்பித்தல் முறைகளைக் கையாள வேண்டும்.
- மாணவர்களது கற்றலை மேம்படுத்தும் நவீன சாதனங்கள் பயன்படுத்த வேண்டும்.
- ஆங்கிலமொழி வாசிப்புப் பழக்கத்திற்கு ஊக்கமளிக்க வேண்டும்.
- ஆசிரியர்கள் இன்றி சுயமாக கற்றல் செயற்பாட்டை மேற் கொள்ள உதவுதல்.
- ஆக்கத்திறனை வளர்த்துக் கொள்ளல்.
- புதிய அறிவைப் பெற்றுக் கொள்ளல்.
- ஏனைய ஊடகங்களுக்கு அடிமையாவதை குறைத்தல். (தொலைக்காட்சி, கணணி, கைத்தொலைபேசி)
- மொழியறிவு, இரசனை விருத்தி, செவிமடுக்கும் தன்மை போன்ற வற்றைக் கூட்டுதல்.
- சிறந்த சிந்தனைகள், சிறந்த வாழ்க்கைப் பழக்க வழக்கங்கள், சமூகப்பெறுமதிகள் சீர்குலை

தல் போன்றவற்றிலிருந்து தம்மை பாதுகாத்தல்.

- ஊடகங்களைப் பயன்படுத்து வதற்காக மாணவர்களைப் பயிற்றுவித்தல், கண்காட்சி வைத்தல், கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகள், கலந்துரையாடல்கள், சுவர்ப் பத்திரிகை, வாசகர் வட்டம், போட்டி நிகழ்ச்சிகள் வாசிப்புப் பழக்கதினை ஊக்குவிப்பதற் கான செயற்பாடுகளாக மேற் கொள்ளலாம்.
- அத்துடன் பரீட்சை பெறுபேறுகளின் உச்ச மட்டத்தினை அடையக்கூடியதான எதிர் பார்ப்பைக் கூட்டுதல்.
- பாடங்களுக்கான வினாக்களை வழங்கி விடையை சுயமாக எழுதுவதற்கும் புத்தகத்தை அதிகம் பயன்படுத்துவதற்கும் சந்தர்ப்பம் வழங்கல்.
- மாணவர்கள் தினமும் ஆங்கிலப்பத்திரிகை வாசிப்பதை ஊக்குவிப்பதோடு அதனை உறுதிப்படுத்தவும் வேண்டும்.
- ஆங்கில மொழிப்பாட ஆசிரியர்கள் மட்டுமன்றி ஏனைய இருமொழிமூல பாட ஆசிரியர் களும் ஆங்கில மொழியில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.
- ஆங்கிலமொழிமூல நூலகங்களை அதிகம் நாடச்செய்தல்.
- பாடசாலையில் சூழவுள்ள நூலகம் சனசமூக நிலையம் போன்றவற்றை மாணவர்கள் பயன்படுத்துவதை உறுதிப் படுத்த வேண்டும்.

**பெற்றோர் சார்பான பிரச்சினைகளுக்கான பரிந்துரைகள்**

- ஒவ்வொரு பெற்றோரும் கல்வியின் மகத்துவத்தை உணரவேண்டும்.
- தமது பிள்ளைகளின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான விழிப்புணர்வு பெறவேண்டும்.
- தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பிள்ளைகளின் எதிர் காலத்தை பாதிப்படையச் செய்யும் நிலைகளை அகற்ற வேண்டும்.
- பெற்றோரின் அறியாமையே காரணம் என்பதை வலியுறுத்தி விழிப்புணர்வைப் பெறுதல்.
- அடிக்கடி ஆசிரியர்களை சந்தித்து பிள்ளை பற்றி கேட்டறிதல் வேண்டும்.
- பெற்றோருக்கு கல்வியறிவு இல்லாவிடினும் பிள்ளைகளின் கல்வியின் அவசியம் பற்றி அறிதல்.
- பிள்ளைகள் நாளாந்தம் பாடசாலைக்குச் செல்வதை உறுதிப்படுத்தல்.
- கட்டாயக் கல்வியின் அவசியத்தையும் அதனை வழங்காது விடுவதால் ஏற்படும் பாதிப்பு, தண்டணைகளை அறிதல்.
- வீடுகளில் தொலைக்காட்சிப் பாவனையை இழிவளவாக்க வேண்டும்.

- பொருத்தமான வீட்டுச் சூழலை உருவாக்குதல்.
- ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் இடைவினை உறவுகள் ஒரு முக்கோண தொடரில் அமைய வேண்டும்.

**ஆசிரியர்கள் சார்பான பிரச்சினைகளுக்கான பரிந்துரைகள்**

- ஆங்கில மொழியை வளப் படுத்தல்.
- தங்களது பாடரீதியாக ஆங்கில மொழிமூல வளங்களைத் தேடிப்பெறுதல்.
- கூடுதலாக நவீன கற்பித்தல் முறைகளையும், நவீன கற் பித்தல் சாதனங்களையும் பயன்படுத்துதல்.
- இணையங்களை அடிக்கடி பயன் படுத் துவதனூடாக ஆசிரியர் தம்மை இற்றைப் படுத்திக்கொள்ளுதல்.
- பாடரீதியான செயலமர்வுகள் அது எம்மொழியில் இடம் பெற்றாலும் தவறாது கலந்து கொள்ளுதல்.
- கூடுதலாக ஆங்கிலமொழிமூல நூலக அமைப்பு ஒன்றினைப் பாடசாலைகளில் ஏற்படுத்தி அதில் இருமொழி மாணவர் களை வினைத்திறனுடன் ஈடுபடுத்தல்.
- பாடசாலைகளில் காணப்படும் கணினி வளத்தை உச்ச மட்டத்தில் பயன்படுத்தல்.
- கையேடுகளை தயாரித்து மாணவர்களுக்கு வழங்க வேண்டும்.
- பாட ரீதியான களப்பயணங் களை மேற்கொள்ளுதல்.
- தற்போது வெளிவந்திருக்கும் ஆசிரியர் அறிவுரைப்பு வழி காட்டியில் ஒவ்வொரு பாடத்து டனும் தொடர்புடைய வீடியோ இணைப்புக்கள் கொண்ட (Link) காணப்படுகின்றது. அவற்றை வினைத்திறனாக பயன்படுத்தி மாணவரின் கற்றலை கவர்ச்சி யாக்குவதனூடாக இலகு வாக்குதல்.
- இருமொழி மூல மாணவரின் கல்வி தொடர்பாக விழிப்புணர்வு பெறுதல்.
- மாணவரது பெற்றோரை இடை இடையே பாடசாலைக்கு வர வழைத்து மாணவரது ஒழுங்கீன த்தை, அதனால் ஏற்படும் பாதிப்புக்களை விளக்கி அதற் கான பரிகாரத்தை மேற்கொள்ள பெற்றோரை ஆற்றுப்படுத்தல்.
- மாணவர் பிரச்சனைகள் தனி யாள் பிரச்சனையாக நுணுக் கமாக ஆழமாக ஆராய்வுடன் நோக்கப்பட்டு தீர்க்கப்பட வேண்டும்.
- மாணவக் குழுக்களுக்கிடையி லான கற்றல் போட்டிகளை ஏற்படுத்தல்.
- ஆங்கிலமொழிமூல சொற் களஞ்சியம் அல்லது அதிக மான சொற்களுக்கு பொருள் தெரிய வைப்பதற்கான நீண்ட

வாக்கியங்களை வாசிப்பதற்கு வளப்படுத்தல்.

- ஆங்கிலமொழி மூல வாசித்தலோடு தொடர்புடைய நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்.
- ஆங்கிலமொழி மூல சஞ்சிகையாக்கம் கவர்ச்சிகரமான வாசிப்பை தூண்டக்கூடிய படங்களோடு கூடிய கற்றலைத் தூண்டக்கூடிய நூல்களை வழங்குதல்.
- மாணவர் கல்வியில் சுயநாட்டம் காண்பதற்கு பிற சூழ்நிலைகள் இசைவு படுத்தப்படல் வேண்டும்.
- மாணவர்கள் தம்மைத்தாமே மதிப்பீடு செய்வதற்கான ஆற்றலை அவர்களிடத்தில் ஏற்படுத்த தூண்டப்பட வேண்டும்.

**பாடசாலை நிர்வாகம் சார்பான பிரச்சினைகளுக்கானபரிந்துரைகள்**

- பெற்றோருடனான தொடர்பை விரிவுபடுத்தல்.
- வகுப்பறைச் சூழலை பொருத்தமானதாக்குதல்.
- நூலகப் பயன்பாட்டை அதிகரித்தலும் வளமான நூலகமாக்கலும்.
- ஆசிரியருக்குத் தேவையான ஆங்கிலமொழிமூல பாடரீதியான பயிற்சித்தேவைகளை கேட்டறிந்து அதை நிறைவேற்றுதல்.
- ஆங்கிலமொழிமூல நூலகப் புத்தகங்களைப் பெற்றுக் கொடுத்தல்.
- பாடசாலைகளில் பல்லூடக எறியிக்கு என ஒரு தனியான அலகு பேணுதல்.
- பாடசாலைகளில் காணப்படும் மேலதிக கணினிகளை தனியான அலகாக பேணி ஐஊவு ஆசிரியர்கள் மட்டுமல்லாமல் எல்லா ஆசிரியர்களும் பயன்படுத்த வகை செய்தல்.
- ஆசிரியர்கள் தமது லீவு விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.
- குறித்த காலப்பகுதியில் பாடத் திட்டங்கள் நிறைவு செய்யப்படல் வேண்டும்.
- மெல்லக்கற்கும் மாணவரிடத்திலும் மீத்திறன் மாணவர்களிடத்திலும் விசேட கவனம் செலுத்த வேண்டும்.
- கவின் நிலை மிக்க வகுப்பறையை உருவாக்குதல்.
- கற்றல் கற்பித்தல் சாதனங்களின் பயன்பாட்டை அதிகரிக்க வேண்டும்.
- கையேடுகளை தயாரித்து மாணவர்களுக்கு வழங்குவதில் ஆசிரியருக்கு உதவுதல்.
- வருடத்திற்கு ஒரு தடவையாவது கல்விச் சுற்றுலாவுக்கான ஒழுங்கு செய்ய வேண்டும்.
- பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்தி (SBTD) செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டும்.

## ஆய்வு முடிவுகளும் முன்மொழிவுகளும்

இருமொழி மாணவர்களின் கற்றலின் ஆர்வத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் மாணவர் சார் காரணிகள், குடும்பம் சார்காரணிகள், பாடசாலை சார் காரணிகள் இவ்வா றான காரணிகள் மூலம் பெறப்படுகின்ற தரவுகளின் அடிப்படையில் திரட்டப் பட்ட பிரச்சனை தொடர்பாக ஆய்வாளரால் அடையாளம் காணப் பட்ட காரணிகள் முன் வைக்கப்பட்டு மாணவரை கற்றலில் ஊக்குவிக்கும் காரணிகள் முன்வைக்கப்பட்டு இரு மொழிப் பாடசாலைகளை அடிப்படை யாகக் கொண்டு செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் அதன் வழிமுறைகள் அளவிடக்கூடிய சுட்டிகள் என்பவற்றை ஒழுங்கமைக்கப்பட்டு அதன்பால் கிடைக்கப்பட்ட முடிவுகள் இங்கு எடுத்துக் காட்டப்படுவதுடன் எதிர் கால ஆய்விற்கான முன்மொழிவுகளும் ஆய்வில் முன்வைக்கப்படுகின்றது.

மன்னார் கோட்ட பாடசாலை களில் ஐந்து பாடசாலைகளை மையமாகக் கொண்டு இருமொழிக் கல்வியில் ஆங்கில மொழிமூலம் கற்பிக்கும் ஆசிரியர் தொடர்பான பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு இவ் ஆய்வு மேற் கொள்ளப் பட்டது. சேகரிக்கப்பட்ட தகவல்களின் ஊடாக தரவுப் பகுப்பாய்வும் கருது கோள்கள் ஏற்றுக் கொள்ளகூடிய நிலைகளும் இருமொழிமூல மாணவர் களின் கற்றல் தொடர்பான ஆர்வத்தை அறிந்து கொள்ளக்கூடியதாக காரணி கள் சுட்டிக் காட்டப்பட்டது. இதனை அளவிடும் சுட்டிகள் மூலமாக வினாக் கொத்து, கலந்துரையாடல், அவதானிப் பின் மூலமாக பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகளின் அடிப்படையில் முன் வைக்கப்பட்டது.

- அரசாங்கத்தினால் இருமொழிக் கல்வியின் முக்கியத்துவம் மற்றும் தேவைகள் தொடர்பான விழிப் புணர்வு ஏற்படுத்தப்படல் வேண்டும்.
- இருமொழி ஆசிரியர்களுக்கான பயிற்சிப்பட்டறைகள் வலுவூட்டப் படல் வேண்டும்.
- இருமொழிக்கல்விக்கு நிர்வாக உதவிகள் வலுவூட்டப்படுவதுடன் விரிவாக்கப்படலும் வேண்டும்.
- நிர்வாகத்தினால் பொருத்தமான பௌதீக வளம் மற்றும் மனித வள ஒதுக்கீடுகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.
- விடய அறிவையும் மொழி அறிவையும் விருத்தி செய்வதற்கு ஆசிரியர்கள், மேலதிக பணிப்பாளர் கள் மற்றும் இது தொடர்பான பொறுப்பான ஆளணியினருக்கு புலமைப்பரிசில் திட்டம் அறிமுகப் படுத்தப்பட வேண:டும்.
- தனியார் கல்விப் பிரிவிற்கு குறிப்பிடும் படியாக பிரத்தியேக வகுப்புக்களை அதிகரிப்பதற்கு சமூக ஒத்துழைப்புகள் வழங்கப்பட வேண்டும்.
- விடய அறிவு மற்றும் மொழி யறிவு விருத்தியில் தனியார் கல்வி துறைகள் பாரிய உதவிகள் வழங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த முறைமையை உற்சாகமூட்டு வதற்கு பிரதேச, வலய, மாகாண, தேசிய மட்டங்களில் ஒரு சக்திமிக்க மேற்பார்வை முறைமை ஆரம்பி க்கப்படல் வேண்டும்.
- பாடசாலை மட்டங்களில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் நிர்வாக

முறைமை ஆகியவை மத்தியில் ஒரு நல்ல விருத்தியடைந்த இணைப்பு முறைமை ஆரம்பிக்கப் படல் வேண்டும்.

- உள்நாட்டு மனித வளத்தை வலுவூட்டுவதற்கு பயிற்சிப் பட்டறை களை செயற்பாடு மிக்கதாக்கு வதற்கு கடல் கடந்த மனிதவளம் அழைக்கப்படல் வேண்டும்.
- இருமொழி மாணவர்கள் இடை நிலை மட்டத்தில் இடைவிலகல் வீதங்கள் குறைக்கப்படல் வேண்டும்.

**முடிவுரை**

கல்விப் புலத்தில் ஏற்படும் ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் உடனடியாக ஆய்வின் மூலம் தீர்வு காணப்படல் வேண்டும். இங்கு "இருமொழிக்கல்வியில் ஆங்கிலமொழி மூலம் கற்பிக்கும் ஆசிரியர்கள் தொடர்பான பிரச்சினைகள்" என்னும் இவ் ஆய்வில் பல்வேறு தகவல்கள் திரட்டப்பட்டு அடையாளம் காணப்பட்டு பிரச்சனையை தீர்த்துக் கொள்வதற் கான வழிமுறைகளும், செயற்றிட்ட நடைமுறையின் அடிப்படையில் பரிசோதிக்கப்பட்டு முடிவுகள் பெறப் பட்டுள்ளன.

இந்த அளவறிநிலை ஆய் வானது ஆய்வாளரால் தெரிவு செய்யப்பட்டமைக்கு பிரதான காரணம் இருமொழிக் கல்வியானது எதிர் காலத்தில் மாணவர்களின் ஆங்கில மொழிமூலம் திறமையை அதிகரிக்க வித்திடுவதாக இருப்பதே காரண மாகும். ஆசிரியர்கள், மாணவர்கள் இப்பாட கற்றல் கற்பித்தலில் பல்வேறு இடர்பாடுகளை எதிர் கொண்டமையும் அவதானிக்கப்பட்டு அதற்கான காரணங் களை கண்டறிவதற்காக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

இங்கு மேற் கொள்ளப்பட்ட ஆய்வில் இருமொழிக்கல்வியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் என்ற அடிப்படையில் மாணவர் சார் காரணிகள், ஆசிரியர் சார் காரணிகள், பாடசாலைசார் காரணிகள், குடும்பம் சார் காரணிகள் போன்றவை செல் வாக்குச் செலுத்தும் காரணிகளாக அமைகின்றன. ●

**Let us always meet each other with Smile,**

**for the smile is the**

**beginning of Love.**

***- Mother Teresa -***

# அறிவு மைய நூற்றாண்டில் ஆசிரியத்துவம்

**திருமதி. A.A. அன்ரன் டபரேரா .**
*ஆசிரியை - மன்/ புனித ஆனாள் ம.ம.வித்தியாலயம், வங்காலை.*

*"அனுபவங்களை மீண்டும் மீண்டும் புனரமைத்தலே கல்வி" (ஜோண் டுயி)*

மாற்றமுறும் உலகின் மாறுதல்களுக்கு ஏற்ப மாற்றம் என்னும் சொல்லைத்தவிர அனைத்தும் மாறிக் கொண்டே இருக்கின்றன. அந்த வகையில் மானிடரான நாமும் புதிய சவால்களை எதிர்கொண்டு வாழ வேண்டும். இன்றைய இருபத்தியொராம் நூற்றாண்டானது அறிவுமையத்தை ஆக்கிரமித்துள்ளது. அதன்படி மானிட சமுதாயம் அறிவுசார் சமூகமாகவும் (Knowledge society) அறிவுப் பொருளாதாரமாகவும் (Knowledge Economy) கற்கும் சமூகமாகவும் (Learning Society) புரட்சியின் அதீதமான வளர்ச்சி, மருத்துவம், உயிரியல், பௌதீகவியல், தொடர்பாடல் தொழில்நுட்பம் போன்ற மனித செயற்பாடுகளில் விந்தை மிகு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இப்புரட்சி ஏற்படுத்தியுள்ள வளர்ச்சி வேகத்தில் கல்வி நிலையங்களும், அவற்றில் நடைபெறுகின்ற மாற்றங்களும் விதிவிலக்கல்ல. கல்விச் செயற்பாட்டிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது கண்கூடு.

புதிய புத்தாயிரம் ஆண்டிற்கான சமூகச் சூழலில் மனிதர்கள் பல்கலாசாரம் மற்றும் உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய ஒரு பூகோள கிராமத்தினுள் கற்கும் மனிதர்களாக இருக்கின்றார்கள். அதேவேளை பல்வேறுபட்ட வகிபாக மாறுதல்களைச் சந்திப்பவர்களாகவும் இருக்கின்றார்கள். அறிவு மையச் சமூகத்தின் மேம்பட்ட மாறுபடும் சூழலில் கல்வியின் தாக்க விளைவுகள் சொல்லற்பாலன. கல்வியினூடாகவே உலகமயமாக்கல், உள்ளூர் மயமாக்கல் தனிமனித மயமாக்கல் என்பவை நிகழ்கின்றன. தகவல் புரட்சியின் அறிவுப் பிரவாகத்தை அனைவரும் பெற்றிட வேண்டும். அன்னப் பறவையானது தண்ணீரை நீக்கி பாலைப் பருகுவது போல நாமும் அவற்றின் நல்ல விளைவுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

Linked in, Muy space - சமூகத் தொழினுட்பவியலும் (Social Techno logy) அதீத வளர்ச்சியை எட்டிநிற்கிறது. அந்தவகையில் இணையம், இணைய வலைத்தளம், முகநூல் (facebook) ருவிற்றர் (Twitter) யூடியூப் (You tube) மற்றும் 2010 ஆம் ஆண்டிற்குப் பின் வெளியான ஸ்மார்ட் போர்ன், 3G, 4G

வலுவுள்ள Tablet போன்ற ஊடாட்ட ஊடகங்களின் ஆதிக்கமும் அதனால் பெருகி வரும் அறிவுத் தகவல்களும் என்றுமில்லாதவாறு உள்ளன. மருத்து வத்துறையிலும் குணப்படுத்த முடியாத நோய்களும் மருத்துவ வசதிகள் புதிய அவயங்களைப் பொருத்துதல் செயற் கையாக உயிர்களை உருவாக்குதல் போன்ற புதுமைகளையும் கண்கூடாகப் பார்க்கின்றோம். இவையாவும் அறி வியல் தந்த புரட்சிகர அம்சங்களாகும்.

இந்நிலையில் கல்வியின் நிலை பற்றி எடுத்து நோக்கினால் சமூக மாற்றத்திற்கான முகவர்களும் ஆசிரியர் களும், கல்வி நிறுவனங்களும் முக்கியத் துவம் பெறுகின்றனர். (Patil, 2012) அறிவு மாற்றத்தினை உள்வாங்கி ஆசிரியர்கள் செயற்பட வேண்டியவர் களாகின்றனர்.

ஆசிரியர் என்பவரின் வகிபாகம் மிகவும் உன்னதமானது “சமூகத்தை வளர்க்கும் சிற்பிகள்” எனவும், அவர்கள் தந்தகோபுரங்களாகவும், ஞான விளக்குகளாகவும் மிளிர்கிறார்கள் (பிளேட்டோ) எனவும் கூறுகின்றார். மேலும் ஆசிரியர்கள் அறிவில் நெருப்பைப் போன்றவர்கள் கனன்று கொண்டிருக்கும் சுவாலைகளைப் போன்றவர்கள். அச்சுவாலையின் ஒளியை அனுபவிப்பவர்கள் மாணவர் கள் எனவும் கூறப்படுகிறது. தொடர்ந்து கற்றுக் கொண்டிருக்கும் ஆசிரியரின் அறிவானது ஓடுகின்ற ஆற்றுநீரைக் குடிப்பதற்கு சமமாகும். அதாவது புதுநீராகவும், சுவையானதாகவும் மூலிகைகளை மோதி அலசி வருவதால் புது வாசனையுடையதாகவும் காணப் படும். இது பருகுவதற்கு ஏற்றது. கற்காத ஆசிரியரிடம் இருக்கும் அறிவானது குளத்து நீரைப்போல் தேங்கி நின்று அழுக்குள்ள நாற்றமடிக்கும் சாக்கடை போன்றது. மேல்காட்டப்பட்டவாறு ஆசிரியன் எப்போதும் தனது அறிவை யதார்த்த உலகிற்கு ஏற்ப இற்றைப் படுத்தி (Update) கொள்ள வேண்டும். அடுத்து அதற்கேற்பவே கலைத் திட்டம், கற்பித்தல் நுட்பங்கள், ஒழுக்க நெறிகளும் மாற்றமடைய வேண்டும். கல்வி மனிதனுக்கு உடனடிப் பயன் விளைவிப்பதாக அமைய வேண்டும். மனிதனை முதன்மைப் படுத்த உரமாக இருப்பவர்கள் ஆசிரியர்கள் என்றால் அது மிகையாகாது. இறந்த பின்னரும் மண்ணில் வாழ்ந்து கொண்டிருப் பவர்கள் வரிசையில் ஆசிரியர்களுக்கு முதலிடம் உண்டு. ஒரு மனிதனை அவனுக்கே அடையாளம் காட்டுப வராக இருப்பதுதான் ஆசிரியரின் சிறப்பியல்புகளில் பிரதானமானது. சிறந்த கல்வியை அளிக்கும் மாபெரும் பணி ஆசிரியர்களைச் சார்ந்துள்ளது. ஏனெனில் ஆசிரியர்கள் உருவாக்கும் மாணவச் சமூகமானது ஒரு நாட்டின் எதிர்காலத்தை மட்டுமல்ல இந்த உலகத்தின் எதிர்காலத்தையே தீர்மா னிக்கின்றது.

ஏனைய தொழில்களைப் போன்று ஆசிரியப்பணி என்பது ஒருவரின் வாழ்வாதாரத்திற்கான தொழில் அல்ல. தனது வாழ்வை ஆதாரமாக்கும் பணி பல வகி பாகங்களில் ஆசிரியப்பணி உயிரோட்ட மான ஆய்வு ரீதியான, உளவியல் ரீதியான, சேவைரீதியான, அர்ப்பணிப் புள்ள, காலநேரமற்ற பல்வேறு பணிகளில் ஈடுபடுகின்றனர். அவரின் சேவைக்கு எல்லை கிடையாது. மனித வாழ்வில் திருப்புமுனையை ஏற்படுத்தி அதற்கு அர்த்தத்தைக் கொடுக்கும் ஒரு

கடமை ஆசிரியருக்கு உள்ளது. உலகிலுள்ள தொழில்களிலே ஆசிரியப் பணியே அதிக திறமைகள் தேவைப் படும் பணி என்று சொல்லுமளவிற்கு அதன் பொறுப்புகள் அதிகம்.

இப்படிப்பட்ட உன்னதமான பணியை ஏற்கும் ஆசிரியர்கள் பலர் மிகவும் வேதனைதரும் செயல்களில் ஈடுபடுவது வருந்தத்தக்கது. அது ஆசிரியர் சமூகத்திற்கே சாபக்கேடாக அமைந்துவிடுகின்றது. பெறப்படும் ஊதியத்திற்கே வேலை செய்யமுடி யாதவர்களாய் உள்ளார்கள். அன்றாட ஊடகங்களில் நாம் காணும் அதிர்ச்சி தரும் சம்பவங்கள் ஆசிரியர் சமூகத் தையே புரட்டிப் போடுகின்றது. மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற முதுமொழியின் இலக்கணத்தையே மாற்றியமைத்து விடுகின்றார்கள். உண்மையில் ஆசிரியர்கள் தொழிலின் மகத்துவம் உணர்ந்து மனச்சான்றின்படி தமக்குக் கொடுக்கப்பட்ட கடமை பொறுப்புக்களை கவனத்தோடு உணர் ந்து செயற்படுகின்றார்களோ? சிந்திக்க வேண்டிய விடயமே.

அடுத்து அறிவுப்புரட்சி யுகம திலே ஆசிரியனானவன். மேற்கூறப் பட்ட தொழிநுட்பக் கருவிகளை, தொழினுட்ப அறிவைப் பிரயோகித்து ஓரளவேனும் அதிலே பரீட்சயமாக உள்ளார்களா? அதில் என்ன விடயங்கள் காணப்படு கின்றன என்பவற்றையாவது நாம் அறிய வேண்டும். அறிவியல் எமக்குப் புதுப்புது விடயங்களை கால ஓட்டத்திற்கேற்ப கற்றுத்தருகின்றது. நாமும் தெரிந்து கொண்டு மாணவருக்கும் கொடுக்க வேண்டிய பல விடயங்கள் உள்ளன.

இன்று ஆசிரியர்கள் காலத்து க்குப் பொருத்தமான தேர்ச்சிகளைப் பெற்றுக் கொள்வதும் அவற்றைக் கற்றல் கற்பித்தல் செயல்முறையில் பிரயோகிப்பதும் ஆசிரியர்களின் கடமை யும் பொறுப்புமாகும். 21 ஆம் நூற்றாண்டிற்கான நவீன ஆசிரியரின் இயல்புகளை அல்லது வகிப்பாகங் களை எடுத்து நொக்கினால்..

- சூழலுடன் இயைபவர் (The Adoptor)
- தொடர்பாளர் (The communicator)
- கற்போன் (Learner)
- தரிசன நோக்குடையவர் (The visionary)
- ஆபத்துக்குத் துணிபவர் (Risk - Taker)
- இணைந்து செயலாற்றுபவர் (The Collaborator)
- முன்னுதாரணமானவர் (The Model)
- தலைவர் (The leader)

அத்துடன் 21 ஆம் நூற்றாண்டிற் கான திறன்களை எடுத்துக் கொண்டால் இலத்திரனியல் யுகத்தின் எழுத்தறிவு (Digital Age literacy) இதனையும் ஆசிரியர்கள் அறிய வேண்டிய கடப் பாட்டிலுள்ளார்கள்.

அடிப்படை எழுத்தறிவு, விஞ் ஞான எழுத்தறிவு பொருளாதார எழுத்தறிவு, தொழிநுட்ப எழுத்தறிவு, கட்புல எழுத்தறிவு, தகவல் எழுத்தறிவு, பல்கலாசார எழுத்தறிவு, உலக அறிவு, கண்டறியும் ஞானம், சுயதிசையாக்கம், ஆர்வம், ஆக்கப்படைப்புத்திறன், ஆபத்துக்களை எதிர்கொள்ளல், மேல்நிலைசிந்தனை மற்றும் விளக் களித்தல் தர்க்கம் செய்தல். குழுவாகச் செயற்படுதல் கூட்டுறவு, ஆட்கிடைத் திறன்கள், தனிப்பட்ட பொறுப்பு, சமூக

மற்றும் குடியியல் பொறுப்புகள், உயிரோட்டமுள்ள இடைச்செயற் பாட்டுத் தொடர்பாடல், முக்கியத்துவப் படுத்தல் திட்டமிடல், யதார்த்தமான உலகின் உபகரணங்களைச் சரியாகப் பயன்படுத்தல் இவையாவற்றையும் ஆசிரியன் ஒருவன் இவ்வறிவியல் யுகத்தில் அறிந்திருக்க வேண்டும்.

மற்றும் ஆசிரியர்கள் தமது தொழில்வாண்மையைப் பொறுத்த மட்டில் தம்மை எப்போதும் இற்றைப் படுத்திக்கொள்ள வேண்டும். தொடங்கு நிலை ஆசிரியர்கல்வி மாத்திரமல்லாது தொடருறு ஆசிரியர் கல்வியும் அதாவது தொழில் செய்யும் காலம் முழுவதும் தொடர்ச்சியான சேவைக்காலப் பயிற்சி யைப் பெற வேண்டும். தகவல்மைய நூற்றாண்டில் வேகமாக மாறிவரும் அறிவை உள்வாங்கிக் கொள்ள வேண்டும். இந்த தொடருறு கல்வி மிகவும் பிரபல்யம் வாய்ந்தது. ஆசிரியர் கல்வித்தர மேம்பாடு தகைமை விருத்தி, மீள் பயிற்சிகள், புத்தாக்கச் செயற் பாடுகள் ஆகியவற்றை மையப் படுத்தியுள்ளது. அடுத்து ஆசிரியர் ஒரு ஆய்வாளர் என்ற எண்ணம் அவனுக்குத் தோன்ற வேண்டும். பல ஆராய்ச்சி களை சமர்ப்பிப்பதில் தேர்ச்சி பெற்றவனாக மாற வேண்டும்.

மற்றும் ஆசிரியர் மீள் நோக்கு சிந்தனையும் கற்பித்தலும் தேவை. ஆசிரியர் கல்வித்திட்டங்களில் மீள் சிந்தனையை வலியுறுத்துகின்றன. அதாவது ஆசிரிய மாணவர்கள் நுண்முறைக் கற்பித்தல், மாதிரிக் கற்பித்தல் பயிற்சி, கட்டுறுப்புப் பயில்வு மற்றும் உள்ளகப் பயிற்சிக் காலத்தில் மீள்நோக்கு குறிப்பேடுகளாகப் பயன் படுத்தல். அப்போது தான் எதிர்நோக்கிய இடர்பாடுகளை இனங்கண்டு மீட்டிப் பார்க்க தன்னை தானே பரிசோதித்துப் பார்க்க உதவும்.

அடுத்து ஆசிரியர் பயிற்சித் திட்டங்களில் முகாமைத்துவத்தை அறிமுகப்படுத்தல். அதாவது ஆசிரியர் ஒரு முகாமையாளர் (Teacher's Manager) என்ற எண்ணக்கரு விருத்தி யடைவதாகும். அதாவது ஆசிரியர் இன்று தனது வகுப்பிலுள்ள பல்வகைப் பட்ட மாணவர்களை கற்றலுக்கு முகாமை செய்ய வேண்டியுள்ளது. கற்றலுக்கான அசையும் அசையாத பௌதீக வளத்தையும் நேரத்தையும் முகாமை செய்ய வேண்டியுள்ளது. இதனால் மனித பௌதீக மற்றும் நேர முகாமைத்துவம் தொடர்பான அறிவை ஆசிரியர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற் காக கல்வி முகாமைத்துவம் ஒரு பாடமாக ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களில் புகுத்தப்பட்டுள்ளது. அதனைப் பற்றி அறிந்து கற்றுக் கொள்ள வேண்டும்.

அடுத்து ஆசிரியர் கல்வியில் முன்சேவைப் பயிற்சி மிகவும் முக்கிய த்துவம் வாய்ந்ததொன்றாகும் நவீன கல்வி நவீன கல்வி தொழிநுட் பங்களைப் பயன்படுத்தி ஆசிரியர்களின் தேர்ச்சிகளை மேம்படுத்துவதற்கும் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. இதைப்பெற்றுக்கொண்ட வர்களுக்கே ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட வேண்டும். என்ற அம்சத் தின் காரணமாக முன்சேவைப் பயிற்சி யின் முக்கியத்துவம் வலியுறுத்தப் படுகின்றது.

இத்தகவல் தொழில்நுட்ப நூற்றாண்டில் இன்று ஆசிரியரை

விடவும் அறிவைப் பெற்றுக் கொள்வதற்கு பல்வேறு தொழிநுட்ப சாதனங்கள் தோன்றிவிட்டன. கணினி, இணையம் போன்றவை இவற்றில் முக்கியமானவை. இவற்றைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பயன்படுத்தல் தொடர்பான அறிவு ஆசிரியருக்கு மிகவும் முக்கியமானது. இலத்திரனியல் சாதனங்களின் பயன்பாடு இன்று தேவைப்படுகின்றது. இதனால் ஆசிரியர்கள் இவற்றை தமது கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்குப் பயன்படுத்திக் கொள்வதற்கு தேவையான பயிற்சிகளை பெற்றுக்கொடுக்க வேண்டும். மற்றும் ஆங்கில ஆசிரியர்களுக்கு மேலதிகமாக ஏனைய சகல ஆசிரியர்களையும் ஆங்கில தேர்ச்சி கொண்டவர்களாக மாற்றியமைக்கும் கிரமமான வேலைத்திட்டங்களை வகுத்து அமுல்படுத்த வேண்டும்.

தேசிய பல்கலைக்கழக முறைமை மூலம் ஏற்கனவே வழங்கப்படும் ஆசிரியர் கல்வி கௌரவிக்கப்பட வேண்டியதுடன் அது அமைச்சின் எல்லை மட்டத்துக்கு அப்பால் நிபுணத்துவ ஆசிரிய கல்வித் தகைமைகளை விருத்தி செய்வது தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். ஆசிரியர்களின் விருத்தி மற்றும் பயிற்சிகளுக்கு இணைவாக தொடர்ச்சியான செயற்பாட்டு மதிப்பீடுகள் ஊடாக அவர்களின் தொழில்சார் தரம் மற்றும் சம்பள அதிகரிப்புக்கான முறைகளை வகுத்து அவர்களின் விருத்தி ஊக்குவிக்கப்பட வேண்டும். இவ்வாறாக ஆசிரியர்கள் தமது தொழில் வாண்மைத்துவத்தை உயர்த்த வேண்டும்.

தொகுத்து நோக்கும் போது அறிவியல் யுகத்தில் மாற்றங்கள் நடைபெற்று வருவதும் அது துரிதமாகவே மனித வாழ்வியலில் தாக்கத்தை ஏற்படுத்துவதும் மறுக்க முடியாத உண்மை. அதன் காரணமாக டிஜிற்றல் (Digital) புரட்சியும் அதன் விளைவுகளுமே. இது தற்காலத்தில் கல்விப் புலத்திலும் தனது செல்வாக்கைச் செலுத்தியுள்ளது. மாணவர்களின் மனப்பாங்குகள் நடத்தைகள், சிந்தனைப் போக்குகள், கற்கும் முறைகள் தொழிநுட்பத்திறன்கள் முதலானவற்றில் பாரதூரமான செல்வாக்கை காணமுடிகிறது. எனவே சமூக முகவர்களில் ஆசிரியர் இக்கலாசாரத்தில் முக்கிய பங்குதாரர் ஆகின்றனர். மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் வகுப்பறை முகாமைத்துவத்தில் யாவற்றிலும் நவீனத்தை அமுல்படுத்துவதோடு தாமும் எந்நேரமும் புதிய மாறுதல்களை உள்வாங்கி தம்மையும் தம் ஆளுமையையும் விருத்தி செய்ய வேண்டும் என்பது பலராலும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**உசாத்துணை நூல்கள்**

1. .ரஞ்சித். கு 2009 அதிவிசேட ஆசிரியராகுங்கள் இலங்கைத் தேசிய நூலகம் - மத்தேகொட

2. ஜயசேன். பு 1998 ஆசிரியர் சேவையும் ஆசிரியர் வாண்மையும் தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

3. குமாரசாமி. ச. 2015 கல்வி மெய்யியல் குருபிறிண்டர்ஸ் திருநெல்வேலி

4. நித்திலவர்ணன் ஆ. 2015 பேண் தகு அபிவிருத்திக்கான
கல்வி - சேமமடுப்பதிப்பகம், கொழும்பு
பேராசிரியர் மா. கருணாநிதி

5. தனராஜ் தை 2014 கல்விச்சேவை பாராட்டு விழா மலர்
குமரன் புத்தக இல்லம் கொழும்பு 08

# ஆசிரியரும் சமூக வகிபாகமும்

**திருமதி. K.S.S. ஜமேலா தேவி** B.com, PGDE, M.A. (Soci)
***ஆசிரியர் – மன் / புனித பற்றிமா ம.ம.வி., பேசாலை.***

**அறிமுகம்**

இன்று சமூக மாற்றமானது சமுதாயத்தில் மற்றும் அதன் செயற்பாடுகளில் நிகழ்ந்த வண்ணம் உள்ளது. எந்தவொரு சமுதாயமும் மாற்றங்களிலிருந்து விடுபட முடியாது. சமுதாய நிகழ்வுகள், சமுதாயச் செயல்கள், சமுதாய நிர்வாக அமைப்பு இவற்றில் ஏற்படும் மாற்றங்களை விளக்குவதே சமுதாய மாற்றமாகும் என Sir Johns என்பவர் குறிப்பிடுகின்றார்.

"கற்பித்தல் ஒரு தொழிலாகக் கருதப்படல் வேண்டும். ஒருவகையில் அதுவொரு சமூகப் பணியாகும். அதன் நிமித்தம் மிகுந்த முயற்சியோடு இடையறாது மேற்கொள்ளும் கற்றல் வாயிலாகப் பேணும் விசேட அறிவு மற்றும் விசேட திறமைகள் என்பன ஆசிரியரில் மிளிர வேண்டும். மேலும் தம் பொறுப்பில் உள்ள பிள்ளைகளின் கல்வி, நலன் என்ப தொடர்பாக ஒரு தனிநபர் என்ற ரீதியிலும் கூட்டாகவும் தாம் பொறுப்பினைத் தாங்குவதாக அவர் உணருதல் வேண்டும்."
(யுனெஸ்கோவின் ஆசிரியர் சாசனம்.)

மாற்றமடையும் நவீன சமூகத்தில் ஆசிரியருக்கு இருக்கும் பங்கு அதிகமானதாகும். கற்பித்தல் என்ற உயர்ந்த செயலை மேற்கொள்பவர் என்ற வகையில் ஆசிரியரின் பொறுப்புக்கள், அதிகாரங்கள், கடமைகள், ஒழுக்கம் ஆகிய எல்லாவற்றையும் உள்ளடங்கிய விடயம் தான் ஆசிரிய வகிபாகம் ஆகும்.

மாணவர்களுடைய அறிவு சார்ந்த விடயத்துக்கு மட்டுமல்லாமல் அவர்களுடைய நிகழ்கால வாழ்க்கைக்குத் தேவையான விடயங்களுக்கும் அவர்களை வழிகாட்டி எதிர்காலச் சமூகத்தின் வளர்ச்சிக்கு உதவுதல் அவர் சமூகத்திற்கு ஆற்றும் வகிபாகம் எனக்குறிப்பிடலாம். ஆகவே சமுதாய வளர்ச்சியின் நோக்கத்தோடு, தனிமனித வளர்ச்சியையும் கருத்திற் கொண்டு ஆசிரியர்கள் செயற்பட வேண்டும்.

**சமூகம்**

பல தனிமனிதர்களின் கூட்டம் சமூகம் எனப்படும். ஒரு சமூகத்திலே அங்கத்தவன் என்ற வகையில் ஒவ்வொரு தனியாளும் தமக்கிடையே தொடர்புகளைப் பேணும் வகையில் இடையறாது மாற்றங்கள் ஏற்படுத்துகிறமையால் சமூகமும் மாற்றமடைகின்றது.

இத்தகைய சமூக அமைப்பிலே பால், வயது, குடும்பத் தகுதிநிலை என்பன சமூக அமைப்பில் வேறு பாடு உடைய தாக காணப்படுகின்றன. இவ்வாறான வேறுபாடுகள் இருந்த போதும் மனிதன் என்ற ஒரு உயர்நிலையில் அவன் ஏனைய மனிதர்களோடு இடைத் தொடர்பைப் பேணுகின்றான். இவ்வகையில் ஒரு சமூகம் என்பது உருவாகுவதற்குப் பல தனிமனிதர்கள் மற்றும் மக்களுக்கிடையில் தொடர்பாடல் என்பன அவசியமாகும். இதன் மூலமே ஓர் ஆரோக்கியமான சமூகம் உருவாகின்றது எனலாம்.

சமூகம் என்பது அதனது உருவாக்க நிலையிருந்து மாறும் ஒரு தன்மையைக் கொண்டமைந்தது. மாற்றங்களில் இருந்து எந்த ஒரு சமூகமும் விலகி நிற்க முடியாது. அதாவது இந்த மாற்றம் என்பது தனிமனிதனின் கருத்துக்கள், மனப் பான்மைகள் மற்றும் மதிப்பு என்பவற்றில் நிகழும் மாற்றங்களாகும். எனவே சமூகம் என்பதைப் பல்வேறு நடத்தைகளையுடைய தனிமனிதர்களின் கூட்டம் எனக் கூறலாம். இவ்வாறு தனி மனிதர்கள் வெவ்வேறு வகையான சிந்தனைகளையோ, செயற்பாடுகளையோ கொண்டவர்களாக இருந்த போதும் சமூக நியமம் என்பதில் இருந்து விலகாதவர்களாக வாழ வேண்டிய கடப்பாடுடையவர்களாகின்றனர்.

**சமூகப் பங்குபற்றலில் ஆசிரியர்கள்**

இன்று ஆசிரியர்களது சமூக வகிபாகம் என்பது முக்கியமாகப் பேசப்படும் ஒரு விடயமாகும். சுற்றாடல், சமுதாயம், பாடசாலை, அயற் சமுதாயம் ஆகிய எண்ணக்கருக்கள் தொடர்பான பல விடயங்கள் கல்வி அமைப்பில் முக்கியம் பெறுகின்றன. இவற்றையெல்லாம் இன்றைய கல்விச் செயற்பாட்டில் கலைத்திட்டத்தினூடாக அறிமுகப்படுத்தும் வகையில் கலைத்திட்டமிடல் ஒழுங்கமைக்கப் படுதல் அவசியமாகும். ஏனெனில் பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடையில் நல்ல தொடர்புகள் கட்டியெழுப்பப்பட வேண்டுமானால் சுற்றாடல், சமூகம் தொடர்பான விடயங்கள் கல்வியிலே நன்கு பழக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

பாடசாலைக்கும் சமுதாயத்துக்கும் இடையிலான தொடர்புகள் பழைய சமுதாயங்களிலும் வலுப் பெற்றிருந்தது. ஆனால் இன்றைய தொடர்புகளைப் போல் இல்லாமல் அத்தொடர்புகளில் வெவ்வேறு எதிர் பார்ப்புக்கள், செயற்பாடுகள், தன்மைகள் என்பன அமைந்திருந்தன. இன்று இக்கருத்து விரிவடைந்துள்ளது. பாடசாலையானது சமுதாயத்தின் மைய நிலையங்களாக விளங்குவதோடு சமுதாயத்தின் கலாசாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், முரண் பாடுகளைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கும் பாடசாலைகளினால் இயல்பாகவே முடிகின்றது.

இவ்வாறாக பாடசாலையானது பல்வேறு சமுதாய நோக்கங்களைக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. இதனால் பாடசாலையின் நோக்கங்களும், சமுதாயத்தின் நோக்கங்களும் ஒன்றுக்கொன்று இணங்குபவையாக இருக்க வேண்டும். சமுதாயத்தின் வளர்ச்சி என்பதைக் கருத்திற் கொண்டு அச்சமுதாயத்தின் வளங்களைத் தேக்க நிலையில் விடாது நகர்வு நிலைக்குச் சமூகத்தைக் கொண்டு வருவதற்கான

அபிவிருத்தி முயற்சிகளில் பாடசாலைகள் ஈடுபட வேண்டும். சமூகத்தின் முயற்சிகளை உச்சமாகப் பயன்படுத்துவதற்குரிய அறிவையும் வலிமையையும் அச்சமூக மக்களுக்கு வழங்குதல் வேண்டும்.

இவ்வகையில் பாடசாலையின் சமூக நோக்கு என்பது இன்று மிகவும் உணரப்படுகின்றது. இதனால் ஆசிரியர்கள் இச்சமூக உணர்வைப் பெற்று மாணவர்கழுக்கும் தாம் வாழும் சமூகம் தொடர்பான உணர்வை வழங்க வேண்டும். ஆகவே ஆசிரியர்களது சமூக வகிபாகம் இன்றேல் மாணவர்களைச் சமூக மயப்படுத்துவதோ, சமூக உணர்வினர் ஆக்குவதோ இயலாததாகிவிடும். இதனால் ஆசிரியர்கள் பல விடயங்களைக் கருத்திற்கொண்டு செயற்படவேண்டும்.

கற்பித்தல் செயன்முறையை ஒழுங்குபடுத்துபவர் என்ற வகையில் ஆசிரியரின் பொறுப்புக்கள், அதிகாரங்கள், கடமைகள், ஒழுக்கம் ஆகிய எல்லாவற்றையும் உள்ளடக்கியதே ஆசிரியரது சமூக வகிபாகம் ஆகும். ஆசிரியர் சமூக வகிபாகம் எனும் போது அவர் சமூகத்தோடு கொள்ளும் தொடர்புடைய பணிகள் யாவற்றையும் அவதானிப்பதோடு அதில் பங்கு கொள்ளவும் வேண்டும். சமூக நலன் எனும் உயரிய நோக்கு, சிந்தனை அவர்களிடத்தில் இருக்க வேண்டும். பாடசாலைக்கு வெளியே பெற்றோரிடமும், சமூக அங்கத்தவர்களிடமும் ஏனைய அதிகாரிகள், தனது பாடசாலையல்லாத ஏனைய ஆசிரியர்கள் போன்றோர்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்த வேண்டும். இத்தொடர்புகளின் மூலம் சமுதாயத்தின் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதோடு அதன் வளர்ச்சிக்கும் உதவ முடியும். ஆசிரியர் சமூகத்தோடு ஏற்படுத்தும் தொடர் பாடலின் மூலம் சமுதாயத்தின் வளங்களை இனம் காண்பதோடு மாணவரின் ஆளுமை வளரச்சிக்கும், கற்றல் கற்பித்தல் கருமத் தொடரின் வெற்றிக்கும், சமுதாய அபிவிருத்திக்கும் பங்களிப்பு செய்தவர்களாகின்றனர்.

ஆசிரியரின் சமூக வகிபாகம் தொடர்பாக அவர்கள் கூடிய விழிப்புணர்வு உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

1. பாடசாலைகளில் செயற்படும் திறன் பெற்றவர்களாக இருத்தல்.
2. மாணவர்களுக்கு முன்மாதிரியாக விளங்கக் கூடிய சமூகமயப் பண்பு வாய்ந்தவர்களாக விளங்குதல்.

ஆசிரியர்கள் கல்வியில் நுட்ப வல்லுனர்களாகத் திகழ வேண்டும். இதற்காகக் காலத்துக்குக் காலம் அவர்களுக்குச் சிறந்த பயிற்சியளிக்க வேண்டும். தமது சமூக ஒற்றுமையின் இணக்கத் தொடர்பைத் தகர்த்து விடுகின்ற அறநெறி செயற்பாடுகள் பற்றி எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

ஆசிரியர்களின் சமூக வகிப் பங்கு என்பது ஆசிரியர் நிலைக்குரிய அதிகாரங்கள், பொறுப்புகள், கடமைகள் ஆகியவற்றக்கும் சமுதாயமானது ஆசிரியரிடத்தே எதிர்பார்க்கும் அந்தஸ்துக்கும் இயைபான கருமப் பொறுப்பே ஆகும். தனது சமூகப் பொறுப்பை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்வதற்கு அவர் தனது திறன்களையும், மனப்பாங்குகளையும், குணாதிசயங்களையும் வளர்த்துக் கொள்ளல்

வேண்டும். ஆசிரியர்கள் தாம் வாழும் சமூகத்தோடும், அயற்சமூகத்தோடும் தொடர்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும். சமூகத்தொடர்பாடலினால் ஆசிரியரது ஆளுமை, தலைமைத்துவம் போன்ற பண்புகள் பற்றியும், இதனால் தமக்கு ஏற்படும் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்த்துக் கொள்ளும் திறமை பெற்றவர்களாகவும், ஆசிரியர்கள் மாற்றப்படுகின்றார்கள். இதன் மூலம் அவர்கள் எப்போதும் சமுதாயம் தொடர்பான வேலைத்திட்டங்களின் பங்காளிகளாக மாற்றப்படுகின்றார்கள். இதனால் ஆசிரியர்கள் சமுதாயத்தை வகுப்பறையாகக் கூட மாற்றியமைப்பர். வகுப்பறைகளிலும், பாடசாலைகளிலும் காணப்படும் வளங்களை சமுதாயத்தின் முன்னேற்றத்துக்காகப் பெற்றுக் கொடுக்கும் இடைத்தரகர்களாக ஆசிரியர்கள் விளங்க வேண்டும்.

**சமூகவியல் ஆய்வும் ஆசிரியரின் சமூக வகிபாகமும்**

இன்றைய நிலையில் ஆசிரிய ஆய்வாளர்களாக (Teacher Researcher) ஆசிரியர்கள் செயற்பட வேண்டியதன் அவசியத்தைக் கல்வியலாளர்கள் வலியுறுத்தி வந்துள்ளார்கள். சமூகம் தொடர்பான பல ஆய்வுகளை மேற்கொள்வதற்கு அவர்களால் முடிகின்றது. மக்களின் வாழ்க்கைமுறை, தொழில், வேதனம், பாடசாலை, நோய்கள், கல்வி போன்ற பல விடயங்களும் இன்று ஆய்வுப் பொருளாகின்றன. வகுப்பறையின் பிரச்சினைகள் இனம் காணப்பட்டு அதற்கான படிமுறைகள் திட்டமிடப் பட்டு அதற்கேற்ப தகவல்கள் சேரித்தல் முக்கிய அம்சமாகும். இதனால் ஆசிரியர் தாம் கற்கும் பாடவிடயம் தொடர்பாகவோ, அல்லது மாணவர்களின் ஏதாவதொரு பிரச்சினை தொடர்பாகவோ ஆராய்ந்து அதற்கான தீர்வினை முன்வைத்தல் வேண்டும். இதன்மூலம் மாணவர்கள், பாடசாலைகள், அவர்கள் சார்ந்த சமூகம் தொடர்பான ஆய்வுகளில் ஈடுபடுவதனால் சமூக வகிபாகம் உடையவர்களாக அவர்கள் விளங்குகின்றார்கள்.

ஆசிரியர்கள் பல ஆண்டுகளாகத் தாம் பெற்ற அனுபவங்களைக் கல்வி சார்ந்த அனுபவங்களாக மாற்றுவதுடன் அவை தொடர்பான ஆராய்ச்சியுணர்வும் உள்ளவர்களாக மாற்றப்பட வேண்டும். மாணவர்களின் கல்வி சார்ந்த விருப்பு, வெறுப்புகள் அவதானிக்கப்பட வேண்டும். கல்வியின் மீது அபரிதமான பயிற்சியும், பங்களிப்பும் திறமைகளும் உள்ளனவா என்பதனையும் ஆராயும் ஆராய்ச்சியாளர்களாக அவர்கள் மாற்றப்பட வேண்டும்.

நாளாந்தம் மாறிக் கொண்டிருக்கும் சமூகத்திற்கேற்ப புதியன படைக்கும் ஆர்வம் அவர்களிடம் இருக்க வேண்டும். சமுதாய மாற்றத்தில் பல காரணிகளின் செல்வாக்கு இருக்கின்ற போதிலும் கல்வியின் பங்களிப்பு அதிகமானதாகும். இத்தகைய கல்வியின் புத்தாக்க முயற்சிகளின் விளைவாக ஏற்படும் மாற்றங்களை ஆதார பூர்வமாகக் கண்டுபிடிக்க வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் ஆசிரியர்கள் ஆய்வாளர்களாக மாற்றம் பெறுவதைக் கல்வியுலகம் எதிர் பார்க்கின்றது.

ஆசிரியர்கள் காலத்துக்குக் காலம் பல புதிய ஆய்வுகளை மேற்

கொள்வதன் மூலம் தமது அறிவினைப் புதுப்பிக்க முடியும். பாரம்பரிய மரபு ரீதியான கற்றல் கற்பித்தல் பணிகளில் இருந்து விலகி புதிய நுட்பங்களையும், தந்திரோபாயங்களையும் கைக்கொள்ள வேண்டும்.

இதனால் இன்று அரசவேலைத் திட்டத்தில் "ஆசிரியர் ஓர் ஆய்வாளர்" என்னும் கோட்பாடு முன் வைக்கப் பட்டுள்ளது. ஓர் அறிவுச் சமூகத்துக்கு வேண்டிய ஆளணியினரைத் திரட்டிப் பயன்படுத்த உதவுதல் ஆசியர்களின் முக்கிய கடமையாகும். மாணவர்களின் சமூகத் திறன்களை வளர்த்தல் தொடர்பாக ஆசிரியர்கள் சிந்திக்க வேண்டும். இதனால் பாடசாலைகளில், வகுப்பறைகளில் மாணவர்களின் சமூகத் தொடர்புகள் பற்றியும், சமூகப் பிரச்சினைகள் பற்றியும் ஆராய முற்பட வேண்டும். வகுப்பறைமட்ட ஆய்வு களை மேற்கொள்ளும் ஆற்றல் மனப்பாங்கு என்பன விருத்தியாக்கப்பட வேண்டும்.

**ஆசிரியர்களது சமூகம் தொடர்பான ஆய்வின் விளைவுகள்**

- பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடைப்பட்ட தொடர்புகள் இத்தகைய ஆய்வுகளின் மூலம் வலுவடையும்.

- ஆசிரியர் மாணவர் இடைவினை அதிகரிக்கும் சந்தர்ப்பங்கள் ஏற்படும்.

- மாணவர் அடைவுகளில் முன்னேற்றம் ஏற்படும்.

- சமூகம் தொடர்பான அக்கறை யுடையவர்களாக ஆசிரியர்கள் மாற்றப் படுவார்கள்.

- கற்றல் கற்பித்தலில் புதிய அறிவு, புதிய நுட்பங்கள் போன்றன கிடைக்கும் சந்தர்ப்பம் ஏற்படும்.

- பாடசாலை மட்ட திட்ட மிடல்கள் - கணிப்பீடுகள் போன்ற வினைத்திறனுடன் மேற்கொள்ள சந்தர்ப்பம் ஏற்படும்.

இவ்வகையில் பாடசாலை களில் சமூகம் சார்பான ஆய்வுகளை ஆசிரியர்கள் மேற்கொள்வதன் மூலம் ஆசிரிய வாண்மைகளில் ஏற்படும் பிரச்சினைகளைக் களைய முடிகின்றது. எனவே பாடசாலை மட்டத்தில் ஆசிரியர்களை ஆய்வாளர்களாகத் திசைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப் படவேண்டும். இதன் மூலம் பாடசாலை யானது வினைத்திறன், விளைதிறன் மிக்க ஒரு நிறுவனமாக மாற்ற மடைகின்றது.

**முடிவுரை**

இன்று பாடசாலைக்கும், சமு தாயத்துக்கும் இடையில் நடைபெறும் தொடர்பாடல் நடவடிக்கைகளை வலுப் படுத்தும் பல செயற்பாடுகளை மேற் கொள்ளலாம். பாடசாலை எந்தச் சமூகத்தில் இருக்கிறதோ அச்சமூக த்தின் தேவைகள் நிறைவேற்றப் படலாம். தேவைகள் எவையென்பதை திட்டவட்டமாக விளங்கிக் கொள்ள வேண்டும். பாடசாலைச் சமுதாயத்தை இனங்காண வேண்டும். கலைத்திட்டம் இவற்றுக்குப் பொருத்தமாக அமைய வேண்டும். இணைபாடக் கலைத் திட்டம் சரியான முறையில் நடை முறைப்படுத்தப்பட வேண்டும். சமூக நிகழ்வுகளில் மாணவர்களைப் பங்கு பெறச் செய்வதோடு தாமும் பங்கெடுக்க வேண்டும். சமூகம் தொடர்பான

ஆய்வுகளில் ஈடுபட வேண்டும். பல்வேறு வகைப்பட்ட ஆசிரிய பயிற்சிகளைப் பெற்றிருத்தல் வேண்டும். இவ்வகையான பல்வேறு செயற்பாடுகளைத் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளும் போது அவர்களது சமூக வகிபாகம் என்பது திருப்திகரமாக அமையும்.

எனவே ஆசிரியர்களது வகிபாக மானது சமூக மாற்றங்களுடன் சேர்ந்து மாற்றமடையத் தொடங்கியுள்ளது. சமூகதின் தேவைகள் அதிகரித்தமை, நகரமயமாக்கல், பூகோளமயமாக்கல் முதலீட்டு முனைப்புகள், தொடர்பாடல் தொழிநுட்ப விருத்தி போன்றவை காரணமாக ஆசிரியரது கௌரவம், கணிப்பு, சமூகம் தொடர்பான பொறுப்புகள் போன்றவைகள் எல்லாம் மாற்றமடையத் தொடங்கின. சமூக எல்லைகளுக்கு அப்பாற் கூட ஆசிரியர்களது தொடர்புகள் வலுவடைந்தன. ஆயினும் இத்தகைய நிலையில் இத்தகைய சமூக வகிபாகத்தின் மூலம் பல்வேறு பிரச்சினைகளை ஆசிரியர்கள் எதிர்கொள்ளவும் நேரிடலாம். எனவே அவர்களுக்கு உதவிகள் புரிவது, வழிகாட்டுவது, சுய ஊக்கலை உற்சாகப்படுத்துவது என்ற வகைகளில் அவர்களின் சமூக வகிபாகத்தை முக்கியப்படுத்த முடியும்.

**உசாத்துணைகள்**


1. சின்னத்தம்பி.மா. (2009) பாடசாலையும் ஆசிரியரும், யாழ்ப்பாணம், தினக்குரல் வெளியீடு.
2. கருணாநிதி, மா (2008) கல்விச் சமூகவியல், கொழும்பு, குமரன் பதிப்பகம்.
3. சின்னத்தம்பி .மா. (2005) இலங்கையில் முகாமைத்துவக் கல்வி, கொழும்பு, குமரரன் புத்தக இல்லம்.
4. இராசநாயகம். ஜெ. (2014) "ஆசிரியர்களது சமூக வகிபாகமும் அதன் முக்கியத்துவமும்" கல்விச் சேவை பாராட்டு விழா மலர், கொழும்பு குமரன் புத்தக இல்லம்.


**இந்த உலகில் நாம் நம் கண் முன்னால் காணும் ஒவ்வொருவரையும் நேசிக்க இயலவில்லை என்றால் கண்ணுக்குத் தென்படாத கடவுளிடம் எவ்வாறு அன்பைச்செலுத்த இயலும்.**

**- அன்னை திரேசா -**

# தமிழ் மொழி வளர்க்கும் பணியில் பாடசாலைகளின் பங்கு

**திரு. பெருமாள் செல்வேந்திரன்**
***ஆ சிரியர் - மன் / அல்-மினா ம.வி. தாராபுரம்.***

ஒரு சமூகத்தை பிரதிபலிக்கும் இடங்களாகத் திகழ்பவை பாடசாலைகளாகும் மட்டுமன்றி பாடசாலையை ஒரு நல்ல நாற்றுமேடைக்கும் ஒப்பிட்டுக் கூறுவார்கள். ஏனெனில் நல்ல நாற்றுக்களாக உருவாக்கம் நல்ல மாணவர்களில் தான் நல்ல சமூகப்பிரஜைகள் உருவாக முடியும். அந்த வகையிலே பாடசாலைகள் நல்லதொரு சமூகத்தை உருவாக்கும் சமூகப் பொறுப்பை உணர்ந்து செயற்பட்டு வருவதோடு ஆசிரியர்கள் அனைவரும் சிறந்த சமூகத்தை உருவாக்கப் பாடுபபட்டு உழைத்து வருவதனையும் நாம் காணமுடியும். எமது நாட்டிலே காணப்படுகின்ற தமிழ்மொழி மூலப் பாடசாலைகள் அனைத்துமே தமிழ்மொழியை வளர்க்கப் பாடுபட்டு உழைப்பதனை உணர்த்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தெய்வமொழி என்ற சிறப்பையும் செம்மொழி என்ற அந்தஸ்தையும் பெற்ற எம்மொழியானது காலத்திற்குக் காலம் பல்வேறு நிலைகளில் பலராலும் பாரபட்சம் காட்டப்படாது வளர்த்தெடுக்கப்பட்ட ஒப்பற்ற மொழியாகும். எம்மொழியாக தமிழ்மொழி தனக்குள்ளே ஒப்பற்ற உலகப் பெருமதங்களான இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், பௌத்தம் போன்ற மதங்களின் கருத்துக்கள், சிந்தனைகளைத் தனக்குள்ளே தாங்கி வளர்த்து வருகின்ற மொழியாகக் காணப்படுகின்றது. இத்தகைய சிறப்புக் கொண்ட எம்மொழியானது பாடசாலைகளில் வளர்த்தெடுக்கப்பட்டு அடுத்த தலைமுறையினரிடம் ஊடுகடத்தப்பட்டு உன்னதம் பெற்றுத் திகழ்கின்றது. மன்னர்களாலும், புலவர்களாலும் இன்னும் சில தமிழ்ப்பற்றாளர்களாலும் சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த, தமிழ் வளர்ந்த கதை நாமறிந்ததே. இன்றும் கூட எத்தனையோ தமிழச் சங்கங்கள் தமிழ் வளர்க்கும் பணியை செவ்வனே நிறைவேற்றி வருவதனை நாம் ஊடகங்கள் வாயிலாக அறிய முடிகின்றது. அத்தகைய சங்கங்களை வாழ்த்துவோம். பாராட்டுவோம். தமிழ்ப்பணிதொடர ஊக்கமளிப்போம்.

இப்படியான தமிழ்ப் பணியில் தமிழ்வளர்க்கும் செயலில் பாடசாலைகளும், தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களும் ஏனையவர்க்கும் இதில் ஈடுபட்டு வருவதினை அனைவரும் அறிந்து பாராட்டவும், பேசவும், முக்கியப்படுத்தவும் முன்வரவேண்டும்.

தமிழை எழுதக்கற்றுக் கொடுத்து பேசக் கற்றுக்கொடுத்து இயல், இசை நாடகத் துறைகளிலே வளர்த்தெடுக்கப்பட்டு வெளிவரும் மாணவர் பரம்பரையினரே சமூகத்தில் தமிழ் ஆர்வலர்களாகவும், ஆக்க இலக்கிய கர்த்தாக்களாகவும், படைப்புலகின் பிரம்மாக்களாகவும் வலம் வருகின்றமையை நாம் காணலாம். அவர்களெல்லாம் தெரிந்தோ தெரியாமலோ பாடசாலைகள் பெற்றெடுத்த தமிழின் தவப் புதல்வர்கள்தானே. இப்படியாக தமிழ் வளர அத்திவாரமாகச் செற்படும் பாடசாலைகளைப் பாராட்டி ஊக்கப் படுத்தி தமிழை வளர்தெடுக்கும் செயற்பாடுகள் முனைப்புடன் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அந்தவகையிலே சாதனை படைக்கும் தமிழ் ஆசான்களும், மாணவர்களும் சமூகத்தின் பங்குபற்றுதலோடு கௌரவிக்கப்பட வேண்டும். ஊக்கப்படுத்தப்பட்டு உற்சாகப்படுத்தப் பட்டு அவர்களின் பணி உணரப் படவேண்டும். எழுத்துப்பிழை திருத்தி, சொற்பிழைதிருத்தி, பொருட்பிழை திருத்தி தமிழ்மொழிப் பாடத்தில் சித்தியடைந்த ஒவ்வொரு மாணவனும் பாடசாலை தந்த முத்தான தமிழ்ச் சொத்தேயாவான். தமிழ்மொழி மூலப் பாடசாலைகளிலே தமிழ்மொழிப் பாடத்தைக் கற்பிக்காத மொழிப்பற்றுக் கொண்ட ஆசிரியர்கள் பலர் மாணவர்களின் விவாதத்திறன், நடிப்புத்திறன், பாடுந்திறன்களை வளர்த்தெடுப்பதற்கு விருப்புடன் செயற்பட்டு வருவதனைப் பல பாடசாலைகளிலே நாம் காணக் கூடியதாக இருக்கின்றது. எம் தாய்மொழியாம் தமிழ்மொழி இன்றுவரை அழிவுபடாமல் வீறுநடைபோட்டு வளர்வதற்குக் காரணங்கள் பலவாக இருந்தாலும் அந்தக் காரணங்களில் முக்கியமானதொன்றாகக் காணப் படுவது தமிழ்மொழி மூலப் பாடசாலைகள் என்பதனை யாரும் மறுக்க முடியாது. இதனை அனைவரும் உணர்ந்து செயற்பட முன்வர வேண்டும்.

பல பாடசாலைகளிலே தமிழிலக்கியம் சார்ந்தும் தமிழ்த்துறை சார்ந்தும் நடைபெறுகின்ற பல விழாக்கள் வரவேற்கப்படுதல் வேணடும். அத்துடன் அவ்விழாக்கள் பலவும் இன்னும் பல பாடசாலைகளிலே தொடர்ந்து நடைபெற ஊக்கப் படுத்தப்படல் வேண்டும். அந்நிகழ்வுகளுக்கு பாடசாலை மாணவர்களும் பார்வையாளர்களாகவும் பங்காளர் களாகவும் உள்வாங்கப்படுதல் சிறப்பானதாக அமையும். ஏனெனில் தமிழ் வளரவும் செழித்தோங்கி செம்மொழியாக வலம் வரவும் இது உதவுவதாக இருக்கும். ஏனெனில் எமது மாவட்டத்திற்கு வந்து சென்ற சிறந்த பல தமிழ்ப் பேச்சாளர்கள், பேராசிரியர்கள், சொற்பொழிவாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள், எழுத்தாளர்கள் இலக்கியப் படைப்பாளிகளை எமது பாடசாலை மாணவச் செல்வங்கள் கண்ணாரக் கண்டு அவர்களின் அழகு தமிழில் மகிழவும், இனிய தமிழை நுகரவும் வழி ஏற்படுமல்லவா? அதுமட்டுமன்றி பல இலக்கியச் செய்திகளை கண்டு, கேட்டு மகிழவும் வாய்ப்பு ஏற்பட இடமேற்படுமல்லவா? தமிழ்மொழி மீதான பற்று எமது மாணவச் செல்வங்களுக்கு ஏற்படுவதற்கு இந்நிகழ்வுகள் தூண்டுகோலாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இன்று பாடசாலைகளிலே ஊடகமொழியாக தமிழும் ஆங்கிலமும்


காணப்படுவது வரவேற்கப்படுதல் வேண்டும். ஏனெனில் பாரதிகண்ட கனவு நனவாகி வருவதற்கு இது சான்றாகும். தமிழனின் தலைப்பாகை யைக் கட்டிய பாரதி ஆங்கிலேயரின் "கோட்" எனும் ஆடையைத் தரிக்கக் காரணம் ஆங்கிலேயரின் அடக்கு முறையை மட்டுமே எதிர்த்த பாரதி அவர்களின் ஆங்கிலத்தை வெறுக்க வில்லை. பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழில் பெயர்த்தல் வேண்டும் என்றான். அதற்கமைய நாமும் சமாந்தரமாக இவ்விரு மொழிகளைக் கற்பதோடு தமிழை மறந்து விடாமல் பல பாடசாலைச் செயற்பாடுகள், கோவைகளில் இன்னும் இன்னுமாக தூய தமிழைச் சேர்க்க முற்படுவோமாக இருந்தால் பாடசாலை களை நிலைத் தூண்களாகக் கொண்டு தமிழ் வளரும் என்பது திண்ணம்.

அனைத்துத் தமிழ்மொழி மூலப் பாடசாலைகளிலும் தேசிய கீதம், பாடசாலை கீதம், தமிழ்மொழி வாழ்த்து என்பன கிரமமாக இசைக்கப்பட்டாலும் வாரமொருமுறை எல்லாப் பாடசாலை களிலும் தமிழ்மொழி வாழ்த்து இசைக்கப்படுதல் வேண்டும். இது கிரமமாக நடைமுறைப்படுத்தப்பட்டால் எமது இளந்தலைமுறையினர் எம்மொழியின் மீதான பற்றை அதிகரிக்கவும் ஆதாரமாக அமையும். இத்தகைய சந்தர்ப்பம் பல பாடசாலை களுக்கு கிடைக்கப்பெறுவதில்லை என்பது நாம் அறிந்ததே.

அதுமட்டுமன்றி கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த (சா/த) 2015 பரீட்சையிலே எல்லா வலயங்களையும் விட எமது வலயத்தின் தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்திற்கான சித்தி வீதமானது 91% என்ற உச்ச இலக்கை அடைந்து பலரதும் பாராட்டைப் பெற்றது நாமறிந்ததே. இதன்மூலம் பாடசாலைகள் தமிழ் வளர்த்து சாதனை படைத்த தென்பதனை நாம் அறிவோம். எமது வலயத்தில் பணியாற்றுகின்ற தமிழ்த்துறை உத்தியோகத்தர்கள் (உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள், இன்னும் பலர்) மற்றும் பலரதும் உழைப்பும் மகிமையும் தமிழின் வளர்ச்சிக்கு உரமாக அமைந்துள்ளதை உணர நாம் முன்வர வேண்டும்.

தேமதுரத் தமிழோசை உல கெல்லாம் பரவிச் செல்கின்ற இக்காலகட்டத்திலே பரவக் காரணமாக இருந்தவைகளில் பாடசாலைகள் தந்த தமிழும், ஊக்கப்படுத்தல்களும் தான் என்பதில் நாம் பெருமை கொள்ளுதல் வேண்டும். ஊரெல்லாம் தமிழ்மணக்க பாரெல்லாம் தமிழ்செழிக்க தமிழ்மொழி மூலமான பாடசாலைகள் பங்காற்று கின்றன என்பதனை உணர்ந்து உரைக்கவும், உரத்துச் சொல்லவும் பலர் முன்வரவேண்டும். சங்கம் அமைத்து தமிழ் வளர்ந்தது, வளர்கின்றது போலவே பாடசாலைகள் தமிழை வளர்த்தன என்ற சிந்தனை வலுப்பெற வேண்டும்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்! ●



# பாடசாலை மட்ட ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டம்

**திரு. சூசையப்பு புறுனோ டயஸ் M.Ed.**
*ஆ சிரியர் - மன் / புனித பற்றிமா ம.ம.வி, பேசாலை*

உலகை மாற்றி அமைக்க அல்லது அதனைப் புதுப்பிக்க விரும்பும் ஆசிரியர்கள் காலத்தின் தேவைக் கேற்பவும் அதன் விருத்திக்கேற்பவும் தனது அறிவை மேலும் பன்மடங்கு உயர்த்துவதிலும், உருவாக்குவதிலும் நாளைய உலகின் தேவை எவ்வாறு வடிவெடுக்கப்போகின்றது என்பதனை இன்றே உணர்ந்து, அறிவாற்றலும் ஆளுமையும் மிக்க சிறந்த மனித வளத்தினை உருவாக்குவதில் அளப் பரிய பங்காளியாக ஆசிரியர்களே இருக்க வேண்டியுள்ளது. இதற்கமை வாகவே பல்தரப்பட்ட ஆசிரிய மேம்பாட்டு வேலைத்திட்டங்கள் செயற்பாட்டில் உள்ளன என்பதை நாம் அறிவோம். இருந்தும் அவை எதிர்பார்த்த இலக்கை எட்டுவதற்குப் போதியதாயில்லாமை ஓர் குறைபாடாக உள்ளது. இதனை வலுமிக்க ஆசிரிய மேம்பாட்டு விருத்தியினை அடையும் ஒரு முயற்சியாக மாற்றுவதற்கு கல்வி அமைச்சின் துறைசார் விருத்திச் சட்டக செயற்றிட்டத்தின் கீழ் இயங்கும் TESP வேலைத்திட்டத்தினால் பாடசாலை மட்ட விருத்தி வேலைத்திட்டம் புதுப்பிக்கப்பட்டு செயல்வண்ணம் பெற்று வருகின்றது.

பாடசாலை மட்ட ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டம் என்பது மாணவர்களின் அடைவு மட்ட உயர்வு மற்றும் ஆளுமை விருத்திக்கு வழி காட்டக்கூடிய பொறுப்பு மிக்க ஆசிரியர்களை உருவாக்குவதற்காக பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி தேவைகளை இனங்காணல், திட்ட மிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல் என்னும் செயற்பாடுகளை பாடசாலை களில் அமுல்படுத்துவதே இதுவாகும்.

இச்செயற்றிட்டத்தின் நோக்கம் யாதெனில்...

- ஒவ்வொரு பாடசாலை யையும் அத்தியாவசியமானதும் பொரு த்தமான துமான ஆசிரியர் விருத்தி வேலைத் திட்டத்தை தாமாகவே திட்ட மிட்டு நடைமுறைப்படுத்தும் ஆற்றலுள்ள தாக வலுப்படுத்தல்.

- மாணவர்களின் அடைவு மட்ட மேம்பாடுகளை, தொடருறு ஆசிரியர் கல்வி வேலைத்திட்டங்களை நடை முறைப்படுத்தல்.

- ஆசிரியர்களிடையே சிறந்த நடைமுறைகள் (Best Practices) தொடர்பான அனுபவங்களைப் பகிர்ந்து

கொள்ளல் மற்றும் பிரதிபலித்துக் கற்கும் தேர்ச்சியை (Reflective Practices) மேம்படுத்தல்.

தொடருறு ஆசிரியர் கல்வி வேலைத்திட்டங்கள் மூலமாக பாட சாலை முறைமையில் பண்புத்தர விருத்தியை ஏற்படுத்தல்.

பாடசாலைகளில் பாட சாலை மட்ட ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டத்தினை வெற்றி கரமாக நடை முறைப்படுத்த பின்வரும் படிமுறைகளை அனுசரித் தல் பொருத்தமானது.

- பாடசாலையின் செயற்பாடு களைச் சிறந்த முறையில் மீளாய்வு செய்து ஆசிரிய மேம்பாட்டுத் திட்டங் களை அமைத்தல்.
- ஆசிரியர் மேம்பாட்டுக்காக ஒவ் வொரு பாடசாலையிலும் குழு ஒன்று நியமித்தல்.
- இக்குழு பாடசாலையின் ஆசிரிய மேம்பாட்டுத் திட்டத்தினை இனங்கண்டு தயாரித்தல்.
- அவ்வாறு இனங்காணப்பட்ட தேவைகளை முன்னுரிமை அடிப் படையில் வருடாந்த பாடசாலை செயற் றிட்டத்தில் இணைத்துக்கொள்ளல்.
- சகல பாடசாலைகளும் தமது வரவு செலவு திட்டத்தில் பாடசாலை மட்ட ஆசிரியர் மேம்பாட்டுக்குப் போதிய நிதியை ஒதுக்குதல். அத்துடன் பொருத்தமானதும் சாத்தியமானதுமான வேறு நிதி மூலங்களை உரியவாறு பெற்றுக் கொள்ளல்.
- இச்செயற்பாடுகளில் ஆர்வத் துடன் பங்கு பற்ற ஆசிரியர்களை ஊக்குவித்தல்.
- வேலைத்திட்டங்களை தயாரிக் கும் போது செலவற்ற வேலைத் திட்டங் களையும் சேர்த்துக் கொள்ளல்.
- இவ்வாறு தமக்காகத் தாமே செயற்படுத்தும் இவ்வேலைத்திட்ட ங்களை சிறந்த முறையில் மேற்பார்வை செய்து மேம்படுத்தல்.
- பெறப்பட்ட அனுபவங்களை பாடசாலையினுள்ளும் பாடசாலைக்கு வெளியே ஆசிரியர்களுடனும் (கோட்ட, வலய, மாகாண மட்டத்தில்) பகிர்ந்து பரஸ்பரம் விருத்தியடைதல்.

பாடசாலைகள் தமது தேவை களுக்காக வடிவமைக்கும் செயற் பாடுகள் பொருத் தமாக இருப்பதை உத்தரவாதப்படுத்திக் கொள்ளல் வேண்டும். இதற்காகப் பயன்படும் சில வேலைத்திட்டங் களாவன:

- ஆசிரியர்கள் கூட்டம், பெற் றோர்கள் கூட்டம் தொடர்ந்து நடை பெறும் கூட்டங்கள் (ஆசிரியர்களின் தேவைக் கேற்ப)
- மாதிரி கற்பித்தல் (Model Teaching), செயல்நிலை ஆய்வு, சம்பவக் கற்கை.
- ஆசிரியர்களுக்கான தனிப்பட்ட வழி காட்டல்கள் ஏற்பாடு செய்தல்.
- ஆசிரிய மேம்பாட்டுத்திட்டங் களை வெளிப்புற உதவியுடன் செயற் படுத்தல்.

- சக பாடிகள் பயிற்சி (Peer - coaching)

- தொழில் வழிகாட்டுநர் மூலம் வழிகாட்டல், செய்து காட்டல். (Demon stration)

- கண்காணிப்புப் பயணம் (மாதிரி பாடசாலை ஒன்றின் செயற்பாட்டை அவதானித்தல்) அனுபவப் பரிமாற்றத் திற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தல்.

வினைத்திறனுடைய வாண்மை யால் தமது தொடர்ச்சியான கற்றல் செயன்முறையில் உயிரோட்டத்துடன் ஈடுபடுவர். அவர்கள் ஆசிரியர் என்ற ரீதியில் தாம் எந்நிலையில் இருக்கின் றோம் என்பதையும் எந்த நிலையை அடைய வேண்டும் என்பது பற்றியும் பரிசீலிப்பர். கற்பித்தல் நியமங்கள் ஆசிரியர்கள் பின் பற்ற வேண்டிய ஆழமான கல்விசார் விழுமியங்களைக் கொண்டனவாகும். கற்றலில் ஈடுபடும் வாண்மையாளர் தமது ஆற்றுகையை, தமது வாண்மைத் தொழில் எதிர் பார்க்கப்பட்ட நியமங்கள் அடிப்படை யில் தமது ஆற்றுகையை மதிப்பிடுவர். நியமங்கள் தனியாள் வாண்மைத் தேடலில் உள்ள ஆசிரியர்களுக்கு உதவும் நோக்கைக் கொண்டவை. வாண்மைத்துவ சமூகத்தவர் தமது நடைமுறைகளை தொழில்சார் நியமங் களின் வழியில் மீளாய்வு செய்வதின் தேவையை ஏற்றுக் கொண்டுள்ளனர். நியமங்கள் மூலம் கற்பிக்க வேண்டியவை யாவை என்பது பற்றியும் பண்புத்தரமுள்ள கற்பித்தல் – கற்றல் பற்றிய விளக்கங்களையும் கொண டுள்ளது. எதிர்பார்ப்புக்கள் தொடர்பில் அவர்களின் ஆற்றுகையை மதிப்பீடு செய்யவும், மதிப்பீடு செய்வதற்குப் பயன்படுத்தப்படக் கூடிய முறை களையும் நியமங்கள் பரிசீலிக்கின்றன.

ஆசிரியர்கள் அதிக நன்மைகளால் பெறக் கூடிய விடயங்களாவன:

- இனங்காணப்பட்ட தேவை களின் அடிப்படையில் செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டிருத்தல்.

- செயற்பாடுகளின் நோக்கங்கள் விளக்கமாகக் குறிப்பிட்டிருத்தல்.

- பங்குபற்றுவோரினால் ஆசிரியர் கள் தெரிவு செய்யப்பட்டிருத்தல்.

- திட்டமிடல் குழுவில் ஆசிரியர் கள் ஈடுபட்டிருத்தல்.

- பகிரப்பட்ட வகுப்புக்கள் திட்டத் தில் பிரதிபலிக்கபட்டிருத்தல்.

- நேரமும் . நிபுணத்துவமும் கொண்ட ஆசிரியர் குழு உறுப்பினரிடம் இணைப்புத் தொடர்பான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருத்தல்.

ஒரு பூரணத்துவமான ஆசிரியர் முழுமையான தேர்ச்சி பெற்ற ஆசிரியர் கள் அறிந்திருப்பவையும் செய்யும் பணிகளும் யாவை? என்பது பற்றி விளங்கிக் கொள்வதில் அதிக கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளனர். ஆசிரி யர் அறிந்திருக்க வேண்டியவையும் அவர்களால் செய்ய இயலு மானவையும் யாவை? என்பது பற்றி உலகளாவிய கருத்தொருமைப்பாட்டுக்கு இது எடுத்துச் சென்றுள்ளது. பல்வேறுபட்ட மட்டங்களிலான ஆற்றல்களையும் கற்றல் திறன்களையும் கொண்ட மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டிய பாட அறிவு, கற்பிக்க வேண்டிய

முறைகள், மாணவர்களின் கற்றலையும் அறிவையும் எவ்வாறு கண்காணிப்பது, பல்வேறுபட்ட கற்றல் தேவைகள் உடைய மாணவர்களுக்கு ஏற்றவிதத்தில் வேலைத்திட்டங்களை எவ்வாறு சீராக்குவது, பாடசாலையில் உள்ள ஏனைய ஆசிரியர்களுடன் கூட்டாக எவ்வாறு வேலை செய்வது? பாடசாலையில் வேறுபட்ட தரங்களில் பாடசாலையில் கற்றல் இலக்குகளை அடைவதற்கு கற்பித்தல் - கற்றல் உத்திகளை எவ்வாறு விருத்தி செய்வது மற்றும் கற்பித்தல் நடைமுறைகளின் பரிமாற்ற பிரதிபலிப்புக்கள் என்பன இதில் உள்ளடங்கியுள்ளன.

2003 ஆம் ஆண்டில் முழுமையான தேர்ச்சி உள்ள ஆசிரியர்கள் அறிந்திருக்க வேண்டியவை பற்றி பல்வேறு மட்டங்களில் ஆய்வு செய்த பின்னர் ஆய்வு முடிவாக பின்வருவன வெளியிடப்பட்டது. பாடசாலை மட்டத்தில் உள்ள ஆசிரியர்கள் இந்த நியமங்களுடன் தம்மை ஒப்பிட்டு ஆய்வு செய்வதற்கு ஊக்குவிப்புக்கள் வழங்க வேண்டும்.

1. பாட விடயத்தில் ஆழமான அறிவு கொண்டிருப்பதுடன் தொடர்ச்சியாக அதை இற்றைப்படுத்தி தாம் வாழும் சமூகம், சூழல் என்பவற்றுக்கேற்ப அவற்றை ஒழுங்குபடுத்தல்.

2. பல்வேறு கற்றல் மட்டத்தில் உள்ள மாணவர்களுக்கு கற்றலை இலகுவாக்கும் விதத்தில் அமைந்துள்ள பல்வகையிலான கற்பித்தல் தொழில் நுட்பங்களை பரந்த அளவில் பயன்படுத்தும் இயலுமை கொண்டிருப்பர்.

3. தலைவர் ஒருவருக்கு வேண்டிய பலவித பண்புகளைக் கொண்டிருப்பர். எவரும் அணுகுவதற்கேற்ற பண்பும் மாணவர், சகபாடிகள், பெற்றோர், மேனிலை அலுவலர் ஆகிய அனைவருடனும் ஒத்திசைவும், அனைவரையும் விளங்கிக் கொள்ளும் பண்புடையவராகக் காணப்படுவர்.

4. மாணவர் தமது வாழ்க்கையில் வெற்றி காண்பதற்கு உச்ச அளவிலான அர்ப்பணிப்புகளும் தமது எல்லைக்கப்பால் செல்லும் வாண்மைத்துவம் உடையவராக விளங்குவர்.

5. அனைவருக்கும் பின்பற்றத்தக்க முன்மாதிரியாக விளங்குவர். அவரின் பிரச்சினைக்கான மாறுதலை ஏற்படுத்த வல்லது.

தேசிய கல்வி நிறுவனத்தினால் இலங்கை ஆசிரியர்கள் கொண்டிருக்க வேண்டியதென தீர்மானிக்கப்பட்ட அடிப்படைத் தேர்ச்சிகள் தொகுதி ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

- √ தெளிவானதும் கவர்ச்சியானதுமான தொடர்பாடல் திறன்கள்.
- √ கடுமையாகவும் உற்சாகத்துடன் வேலை செய்வதற்கான தூண்டுதல்.
- √ ஒத்துழைப்பை நல்கி குழுக்களில் வேலை செய்வதற்கான ஆற்றல்.
- √ கற்பிக்கும் திறன்கள்.
- √ தொழில் வழிகாட்டல்கள்.
- √ உளவியல் சமூக ஆலோசனைத் திறன்கள்.
- √ வினைத்திறன் உடைய வகுப்பறை முகாமைத்துவம்

√ முன்வைக்கும் திறன்கள்.
√ பகுப்பாய்வுத் திறன்கள்.
√ பாட அறிவு.
√ மதிப்பீட்டுத் திறன்கள்.
√ வாழ்க்கை முழுதுமான கற்றல்.
√ சுய அபிவிருத்திக்கான தூண்டுதல்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறிகாட்டிகள்/ தேர்ச்சிகளுக்கேற்ப ஆசிரியர்கள் தம்மை சுய மதிப்பீடு செய்வதுடன் பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்திக் குழுவுக்கு தமக்கு அபிவிருத்தி தேவைப்படும் துறைகள் பற்றியும் தெரிவிக்க முடியும். பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஆசிரியர்கள் இத்தேர்ச்சிகளைப் பெற்றுத் தம்மை விருத்தியாக்கி செயற்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தும்.

"ஆசிரியர்களுக்கான பயிற்சியளித்தல் என்பது ஆசிரியர்களால் கற்கை நெறிகளுக்கு அனுப்புவது, கோட்பாடு அறிவு என்பவற்றைக் கற்பது என்ற வரையறைக்குட்பட்ட தன்று. பாடசாலைக்கும் தனிப்பட்டவர்களுக்கும் பெரிதும் பயனளிக்கக் கூடியதும் தனது வகிப்பாகத்தையும் பணிகளையும் பாடசாலையினுள் மேற கொள்ளக்கூடியதுமான தேர்ச்சி மட்ட அணுகுமுறையொன்றே ஆசிரியர் அபிவிருத்திக்குத் தேவையாகும். இவை இடம்பெறுவதற்கு பாடசாலையினுள்ளே பயிற்சிக்கான சந்தர்ப்பங்களை வழங்கக் கூடிய செயற்பாடுகள் இனங் காணப்பட்ட வேண்டும். பகிர்ந்து கொள்ளுதல், புத்தாக்கம், ஆய்வுகள், திறன்கள், அறிவு, நிபுணத்துவம் என்பற்றை மேம்படுத்த வழிகாட்டல் களையும் பயிற்சிகளையும் வழங்குவர். (PSI வழிகாட்டல் கைநூல்)

பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்திச் செயன்முறையானது எல்லா மட்டங்களிலும் முகாமைத்துவப் பொறுப்புக்களை ஒவ்வொருவரும் பகிர்ந்து கொள்வதையும், தேவையான போது தீர்மானம் மேற்கொள்ளலில் உரிய தனிநபர்களை குறைத்துக் கொள்வதையும் உள்ளடக்கியது. இது சிறந்த ஆற்றுகையாளருக்கும் உயர் வெகுமதியைக் கொண்டு வருவதை உறுதிப்படுத்தும். இந்த வெகுமதிகள் ஒருவரில் ஒருவர் தங்கியிருத்தல், உயர் பங்குபற்றல். அதிகரித்த மனவுறுதி, நிறுவகத்திற்கும் சொந்தமானவர் என்ற உணர்வு என்பவற்றை உள்ளடக்கிய தாகும். ஆசிரியர் அபிவிருத்தி என்பது குறித்த பணியைச் செய்வதற்கு தனிநபரது தயார்படுத்தல் மற்றும் தனிநபர் தனது ஆற்றல். தொழில் இரண்டிலும் மேலும் விருத்தி அடைவதற்கான சந்தர்ப்பங்களைத் தொடர்ச்சியாக வழங்குதல் என்பவற்றையும் உள்ளடக்கியது.

பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி அம்சங்கள்/ எண்ணக்கருக்கள்

1. பாடசாலை மட்டம்
2. அபிவிருத்தி
3. தொடர்ச்சியானதும், முறைமை கொண்டதும்
4. உள்ளடக்கம்
5. தனியார், குழுக்கள் பாடசாலை பற்றிய நோக்கும்
6. உள்ளக வெளிவாரி வளவாளர்கள்
7. ஆசிரியர்களின் வகிபாகம் உயிர்ப்புள்ளதாகும்
8. பல்வேறுபட்ட செயற்பாட்டு வளங்கள்
9. ஊக்குவிப்பு

அணுகுமுறை, எண்ணக்கரு என்பன தெளிவாக்கப்பட்டு அதிபரின் தலைமைத்துவத்தின் கீழ் ஒவ்வொரு பாடசாலையிலும் ஒரு ஒழுங்கு முறைமையின் கீழ் உருவாக்கப்படல் அவசியமாகும்.

ஆசிரியர் அபிவிருத்தி வேலைத் திட்டத்தைத் தாபிப்பதற்கான படிமுறைகள்.

- செயற்பாட்டிலுள்ள நடைமுறை மீளாய்வு.
- அபிவிருத்தி தேவைகளை இனம் காணுதலும் முன்னுரிமைப்படுத்தலும்
- ஆசிரியர் அபிவிருத்திக்குச் சாதகமான சூழ்நிலையைத் தாபித்தல்.
- ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்ட வடிவமைப்பு
- அடிப்படைக் கோட்பாடுகள்
- நோக்கம்
- வேலைத்திட்டக்கொள்கைகள்
- முகாமைத்துவ ஒழுங்குமுறைகள்
- செயற்படுமுறை (வகுப்பறை அவதானிப்பு உட்பட)
- வளங்கள்
- கண்காணித்தல், மதிப்பீடு செய்தல்.
- வேலைத்திட்ட அமுலாக்கம்
- வேலைத்திட்ட அமுலாக்கல் கண்காணிப்பு
- வேலைத்திட்டத்தின் விளைவுகளையும் பேறுகளையும் மதிப்பிடல்.

பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தியில் அதிபர்கள், ஆசிரியர்களுக்கான வழிகாட்டல்கள் தனித் தனியே இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

அதிபருக்கான வழிகாட்டல் உ+ம் : ஆசிரியர் கற்பித்தலையும் மாணவர்கள் கற்றலையும் அவதானிக்க வகுப்பறைக்கு சீரான முறையில் செல்லுதல்.

ஆசிரியருக்கான வழிகாட்டல் உ+ம் கற்றல் ஒரு தொடர் நிகழ்வு என்பதையும் உணர்ந்து முயற்சி மேற்கொள்ளுதல்.

பயிற்சித் தேவைகளை அடையாளப்படுத்துவற்குப் பயன் படுத்தக் கூடிய வழிகள்

- பிரச்சினைகளின் பகுப்பாய்வு
- ஊகித்தறியும் செயலமர்வுகள்
- நெருக்கடியான சம்பவ நுட்பம்
- சிறுகுழுக் கலந்துரையாடல்
- வகிபாகத் தொகுதியினருட -னான நேர்முகம்
- அவதானிப்பு முறை
- ஆற்றுகை மதிப்பீட்டு முறை
- மனப்பாங்கு அளவீடுகள்
- பெற்றோர், பொதுமக்கள், ஊடகங்கள் ஆகியவற்றிலிருந் -தான தகவல்கள்

பாடசாலை மட்ட ஆசிரியர் (SBTD) வாண்மைத்துவக் கற்றலுக்கான உத்திகள்

- விடயம் சார் கலந்துரையாடல்
- செயல்வழி ஆய்வுகள்
- சீரான கற்றல் குழுக்கள்
- சகபாடி பயிற்சி
- பாடசாலைமட்ட தொழில் வழிப்படுத்தல்
- வேறு பாடசாலைகளுடன் ஒத்துழைப்பு
- வாண்மைத்துவ வலையமைப்பு
- வாண்மைத்துவ விருத்திக்கான தொழிநுட்பங்களைப் பயன் படுத்தல்.

- மாணவர் வேலைகளைப் பரீட்சித்தல்.
- செய்து காட்டுதல் பாடங்கள்
- கற்றல் – கற்பித்தல் சாதனங்கள் தயாரித்தல்/ பயன்படுத்தல் கல்விசாரா உதவிகள்

கல்விசார் உதவியாளர்கள், தாங்கள் சிறந்த முறையில் பங்காற்றுவதற்கு சிறந்த தேர்ச்சிகள் சிலவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும். இதில் முக்கியமாகக் கருதப்படும் சில தேர்ச்சிகளாவன:

- பாடத்தின் கோட்பாடுகள் தொழில் நுட்ப மற்றும் செயன்முறை அடிப்படைகள் பற்றி பரீட்சயமுடையவராக இருத்தல்.
- தரவு சேகரித்தலும் பகுப்பாய்வு முறைகளும் பற்றிய பொதுவான அறிவு.
- பாடசாலையில் பல்வேறுபட்ட தனியாட்களின் வகிப்பாகம் தொழிற்பாடுகள் பற்றி போதுமான அறிவு.
- பாடசாலை அமைப்பில் ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் பிரச்சினைகளை இனம் காணுவதற்கான திறன்.
- பரந்ததும் தனிப்பட்ட ரீதியானதுமான தலையீடுகளை வரவழைத்து அமுல் படுத்தும் திறன்.
- தலையீடு ஒன்றினைக் கணகாணிக்கவும் அமுல்படுத்தலை மதிப்பீடு செய்யவும் உரிய திறன்.
- நோக்கங்கள் அடைவதற்கான நேர முகாமைத்துவம்.
- குழுவுக்கான பகிர்ந்தளிக்கப்பட்ட நோக்கம் இலக்குகளை முன்னெடுத்துச் செல்வதற்கான ஆற்றல்.
- சிறந்த ஆளிடைத் தொடர்புத் திறன்.
- ஏனையோரின் கருத்துக்களுக்கு மதிப்பு அளிக்கும் ஆற்றல்.
- ஏனையோரின் முயற்சிகளைப் பாராட்டும் ஆற்றல்.
- ஏனையோரிலும் அவர்களின் கொள்ளளவுகளிலும் நம்பிக்கை.
- ஒருவரின் பிரச்சினைகளைத் தனக்குரியது போன்று கருதிச் செயற்படல்.

பாடசாலை மட்ட ஆசிரியர் விருத்திவேலைத்திட்டத்தின் தேவை யாதெனில் தற்போது நடைமுறையிலுள்ள பல்வேறு ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டங்கள் பாடசாலையின் தேவையுடன் நேரடியாக தொடர்புடத் தவறியுள்ளன. அவ்வாறு பார்க்கையில் பல்வேறு நிறுவனங்கள் மூலமாக தற்போது ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. உதாரணமாக கல்வி அமைச்சு, மாகாண/ வலய/ கோட்டக் கல்விக் காரியாலயங்கள் மற்றும் பல்கலைக்கழகம் தேசியகல்வி நிறுவகம், தேசிய கல்விக் கல்லூரி, ஆசிரியர் கல்லு/ரி ஆசிரிய மத்திய நிலையம் மற்றும் வேறு அரச தனியார் நிறுவனங்கள் மூலமாக இவை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வேலைத் திட்டங்கள் பெரும்பாலும் பாடசாலைக்கான குறிப்பான தேவைக் குப் பொருத்தமாக அமைவதில்லை. பிறரால் திட்டமிடப்பட்ட பாரம்பரியமான ஆசிரிய கல்விச் செயற்பாடுகளை விட பாடசாலைகளால் இனங் காணப்பட்ட தமது தேவைகளுக்குப் பொருத்தமான வேலைத்திட்டங்கள் பாடசாலைகளாலேயே நடைமுறைப் படுத்தப்படுவதன் மூலம் உயர் அடைவுகள் எட்டப்படலாம் என எதிர்பார்க்கப் படுகின்றது.

தமது வேலைத்திட்டமென்ற உணர்வானது ஆசிரியர்களின் ஆக்க பூர்வமான பங்களிப்பு கிடைக்க வாய்ப்பாக அமையும்.

பாடசாலைகளின் பௌதீக மற்றும் ஏனைய வசதி வாய்ப்புக்களுக் கமைவாய் நடைமுறைப் படுத்தப்படும் இத்தகைய விசேட வேலைத்திட்டங்கள் பயன் மிக்கதாகக் காணப்படும்.

வேலைத்திட்டங்களின் விளை வுகளை நேரடியாகக் கண்டு கொள்ள முடியும்.

ஆசிரிய விருத்தி மூலமான மாணவர்களின் அடைவு மேம்பாட்டுக் கான வேலைத்திட்டங்கள் பாடசாலைச் செயற்பாடு இடம்பெறும் நேரத்தில் லேயே நடைபெறுவதால் நேரமும் வளங்களும் சிறந்த முறையில் பயன்படுத்தப்படும்.

ஆசிரியர்கள் தமக்கிடையே வாண்மை விருத்தி தொடர்பான கருத்துப் பரிமாற்றங்கள் செய்யவும் இடைத்தொடர்புகளை வளர்த்துக் கொள்ளவும் உதவும்.

பாடசாலைகள் சுய விருத்திக் கான ஆற்றலைப் பெற பயிற்சியும் சந்தர்ப்பமும் கிடைக்கும்.

இவ்வாறான தொடர் வேலைத் திட்டம் கண்காணிப்பிற்கும் மதிப்பீட்டிற் கும் உட்படுத்தப்படல் விரும்பத்தக்கது. அதிபர்கள் பாடசாலை மட்ட ஆசிரியர் மேம்பாடு வேலைத்திட்டங்களை கண்காணித்து அறிக்கைப்படுத்துவதற் காக பொருத்தமான திட்டமொன்றை செயற்படுத்தல் வேண்டும். ஒவ்வொரு தவணை இறுதியிலும் தமது பாடசாலையில் இடம்பெற்ற பாடசாலை மட்ட ஆசிரியர் மேம்பாட்டு வேலைத் திட்ட மதிப்பீட்டறிக்கையை வலயக் கல்விக் காரியாலயத்தில் இவ்வேலைத் திட்டத்திற்குப் பொறுப்பான கல்வி அதிகாரிக்கு கிடைக்கச்செய்ய வேண்டும். வேலைத்திட்டங்களின் பூரண வெற்றியானது ஆசிரியர்களின் ஆக்கபூர்வமான பங்களிப்பில் தங்கியுள்ளது. இதற்காக ஆசிரியர் களை ஊக்கப்படுத்தி ஈடுபட வைப்பது அதிபர்களின் பொறுப்பாகும். மேற்படி வேலைத்திட்டம் மூலம் உயர் பெறுபேறுகளை அடைய முடியுமென எதிர்பார்க்கப்படுவதினால் வளர்ச்சி யடைந்துவரும் பெரும்பாலான நாடுகள் இம்முறையை நடைமுறைப்படுத்து வதில் ஆர்வம் காட்டுகின்றன. இவ்வகையில் வளர்ச்சியடைந்து வரும் நாடான இலங்கையிலும் கற்றல் கற்பித்தல் செயன்முறையின் மேம் பாட்டிற்காக இவ்வணுகுமுறை மிகவும் பொருத்தமானமதாக அமையும்.

**உசாத்துணைகள்**

சுற்றுநிருபம் இல 10/ 2013 கல்வி அமைச்சு, இசுருபாய, ஸ்ரீஜயவர்த்த னபுர, பத்தரமுல்ல.

சின்னத்தம்பி. மா. (2012) ஆசிரியர் வழிகாட்டி, கொழும்பு, குமரன் வெளியீட்டகம்.



# Think a Minute

**Mr. C. J. Arulanayagam**
*Teacher of English.*

1. There is no short cut to perseverance and hard work winners are simply people who are willing to work harder than losers. which are you?

2. Is there margin for error in your life? Margin is the space between your load and your limit. I hope your load is not heavier than your limits.

3. As you spend much of your life at work be happy at work. But if you're not either change your job or change you attitude towards your job.

4. If you ask the wrong people the wrong questions you will do the wrong things. So move with those who will help you navigate the maze of life.

5. If you want to live a successful and satisfying life then live to give and help others. How happy you are depends on how much you live for others.

6. Man can live 40 days without food. 3 days without water and 3 minutes without air. But he can not live 1 minute without hope. Are you hopeless?

7. A good life is when you assume nothing do more needless smile of ten dream big laugh a lot and realize how blessed you are.

8. No person has ever slept his way to success. Many people want the greener grass, but they don't want to pay the higher water bill to get it.

9. Your words can blow up bridges or heal hearts it all depends on how you use them. You can use words as a weapon to hurt or a tool to help.

# வரலாறு பாடத்தில் உயர் அடைவைப் பெறுவதற்கான இடர்பாடுகளை இழிவளவாக்குதல்.

திருமதி. நிர்மலாதேவி ஈஸ்வரன் BA (Hons), PGDE (Merit), MEd Reading - ஆசிரியர் - மன் / புனித வளனார் றோ.க.த.வி. - தாழ்வுபாடு

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப் படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும், அதன் சமூகமும் அறிவாற்றலினால் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும். இதனாலேயே இன்று அனைவருக்கும் தரமான கல்வியை வழங்கி அதனூடாக தரமான சமூகத்தை கட்டி எழுப்பும் நோக்குடன் அரசாங்கம் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது .

ஒரு நாட்டின் பாடசாலைக் கலைத்திட்டமானது பூரணத்துவமிக்க மனிதர்களை உருவாக்கும் வகையில் அமைய வேண்டும். இதற்கமைவாகவே ஒவ்வொரு நாடுகளும் தமது கலைத் திட்ட ஒழுங்கை உருவாக்க முயல் கின்றன. இலங்கையும் இதற்கு விதிவிலக்கன்று. இலங்கையின் பாடசாலைக்கலைத் திட்டத்திலே வரலாறு பாடத்தின் தனித்துவம் உணரப்பட்டு பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை வரலாறு பாடம் அரசினால் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் சுதந்திரத்தின் பின் பாடசாலைக்கலைத்திட்டத்திலே வரலாறு பாடமானது சரித்திரம் எனும் பெயரிலே அமைந்திருந்தது எனினும் 1972ஆம் ஆண்டு கல்விச்சீர்திருத்தத்திலே அக்காலத்தில் காணப்பட்ட புவியியல், குடியியல் எனும் பாடங்களுடன் சரித்திரமும் இணைந்து சமூகக்கல்வி எனும் ஒன்றிணைந்த பாடம் உருவாக்கப்பட்டது. ஆயினும் அரசு எதிர்பார்த்த நோக்கத்தினை அடையாது போகவே "வரலாறும் சமூகக்கல்வியும்" எனும் பாடம் பிற்பட்ட காலங்களில் உருவானது.

இவ்வாறு சமூகக்கல்விப் பாடத்துடன் ஒன்றிணைந்திருந்த வரலாறு பாடத்தின் முக்கியத்துவத்தினை உணர்ந்து களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்காகவும் நமது நாட்டின் தனித்துவத்தை அறிந்து அதைப்பாதுகாத்து உலகின் நிலைமைகளுக்கு முகங்கொடுக்கக் கூடிய நாட்டுப்பற்றுள்ள ஆற்றல் நிறைந்த இலங்கையரை உருவாக்குவதை நோக்கமாக கொண்டு பாடசாலைக் கலைத்திட்டத்திலே முதற்கட்டமாக இடைநிலைப்பிரிவில் தரம் 6, 10

களில் கட்டாய பாடமாக 2007ம் ஆண்டில் இருந்து வரலாறு பாடம் பாடசாலை மட்டத்தில் நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

இந்த நோக்கத்தினை மேலும் அர்த்தமுள்ளதாகச் செயற்படுத்த 2015ம் ஆண்டிலிருந்து புதிய கல்வி மறு சீரமைப்பின் மூலம் வரலாறு பாடம் தேசிய பொதுக்குறிக்கோள்கள் மற்றும் தேசிய பொதுத் தேர்ச்சிகளை அடிப்படையாக கொண்டு ஏற்கனவே இருந்த தேர்ச்சிகளில் சில மாற்றங் களைச் செய்து முதற்கட்டமாக தரம் 10, 06 களில் அறிமுகப்படுத்தப்பட்டு 2016ம் ஆண்டில் தரம்– 11, 07களில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இதன்படி 6– 9ஆம் தரங்களில் வாரமொன்றிற்கு இரண்டு பாடவேளைகளும் தரம் 10 – 11 ஆம் தரங்களில் வாரமொன்றுக்கு மூன்று பாடவேளைகளும் ஒதுக்கப் பட்டுள்ளன.

2006/04 ஆம் இலக்க சுற்று நிருபத்திற்கு இணங்க 2007ம் ஆண்டு முதல் வரலாறு பாடத்தினை கருப் பாடங்களில் ஒன்றாக கற்பதற்கான நோக்கங்களாவன.

- வரலாற்றுப் போக்கு , வளர்ச்சி என்பவற்றை விளங்கி வரலாற்றுக்காலத்தில் இடம் பெற்ற மாற்றங்களைப் புரிந்து கொள்ளல்.
- கடந்த காலத்தைப் பற்றி கற்பதனூடாக நிகழ்காலத்தைப் புரிந்து கொண்டு எதிர்காலத்தை நன்கு திட்டமிடல்.
- தேசிய தனித்துவத்தினை இனங்கண்டு தேசிய அருஞ்செல்வங்களைப் பாதுகாத்து நாட்டுப்பற்றுள்ள பிரசையாக உருவாதல்.
- தேசிய பிரச்சினைகளை ஒப்பிட்டு ரீதியாக நோக்குதல்
- ஏனைய கலாசாரங்களுக்கு மதிப்பளித்தல்.
- கால ஒழுங்கு, மூலாதார உசாவுகை, காரணகாரியத் தொடர்புகள் என்பன மூலம் கட்டியெழுப்பப்படும் பகுத்தறிவு ரீதியான கல்வியறிவை நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்தல்.
- முக்கிய வரலாற்று மனிதர் களின் சரிதைகளை முன் மாதிரியாகக் கொள்ளல்.
- வரலாற்று ரீதியான உலகப் போக்குகள் இந்நாட்டு வரலாற்றில் ஏற்படுத்திய தாக்கங்கள் தொடர்பாக விளங்கி உலகின் சமகாலப் போக்குகளை எதிர்கொள்ளும் ஆற்றலைப் பெறல்.
- காலம் தொடர்பான அறிவை வளர்த்துக் கொள்ளல்.
- வரலாற்றுத் தகவல்களின் ஊடாக இடங்களை அறிந்து கொள்ளல்.

போன்ற நோக்கங்களுக்காக இப்பாடம் இன்று கருப்பாடங்களில் ஒன்றாக அறிமுகப்படுத்தப்பட்ட போதும் வரலாறு பாடத்தினை கற்பதில் மாணவர்களும் கற்பிப்பதில் ஆசிரியர் களும் பல்வேறு இடர்பாடுகளை

எதிர்கொள்கின்றனர். அத்துடன் க.பொ.த சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளில் உயர் அடைவு மட்டம் ஏனைய பாடங்களுடன் ஒப்பிடும் போது குறைவாகவே காணப்படுகின்றது. அத்துடன் இடைநிலைப் பிரிவு மாணவர்களின் கருத்துக் கணிப்பில் இது ஒரு கஸ்டமான பாடமாகவே காணப்படுகின்றது.

எனவே இவ்வாறான கடினத் தன்மையை இலகுவாக்கி மாணவர்கள் இப்பாடத்தை மகிழ்ச்சிகரமாக கற்பதற்கும் ஆசிரியர்கள் கற்பிப்பதற்கும் இப்பாடத்தின் இடர்பாடுகளை இழிவளவாக்கி உயர் அடைவுமட்டங்களை பெறுவதற்குமான உபாயங்களாக பின்வரும் செயற்பாட்டு நுட்பங்களை குறிப்பிட முடியும்.

**மகிழ்ச்சிகரமான கற்றல் கற்பித்தல் முறைகளைக் கையாளுதல்**

வரலாறு பாடத்தினை கற்பதற்கு சிறந்த கற்பித்தல் முறைகளாக கதைசொல்லும் முறை, நடித்தல் முறை, குழுப்போதனை முறை, உரையாடல் முறை, களப்பயணம், கேள்வி கேட்டல்முறை, நுண்நிலை கற்பித்தல் முறை என்பவற்றைக் குறிப்பிட முடியும்.

இதன் மூலம் வரலாற்று விடயங்களை அல்லது நிகழ்வுகளை கால ஒழுங்கில் சுவைபடக் கதையாக எடுத்துரைப்பதன் மூலம் மாணவர்களின் கற்றல் ஆர்வத்தை தூண்ட முடியும். கடந்த கால நிகழ்வுகளை நடித்தல் முறையினூடாக ஈடுபடுத்தும் போது மாணவர்கள் மகிழ்ச்சிகரமான கற்றலில் ஈடுபடுவதை அவதானிக்க முடிகின்றது. குழுப்போதனா முறை என்பது ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இணைந்து தமக்கு பாண்டித்தியமான பாடப்பகுதிகளைத் தெரிவு செய்து கற்பித்தலாகும். இதன் மூலம் மாணவர்கள் புதிய எதிர்பார்ப்புடன் மகிழ்ச்சிகரமான கற்றலில் ஈடுபடுகின்றனர். களப்பயணங்களை ஒழுங்குபடுத்துவதன் மூலம் மாணவர்கள் நேரடி அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதுடன் நம்பகத்தன்மையும் அதிகரிக்கின்றது. அத்துடன் கேள்வி கேட்டல் முறையின் ஊடாகவும் மாணவர்களின் சிந்தனைகளைக் கிளறி புதிய கருத்துக்களைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது. மேலும் நுண்நிலைக் கற்பித்தல் மூலம் “எதைக்கற்பித்தல் என்பதை விட எப்படிக்கற்பித்தல்” என்பதே நுண்நிலைப் பயிற்சியின் அடிப்படையாகும்.

**வினாத்தாள் கட்டமைப்பை தெளிவு படுத்துதல்.**

2015ஆம் ஆண்டு மறுசீரமைப்புக்கு அமைய இவ்வருடம் முதற் தடவையாக க.பொ.த சாதாரணதர பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றவுள்ளனர். இதில் வரலாறு பாட வினாத்தாள் கட்டமைப்பை பார்க்கும் போது இது தரம் 10, 11 தேர்ச்சிகளை உள்ளடக்கியதாக தயாரிக்கப்படும் இதில் பகுதி I ல் 40 பல்தேர்வு வினாக்கள் ( MCQ) உள்ளடக்கப்படும். இதில் 20 வினாக்கள் தரம் 10 இலும் 20 வினாக்கள் தரம் 11லும் உள்ளடக்கியதாகக் காணப்படும். பகுதி IIல் முதலாம் பகுதி கட்டாயமானது. இதில் இருபகுதிகள் உள்ளன a பகுதி 12 புள்ளிகளுக்குரிய இலங்கைப்படம் குறித்தலுக்காகவும், 6

புள்ளி உலகப்படம் குறித்தலுக்காகவும் வழங்கப்படும். இதில் b பகுதி படங்களையும் வரலாற்று நிகழ்வு களையும் அடிப்படையாக கொண்ட மூன்று வினாக்கள் 12 புள்ளிகளுக் குரியதாகக் காணப்படும். இரண்டாம் பகுதி இலங்கை வரலாற்றை உள்ளடக்கிய ஆறு வினாக்களைக் கொண்ட பகுதியாகும். இவ்வினாக்கள் கட்டமைப்பு, பகுதிக் கட்டமைப்பு, கட்டுரை வகை வினாக்களை உள்ளடக்கியது. இதில் 4 ற்கு விடையளிக்க வேண்டும். பகுதி III உலக வரலாறு தொடர்பாக தரம் 10 ல் 9ம் அலகினையும் தரம் 11ல் 1,7,8ம் அலகுகளையும் உள்ளடக்கிய 2 வினாக்கள் வழங்கப்படும். இதில் ஒன்றிற்கு மாத்திரம் விடையளிக்க வேண்டும்.

எனவே இவ்வினாத்தாள் கட்டமைப்பை மாணவர்களுக்கு தெளிவு படுத்தும் போது அவர்கள் தம்மை பரீட்சைக்கு தயார்ப்படுத்திக் கொள்ள இலகுவாக இருக்கும்.

**மாணவர்களைச் சுய கற்றலில் ஈடுபடச்செய்தல்.**

மாணவர்களின் ஓய்வு நேரப் பயன்பாட்டை வாசிப்பின் பக்கம் செலுத்துவதன் அவசியம் பற்றி உணர்த்தி வரலாறு பாடப் புத்தகங் களையும் ஏனைய வரலாறு தொடர்பான புத்தகங்களையும் வாசிக்கத் தூண்ட வேண்டும். அத்துடன் 3R முறையையும் அவர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

1. வாசித்தல் (Read)
2. சொல்லிப்பார்த்தல். (Recite)
3. மீட்டுப்பார்த்தல். (Review)

இதன் மூலம் மனனம் செய்யும் திறன் அதிகரிப்பதுடன் கற்றல் விடயங்களை தாமகவே அறிந்தவர் களாகவும் மீத்திறன் மிக்கவர்களாகவும் காணப்படுவர்.

**புற உருவப்படப் பயிற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்தல்.**

க.பொ.த சாதாரண தர வரலாறு பாட பகுப்பாய்வு அறிக்கையின் படியும் தவணைப்பரீட்சை மதிப்பீட்டின் போதும் அதிகளவான மாணவர்கள் இலங்கைப் புற உருவப்படம், உலகப்புறஉருவப்படம் குறித்தலில் மிகக் குறைவான புள்ளிகளையே பெறுகின்றனர். இப்பிரச்சினையை இழிவளவாக்கு வதற்கு அதிகளவான படப்பயிற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்தி ஊக்கப்படுத்த வேண்டும்.

**பாடநூலில் காணப்படும் கடினமான சொற்களுக்கான விளக்கங்களை காட்சிப்படுத்த வேண்டும்.**

தற்போதைய புதிய பாடத் திட்டத்தின் படி தரம் – 10 பாடநூலில் அதிகளவான சொற்கள் சிங்கள மொழிச்சொற்களாகவும் பண்டைய கால மொழிச் சொற்களாகவும் காணப்படுகின்றன. இச்சொற்களைத் தொகுத்து அதற்குரிய சரியான பொருளைக் குறிப்பிட்டு வகுப்பறையில் காட்சிப்படுத்த வேண்டும். இதனை மாணவர்கள் நாளாந்தம் பார்வையிடும் போது அதில் தேர்ச்சி பெற்றவர் களாகவும் காணப்படுவர்.

**மாணவர்கள் நாளாந்தம் படிப்பதற்கும் கூடுதலான பயிற்சிகளில் ஈடுபடுவதற்கும் ஊக்கமாளிக்க வேண்டும்.**

மாணவர்கள் நாளாந்தம் வீட்டில் படிப்பதற்கு பெற்றோர் வசதி செய்து கொடுப்பவர்களாக இருக்க வேண்டும். அவர்களை அன்புடன் ஊக்கப் படுத்துபவர்களாகவும் அவர்களின் ஒழுக்க நடவடிக்கைகளை கண்காணிப் பவர்களாகவும் நல்வழிப்படுத்து பவர்களாவும் இருக்க வேண்டும். அத்துடன் ஆசிரியர்கள் இப்பாடத்தில் அதிகளவு பயிற்சிகளை வழங்குவதுடன் மேலதிக வினாப்பத்திரங்களைச் செய்வித்தல், அலகு ரீதியான பரீட்சை போன்றவற்றை நடாத்தி மதிப்பிட்டு பின்னூட்டல்களை வழங்குவதில் ஒதுங்கியிருக்காமல் முனைப்புடன் செயற்பட வேண்டும். இதன் மூலம் உயர் அடைவு மட்டத்தினை பெற்றுக்கொள்ள முடியும்

**கண்காட்சி கல்விச்சுற்றுலா போன்றவற்றை ஒழுங்குபடுத்தல்**

பாடசாலைகளில் வருடத்திற் கொரு தடவையேனும் கண்காட்சி, கல்விச்சுற்றுலா போன்றவற்றை ஒழுங்குபடுத்த வேண்டும். சமாந்தர வகுப்புக்களிடையிலும், தரங்களுக் கிடையிலும் வரலாறு, புவியியல், சித்திரம் போன்ற பாடங்களை இணைத்து கண்காட்சியினை நடாத்தி சிறந்த ஆக்கங்களிற்கு பரிசில்களையும் பாராட்டுக்களையும் வழங்கும் போது மாணவர்களின் கற்றல் ஆற்றல் அதிகரிப்பதுடன் சிறந்த அனுபவத் தினையும் பெற்றுக் கொள்கின்றனர். அத்துடன் கல்விச்சுற்றுலாக்களின் போதும் அதிகளவான வரலாற்றிடங் களைப் பார்வையிடுவதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். அநுராதபுரம், பொலன்னறுவை, இரத்தினபுரி போன்ற பிரதேசங் களிலுள்ள வரலாற்று கட்டடங்கள், சிதைவுகள், மயானங்கள், குளங்கள் என்பவற்றை நேரில் பார்த்துக் கற்கும் போது அவர்களின் கற்றல் அனுபவம் விருத்தியடைவதுடன் ஞாபகத்திறனும் அதிகரிக்கின்றது.

**இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கு பொருத்தமான நேரத்தை ஒதுக்குதல்.**

இன்று பாடசாலைகளில் இணைப்பாடவிதான செயற்பாடுகளாக விளையாட்டுப் போட்டிகள்,தமிழ், ஆங்கில தினப்போட்டிகள், கலை இலக்கியப்போட்டிகள், மன்றச் செயற்பாடுகள், சாரணியம், மத வழிபாட்டு விழாக்கள், சுகாதார முதலுதவி, வங்கிச் செயற்பாடு, மாண வர் படையணி, சிறுவர் பாராளுமன்றம், தலைமைத்துவப் பயிற்சி போன்ற பல்வேறு செயற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன. இச்செயற்பாடுகள் கற்றல் கற்பித்தலில் தாக்கம் செலுத்துவதாலும் இன்னும் கல்வியின் நோக்கம் பரீட்சை மையமாக இருப்பதாலும் இவ் இணைப்பாட விதான செயற்பாடு களுக்கு பாடசாலை நிர்வாகக் கட்டமைப்பு பொருத்தமான நேரங்களை ஒதுக்க வேண்டும். இதன் மூலம் கற்றல் செயற்பாட்டில் கூடிய வினைத் திறனுடன் செயலாற்ற முடியும். அத்துடன் கல்விப் பெறுபேற்றுடன் இணைப்பாடவிதான செயற்பாடு இணையும் போதே அதன் பெறுமதி பயனுடையதாகின்றது.

**மெல்லக்கற்கும் மாணவர்களிடமும் மீத்திறன் மாணவர்களிடமும் விசேட கவனம் செலுத்த வேண்டும்.**

மெல்லக்கற்கும் மாணவர்களுக்கு இலகுவில் இருந்து கடினம் நோக்கியசிறிய சிறிய பயிற்சிகளை வழங்க வேண்டும். மீத்திறன் மாணவர்களுக்கு அவர்களின் சிந்தனைகளைத் தூண்டக்கூடிய பயிற்சிகளை வழங்க வேண்டும்.

**குறித்த காலப்பகுதியில் பாடத்திட்டங்கள் நிறைவு செய்யப்படல் வேண்டும்.**

தரம் 10, 11 களில் வரலாறு பாடம் கற்பிப்பதற்கு 03 பாடவேளைகள் போதாமையினால் ஒதுக்கப்பட்ட சில பாடவேளைகளைப் பெற்றும் மேலதிக வகுப்புக்களை நடாத்தியும் குறித்த காலப்பகுதியில் பாடத்திட்டங்களை நிறைவு செய்வதன் மூலமும் அதிகமான மீட்டல் பயிற்சிகளை வழங்குவதன் மூலமும் இப்பாடம் கருப்பாடமாக இருப்பதால் இவ் வகுப்புகளுக்குரிய பாடவேளையை 5 ஆக அதிகரிக்கும் போது உயர் அடைவை பெற்றுக் கொள்ளலாம் என எதிர்பார்க்கப் படுகின்றது.

**பாடசாலை மட்ட கணிப்பீட்டு வேலைத்திட்டங்கள் உரிய காலத்தில் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.**

வரலாறு பாடத்திற்கு தவணைக்கு 3 என்ற அடிப்படையில் 15 கணிப்பீடுகள் ( தரம் 10, 11 ல் ) பூர்த்தி செய்யப்படல் வேண்டும். இதனை ஆசிரியர்கள் உரியகாலத்தில் செய்து முடிக்கும் போது மாணவர்களுக்கும் பரீட்சைக் காலங்களில் தம்மைத் தயார்ப்படுத்த இலகுவாக அமையும்.

**அதிகரித்த தொலைக்காட்சிப் பாவனையையும், தொலைபேசிப்பாவனையையும் இழிவளவாக்குதல்.**

இன்று அதிகரித்த தொலைக் காட்சிப்பாவனை, தொலைபேசிப் பாவனை என்பன கல்விக் கலாசாரத்திற்கு பெரும்சவாலாக காணப் படுகின்றது. இதனை பெற்றோர்களும், மாணவர்களும் அவசியமானதும் அவசர மானதும் என்பதனை கருத்திற் கொண்டு இப்பாவனையை முடியுமானவரை இழிவளவாக்க வேண்டும்.

**இலகு கற்றல் கையேடுகளை தயாரித்து மாணவர்களுக்கு வழங்குதல்**

தரம் 10, 11 வரலாறு பாட அலகு ரீதியான தகவற் பத்திரங்கள், இந்நூல்களில் காணப்படும் கலை, கலாசார, மன்னர்களின் படங்கள் என்பனவற்றை தொகுத்து அவை தொடர்பான முக்கிய தகவல்களை உள்ளடக்கியும் வரலாற்றிடங்கள், நதிகள், குளங்கள், கால்வாய்கள், துறைமுகங்கள், நாடுகள், குடாக்கள் என்பனவற்றை தொகுத்து இலங்கைப் படம், உலகப்படம் என்பவற்றில் குறித்து அவற்றினை பாடசாலையின் HOP நிதியில் நிழற்பிரதி எடுத்து கையேடாக மாணவர்களுக்கு வழங்கி இப்பாட கற்றலை மேம்படுத்தலாம். ஏனெனில் பரீட்சைக்கு பாடநூலில் பிரசுரிக்கப் பட்டுள்ள படங்களிலிருந்தே வினாக்கள் வருகின்றன என்பன குறிப்பிடத்தக்கது.

**ஆசிரியர்களின் வாண்மை விருத்தியை அதிகரிக்க வேண்டும்**

இன்று நமது நாட்டைப் பொறுத்த வரை வாண்மை விருத்தியை அதிகரிப்பதற்கு நிறைய வாய்ப்புக்களும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. இதனை ஆசிரியர்கள் பயன்படுத்தி தமது துறை ரீதியான அறிவை மேம்படுத்த முயற்சிக்கலாம். அதாவது வரலாறு பாடத்தில் முது கலைமாணி (MA) போன்ற பட்டப்படிப்புக்களை தொடர்வதன் மூலம் தமது அறிவை விருத்தி செய்வதுடன் மாணவர்களின் அறிவினையும் மேம்படுத்த முடியும்.

இவ்வாறாக ஆசிரியர் மேலும் பல வழிமுறைகளைக் கையாள முடியும். நவீன கற்பித்தல் துணைச்சாதனங்கள், இணைய வழித் தேடலுடனான கற்கை முறைகள், மாணவர்களின் வினைத்திறனான செயற்பாடுகளைப் பாராட்டுதல், தட்டிக்கொடுத்தல், கவின்நிலை மிக்க வகுப்பறையை உருவாக்குதல் போன்ற செயற்பாடுகளின் ஊடாகவும் மாணவர்கள் வரலாறு பாடத்தை விருப்புடன் கற்று வினைத்திறனாக செயலாற்றி உயர் அடைவு மட்டங்களை விளைதிறனாக பெற்றுக் கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

**உசாத்துணைகள்.**


- சின்னத்தம்பி, மா. (2009), ஆசிரியரை வினைத்திறன் மிக்கவராக்குதல், சேமமடு புத்தகசாலை, கொழும்பு.
- சசிகலா,கு. (2013), . சுயகற்றலின்பால் மாணவர்களை சுய நெறிப்படுத்தல், அகவிழி.
- கினிகே.ஐ.எஸ். (2008), தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட கலைத்திட்டமும் செயற்பாட்டுத் திட்டங்களும், பாதுக்கா கல்வி வாண்மை விருத்தி மைய வெளியீடு.
- க.பொ.த (சா/தர)ப் பரீட்சை, (2014), மதிப்பீட்டு அறிக்கை, 33- வரலாறு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்.


**ஒரு புத்தகத்தைப் படிப்பது ஒரு நண்பரைப் பெறுவது போன்ற இனிய அனுபவம். அந்தப் புத்தகத்தை மீண்டும் படிப்பது நெடுநாள் பிரிந்த நெருங்கிய நண்பரைத் திரும்பவும் சந்திப்பது போன்ற சுகமான அனுபவம்.**

**– கார்ல் மார்க்ஸ்**

# மன்னாரின் மாண்பும் நல்மாணவர் பண்பும்

**திரு. கு. கிருபாகரன்**
*ஆ சிரியர் - மன் / சென் பற்றிமா ம.ம.வி., பேசாலை.*

*ஈழத் திரு நாட்டின் வட திசையில்*
*ஆழக் கடலின் அலை இசையில்*
*இன்புறும் இரு வகை நிலம்*
*இணைந்த எழிற் கோலம்*
*இடையே ஒரு பெரும் பாலம்*
*கிழக்கே மாதோட்டம்!*
*மேற்கே நீர்க் கூட்டம்!*

*நன்நகராம் மன்னார் - அதன்*
*நயம் தனை - எழுத,*
*விளைந்தது என் பேனை - இது*
*தானைத் தலைவியின் காலத்து ஆணை*
*தங்கள் துணையோடு மண்ணுக்கு*
*வரவைப்போம் நீலவானை!*

*மதி மயக்கும் அதிசயங்கள்*
*வானோர் வியக்கும் மாயங்கள்*
*அனேகம் உண்டு*
*கற்கண்டு கலந்த சொற்கொண்டு*
*உரைக்க வந்தேன் ஒன்றிரண்டு*

*அலை நுரை ஓவியம் வரையும்*
*அழகிய கடற்கரை மன்னாரை ஆட்கொள்ள*
*அதன் மேன்மையினைச் செம்மையுறச் சொல்ல*
*நான் ஒன்றும் கம்பன் அல்ல*

*மும் மதங்களின் சமத்துவம்*
*இம் மண்ணின் மகத்துவம்*
*மாதோட்டம் எங்கும்*
*கானமயில்க் கூட்டம் - அவை*
*பாலாவிக் கரையினில்*
*காலைப் பனியில் இசை மீட்டும்*
*ஆம்பலும் அல்லியும் கைகாட்டும்*
*சம்புப் புற்கள் தலையாட்டும்*

*ஆநிரைகள் அதற்கு உணவு தரும் புற்தரைகள்*
*அதன்மீது துள்ளியோடும் மான் மரைகள்*
*வான் அளக்கும் கொக்கு நாரைகள்*
*காகம் கரையும் கடற்கரைகள்*

*பார்க்கும் இடம் எங்கும்*
*வேம்பு பனை தென்னை - கவிதை*
*கோர்க்கச் சொன்னது அவை என்னை*

*தள்ளாடி நிலம் முழுதும் - கணக்கு*
*இல்லா மூலிகைச் செடிகள் குடிகொள்ள*
*கால்புதைக்கும் வெள்ளை மணல்*
*விதவிதமாய் கதை சொல்ல*
*சூரையும் பாரையும் சுருக்கு வலைக்குள்*
*சிக்காது தப்பிச்செல்ல*
*அது மீனவனுக்கு தோல்வி அல்ல*

*முற்றிய நெற்கதிர்கள்*
*முருங்கன் வயலெங்கும்*
*இரு போகம் சதிராடும் - நாம்*
*ஆற்றிய பணியை அணி செய்து*
*குயில்கள் நிதம் கவி பாடும்*

*மருதம் நெய்தல் பாலை முல்லை*
*குறிஞ்சி மட்டும் இங்கு இல்லை*
*தலைமன்னார் தீவின் எல்லை*

*மன்னார் என்றால் கருவாடு*
*மடுப்பக்கம் பெருங்காடு*
*பாலியாறே மெல்லப் பாய்ந்தோடு - நீ*
*பாலத்தை மேவியதால்*
*பட்டோம் பெரும்பாடு*

*இரு பெரும் சமயக் குரவர் -பதிகம்*
*அருளிய தலம்*

சிவனும் கௌரிஅம்மையும்
இணைந்த மணக்கோலம்
திருக்கேதீச்சரத்தின் கருவூலம்

மதுர மர அரியணையில் அமர்ந்து
புதுமைகள் புரியும் மேரி மாதாவின்
பாதங்களைத் தொழுவோம்
பாவங்களை களைந்த
ஜீவன்களாக எழுவோம்

கருங்கல்லில் கட்டப்பட்ட
இரும்புக் கோட்டை
அப்போதும் இப்போதும் படைவீடு
ஆயுதம் தரித்த வீரனே
அங்கிருந்து மெல்ல நடைபோடு

வெள்ளி அலை துள்ளி எழும்
பள்ளிமுனை - பெரிய
பெருக்கு மரத்திற்கு பெயர் பெற்றதனை
செருக்கோடு உரக்கச் சொல்வோம்
கல்விப் பேறுகளில் இமயத்தின்
சிகரத்தின் உயரத்திற்கும் செல்வோம்

விண்முட்டும் வெளிச்ச வீடு - மிகத்
தொன்மையானது என்ற
புகழோடு விளங்கியது
மிடுக்கான மேனி வண்ணம்
கலைந்த நிலைகாண கண்கள் கலங்கியது
"மினாரா" என்பதன் பொருள் கோபுரம்
இம் மண் கொண்ட இன்னோர் வரம்

இசை மீட்டும் அலைகள்
மென் மணல் குன்றுகளோடு
என்றும் காதல் கொள்ளும் எழிலை
நின்று காண வேண்டும் நேரில்
திசை காட்டும் கலங்கரை
விளக்கம் துறை ஊரில்

ஆழிக் கரை அமைந்த
செங்கல் மாளிகை - இழந்தது தன்
வாளிப்பான அழகை.
சரிந்து விழுந்து கிடக்கிறது - அதன்
சரிதம் அறிய தரிசித்தல் முறை
சாகரம் நித்தம் சத்தமிடும் முத்தரிப்புத் துறை.

அருவியாறு பாய்ந்து வரும்
கட்டுக்கரைக் குளத்திற்கு
கொட்டிய மழை நீரை அள்ளித்தரும்.

தூக்கம் தொலைத்த தேக்கம்
தொங்குபாலம் அதன் பக்கம் - அது
ஆங்கிலேயரின் ஆக்கம். - அங்கு
பொங்கி வரும் நீர் அலை
தங்கி மகிழ்வோம் ஓர் மாலை.

பகலவனின் ஒளிக்கதிர்கள் - நம்
விழிகளில் இருந்து பிறக்கட்டும்
பாங்குடனே திகழும் தாய் நிலம்
நிகழும் விழாவோடு
மென் மேலும் சிறக்கட்டும்.

சுறு சுறுப்புக்கு இலக்கணம் எறும்பு
சிறுவர் என்றால் இருக்கும் கொஞ்சம் குறும்பு
இதைக்கண்டு சினம் கொண்டு
கையில் எடுத்தல் ஆகாது பிரம்பு
இளகிய மனம் என்று மீறாதே வரம்பு.
செய்தல் ஆகாது சேட்டை
சீரும் சிறப்புமாய் வாழ
சிந்தையில் கொள்வாய் எந்தன் பாட்டை

ஐம்புலன்கள் அங்கும் இங்கும்
அலை பாய்வதை விடுத்து
மனத்தை ஒரு நிலைப்படுத்து
சிகரம் தொடு - அதற்காய்
சோம்பலையும் சோகத்தையும் துரத்திவிடு

முயற்சி எடு - கண்
அயர்ச்சியை தூர விடு
அல்லும் பகலும் பாடுபடு
நல்லோர் சொற்களை காதுவழி பாயவிடு

துக்கம் விடு
ஊக்கம் எடு
புதுமை காண்
ஒழுக்கம் பேண்
சுயத்தோடு இரு
சுயநலத்தை கைவிடு
கல்விகற்று விட்டோம் என்று
ஆடாதே சன்னதம்
ஒழுக்கமே கல்வியிலும் உன்னதம்

சிரம் தாழ்த்து - செயலாற்ற
சிரத்தை எடு - உனைத்
தேடிவரும் நல்வாழ்த்து
போட்டி தனைக் கொண்டாடு
பொறாமை என்பதைக் கொன்று
குழிக்குள் தள்ளி மண் போடு

என்னால் மட்டுமே செய்ய முடியும்
என்பது தலைக்கனம்
என்னாலும் செய்ய முடியும் என்பது
தன்னம்பிக்கையின் இலக்கணம்

கீழ்ப்படிவாய் இருந்திடு
தாழ்பணிந்து நடந்திடு
வேண்டும் நா அடக்கம்
பள்ளிப்பருவமே – நல்
வாழ்வின் தொடக்கம்
அளவேடு செலவு செய்
அடுத்த வேளைக்கும் பணம் சேர்த்து வை

கால நேரத்திற்குள் உன்
கடமைகளைச் செய்து முடி
அதிகாலை மறக்காமல் எழுந்து
பாடங்களைப் படி
சட்ட திட்டங்களை மதி – அதை
அசட்டை செய்தால்
வாழ்க்கை அதோ கதி

வாய்ப்புக்கள் வரும் என்று காத்திருக்காதே
மற்றோர் எமக்கு வாழ்வளிப்பர் என
பார்த்திருக்காதே
வாய்ப்புக்களை நீ உருவாக்கு – இது
பெரியோர் சொன்ன திருவாக்கு

மாதம் ஒருமுறை முடி திருத்து
அதை முறைப்படுத்து
பாடசாலைக்குத் தாமதமாய்
வருவதை நிறுத்து

காலுறை அதிலும் வேண்டும் அக்கறை
ஒவ்வொரு மாலையிலும் அதை
தோய்ப்பதுதான் முறை
கழுத்துப் பட்டி அதனை
அழுத்தம் திருத்தமாய் கட்டி
கல்லூரியின் தனித்துவத்தை அதில் காட்டி
செல்வாய் பாடசாலைக்கு காலை வேளைக்கு

மட்டம் தட்டிக் கொள்ளாதே மற்றவனை
மறந்தும் கை சேர்க்காதே மதி கெட்டவனை

இக்கரைக்கு அக்கரை பச்சை
இங்கே இருந்து அக்கறையாய்
படித்தாலே போதும்
உன்னை இமயத்தின் உச்சிக்கே
கொண்டு செல்லும் பரீட்சை

கல்வியும் ஒழுக்கமும் எம் இரு கண்கள்
தோல்வியும் முயற்சியும் வெற்றியின்
தூண்கள்

குரு இல்லா வித்தை பாழ்
அரு மருந்தாய் அவர் கூறும்
அறிவுரைதனை காது கொடுத்துக் கேள்

கற்றபடி ஒழுகு
கண்ணியத்தோடு
மற்றவரோடு பழகு
இல்வாழ்க்கைக்கு இதுவே அழகு
வானம் அது எட்டித் தொடும் தூரம் என்பதை
மனதில் கொண்டு வாழ்ந்து விடு
அவ்வப்போது நாணலைப் போல் வளைந்து
கொடு
உள்ளத்தில் உள்ள துன்பத்தை பகிர்ந்து
விடு

பிறப்பில் இல்லை உயர்வு
நிறத்தில் இல்லை தாழ்வு – நீ
செய்யும் அறத்தில் உண்டு நல்வாழ்வு

ஒழுக்கம் இல்லாக் கல்வியால்
உண்டாவதில்லை மேன்மை – இது
உலகம் மறந்துவிட்ட உண்மை
காத்து நில் நம் தமிழர் பண்பாடு
சேர்ந்துகொள் சீரியர் தோளோடு
போனால் திரும்பாதது
மானம், உயிர், காலம்
மானத்தோடு உயிர்வாழ
மகிழ்ச்சியாய் வாழ்க்கை நீள
மாணவனே நீ பூணவேண்டும்
நான் சொன்ன கோலம்

வண்ணம் மாறியது கரும்பலகை
அதனோடு வாழ்க்கை நடத்துபவன்
எண்ணம் மாற்றியமைக்கும் இப் பூவுலகை !

**"ஆசிரியரின் பணி அறப்பணி அதற்கு உன்னை அர்ப்பணி"**

# பாடசாலைக் கலாசாரத்தை கட்டியெழுப்புவதில் ஆசிரியரின் பங்கு

**திரு. சந்திரலிங்கம் றமேஸ் B.A, M. A. in. Tamil (Merit), PGDE**
***மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி.***

பாடசாலையானது ஒரு கூட்டுச் சமூகம் ஆகும். இதில் அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர், பகுதித்தலைவர், ஆசிரியர்கள், கல்விசாராப் பணியாளர்கள், மாணவர்கள் எனப் பலரும் அங்கம் வகிக்கின்றனர். எனவே பாடசாலையானது தனது நோக்கத்தினை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அங்கு இயங்குகின்ற ஆளணியினர் பரஸ்பர நம்பிக்கையுணர்வும், செயற்பாடுகளில் பங்காளிகளாக செயற்படும் நிலையும், ஒவ்வொருவரும் இது எமது பாடசாலை என நிபந்தனை அற்ற முறையில் நேசிக்கும் மனப்பாங்கும் கொண்டிருக்க வேண்டும்.

இதில் ஆசிரியர்களின் வகிபாகத்தை நோக்கும் போது பாடசாலை ஒன்றின் அனைத்துச் செயற்பாடுகளும் எல்லோரையும் ஒன்றிணைக்கும் செயற்பாடுகள் என்ற நம்பிக்கை ஆசிரியர்களிடையே ஏற்படல் வேண்டும். நமது ஒவ்வொருவரதும் பங்களிப்பும் உச்சமட்டத்தில் காணப்படும் பட்சத்தில் மட்டுமே பயன்தரும் பாடசாலையை உருவாக்க முடியும். இதன் மூலம் நம்பிக்கை வைத்து செயற்படும் குழு மன உணர்வு தோன்ற வேண்டும். குறிப்பாக ஒருவரின் செயற்பாடுகளில் ஏனையோர் தாமாகவே முன்வந்து உதவும் நிலையும், வெற்றிகளை எவ்வாறு அடையலாம் என்ற சாதுரியம் மிக்க வழிகளைத் தேடுதலும், அதனை நடைமுறைப் படுத்தலும், வெற்றிகளை குழுவாக பகிர்ந்து கொள்ளும் நிலையும், பின்னடைவுக்கான காரணிகளை ஒருமித்து தேடி அறிந்து அவற்றை மாற்றி வெற்றிக்குரிய நிலையில் பாடசாலை நிலைத்திருக்கும் மனப் பாங்கைக் கொண்டிருக்க வேண்டும்.

மேலும் ஆசிரியர்கள் ஆகிய நாம் பாடசாலைக் கலாசாரத்தை கட்டியெழுப்ப பாடசாலையின் பாரம் பரியத்தையும் அதன் சட்டதிட்டங் களையும் தெளிவான இலட்சியத் தையும் முழுமையாக அறிந்து கொள்வதோடு அதனை நிபந்தனை அற்ற முறையில் மதித்து அதற்குக் கட்டுப் பட்டவர்களாக நடக்க வேண்டும்.

செழுமையான கலாசாரத்தை கட்டியெழுப்ப ஆசிரியர்கள் பொது இலக்குகளை தீர்மானித்து அதனை அடைவதற்காக எமது எல்லாச் செயற்பாடுகளையும் திட்டமிடல் வேண்டும். குறிப்பாக தொலைநோக்கும்

பணி இலக்கும் அமைக்கப்படல் வேண்டும். ஆசிரியர்களின் ஒவ்வொரு செயற்பாட்டிலும், செயற்பாட்டுக் கூறுகளிலும் பாடசாலை இலட்சியத் தைப் பின்னணியாகக் கொண்டுள்ள மன நிலை ஒவ்வொருவருக்கும் ஏற்படல் வேண்டும்.

பாடசாலையின் அனைத்துச் செயற்பாடுகளிலும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு முன்மாதிரியாகவும், மாணவருடன் இணைந்து செயற்படும் நிலையும், நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப் படுத்துவதையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

அதுமட்டுமல்லாது ஆசிரியர் களுக்கிடையிலும், மாணவர்களுக் கிடையிலும் ஆசிரிய மாணவர்களுக் கிடையிலும் ஏற்படுத்தப்படும் இடை வினைத் தொடர்பானது தரமும், விருத்திசார் நோக்குக்கொண்டதாகவும், நேர்த்தி யான விழுமியத்தையுடைய தாகவும் அவற்றை தொடர்ச்சியாகக் கடைப்பிடிக்கும் சூழ்நிலையையும் ஏற்படுத்தல் வேண்டும்.

மேலும் ஆசிரியர்கள் அறிவு பூர்வமான நம்பிக்கைகள், அறிவுத் தேடல் உடையவர்களாகவும் தமக்கு தெரிந்தவற்றை சிறப்பாக வழங்கவும், தெரியாததை எங்கே பெறலாம் எனத் தேடுவதும், தொடர்வாசிப்பும், இற்றைப் படுத்தும் தன்மையும், மிகவிரைவுத் தன்மை, சட்டென்று தீர்மானம் எடுத்தல், தலைமைத்துவத்திற்கு கட்டுப்படல், வெளிப்படு தன்மையைக் கொண்டி ருத்தல், உயர்வான தரமான எதிர் பார்ப்புடன் இயங்குதலானது பாட சாலை மாணவர்கள் வாழ்க்கை முழுவதும் கற்பவர்களாக வளர்வதற்கு ஆசிரியர்கள் பங்காளிகளாக தம்மை அர்ப்பணித்தல் வேண்டும்.

எனவே ஓர் ஆசிரியர் பாட சாலையின் மாணவர் உறவுகள், ஆசிரியர்களின் ஒத்தாசை, பௌதீக வளகவின்நிலை, முரண்பாட்டுத் தீர்வு கள், தீர்மானமெடுத்தலில் பங்களிப்பு, சிறப்பான கலைத்திட்ட அமுலாக்கம், ஆலோசனை சேவை, மாற்று ஏற்பாடு கள், அழுத்தங்களை குறைத்தல் என்பற்றில் பங்களிப்பு செய்வது மிக அவசியமானதாகும்.

“பாடசாலை ஓர் பண்பட்ட நாற்று
மேடை படித்த பண்பற்றவர்களை
உருவாக்காது பண்புள்ள
நற்பிரைஜைகளை உருவாக்க
வேண்டும்”

**எந்தப்பிள்ளைக்கும் எந்த வளர்ச்சிப்படியிலும் எப்பாடத்தையும் அறிவுக்கு உண்மையான வகையில் திடமாகக் கற்பிக்கலாம்.**

**- ஜெறோம் சேமோ புறூனர் -**

# மன்னார் வலயப் பாடசாலைகளின் உயர்தர கணித, விஞ்ஞான பிரிவின் பரீட்சைப் பெறுபேறுகளின் சமகால நோக்குகள் பற்றிய ஓர் ஆய்வு

**திருமதி. C. F. ஓம்பிரகாஷ்**
***ஆசிரியர் - மன் / புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி.***

எமது நாட்டில் கல்வி அடைவுகளை மதிப்பிடும் ஒரு பிரதான சாதனமாக பரீட்சை மாத்திரமே பலராலும் பயன்படுத்தப்படுகிறது. எமது நாட்டில் இலவசக் கல்வியின் விரிவு காரணமாக பாடசாலையில் பங்கேற்கும் மாணவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளது. எழுத்தறிவு வீதம் எமது நாட்டில் 90%த்தை தாண்டி விட்டது. இதனால் நிர்வாகப் பரவலாக்கல், பாடசாலைகளின் எண்ணிக்கை, ஆய்வுகூட வசதிகள், ஆய்வுகூட உபகரணங்கள், கல்விக்கான செலவீனம் போன்ற அளவறி பண்புகள் உச்ச நிலையை அடைந்துள்ளன.

- பாடசாலைகளின் எண்ணிக்கை - 10527
- ஆசிரியர்களின் எண்ணிக்கை - 227287
- மாணவர் : ஆசிரியர் விகிதம் - 18 : 1

இத்தகைய அளவறி அதிகரிப்பிற்கேற்ப பண்பு ரீதியான அதிகரிப்பு எவ்வாறு காணப்படுகிறது என்பதை ஆராயவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

மாணவர்கள் பாடசாலைகளில் 13 வருட காலப்பகுதியைக் கழிக்கின்றனர். இக் காலப்பகுதியில் இவர்கள் மிக முக்கியமான மூன்று தேசிய பரீட்சைகளை எதிர்நோக்குகின்றனர். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த (சா/த) பரீட்சை, க.பொ.த (உ/த) பரீட்சை என்பனவாகும்.

| பிரிவு | தரம் |
| --- | --- |
| ஆரம்பப் பிரிவு | 1-5 |
| கனிஷ்ட இடைநிலைப் பிரிவு | 6-9 |
| க.பொ.த (சா/த) | 10,11 |
| க.பொ.த (உ/த) | 12,13 |

1964 ஆம் ஆண்டு முதல் க.பொ.த (உ/த) பரீட்சை எமது நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. ஆரம்ப காலங்களில் இது ஒரு சான்றிதழ் வழங்கும் பரீட்சையாக இருந்த போதிலும் பின்னர் பல்கலைக் கழகங்களுக்கு தகுதியானோரைத் தெரிவு செய்யும் பரீட்சையாகவும், கல்விக் கல்லூரிகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் அடிப்படைப் பரீட்சையாகவும் இது மாறியுள்ளது. இவற்றிற்கு மேலதிகமாக

அண்மைக் காலங்களில் க.பொ.த (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி பெறல் பல்வேறு உள்நாட்டு, வெளிநாட்டுப் பரீட்சைகளில் தோற்றுவதற்கு அடிப்படைத் தகைமையாகவும், வேலை வாய்ப்புக்களைப் பெறுவதற்கான தகைமையாகவும், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்கு தகைமையைப் பெற்றுக்கொடுப்பதற்கும் இன்றியமையாததாக அமைகிறது. க.பொ.த (சா/த) பரீட்சைகளில் சித்தியடைந்த பெரும்பாலானோர் க.பொ.த (உ/த) பரீட்சையில் யாதாயினும் ஒரு பாட நெறியை பின்பற்ற கடுமையாக உழைக்கின்றனர்.

சம காலத்தில் எமது மன்னார் வலயத்தை எடுத்து நோக்கும் போது உயர்தர விஞ்ஞான, கணித பிரிவுகளில் 2014ம் ஆண்டு கணித பிரிவில் 30.91% வீதத்தினரும் விஞ்ஞானப் பிரிவில் 47.31% வீதத்தினரும், 2015ம் ஆண்டு கணிதப் பிரிவில் 46.15% வீதத்தினரும், விஞ்ஞானப் பிரிவில் 42.59% பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ளமை பாடசாலைத் தரவுகளில் இருந்து தெளிவாகியுள்ளது. பாடசாலைக் காலத்தில் 13 வருடங்களை பூர்த்தி செய்யும் மாணவர்கள் தங்களது உயர்தர வகுப்பில் இரண்டு வருடத்தை பூர்த்தி செய்கின்றனர்.

பாடசாலைக் கல்விக்கு மேலதிகமாக பிரத்தியேக கல்விக்கு அதிக பணம் செலவு செய்கின்றனர். பாடசாலையிலும் கணிப்பீடு (SBA) செயற்றிட்டம் (Project) செய்முறை (Practical) என அதிக அழுத்தம் கொடுக்கப்படுகின்றனர். வீட்டில் பெற்றோரும் பெரும் எதிர்பார்ப்புக்களுடன் மாணவர்களின் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றி வைக்கின்றனர். ஆயினும் க.பொ.த (உ/த) பரீட்சை முடிவுகள்பெரும்பாலானோரை ஏமாற்றி விடுகிறது.

தரம் 1ற்கு அனுமதி பெறத் தகைமையுடைய மாணவர்களில் 100 பேரைக் கருத்தில் கொள்ளும் போது இவர்களில் 2 பேர் மாத்திரமே பல்கலைக்கழக அனுமதி பெறுகின்றனர். எனவே பாடசாலைகளில் எல்லா மட்டங்களிலும் இடைவிலகல்கள் மிகவும் அதிகமாகவுள்ளதைக் காணக் கூடியதாக இருக்கிறது. மன்னார் வலயத்தில் அதிகளவு மாணவர் தொகையினரை அடக்கும் மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி, மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி, மன்/ சித்திவினாயகர் இந்துக் கல்லூரி ஆகியவற்றை எடுத்து நோக்கின் இப் பாடசாலைகளில் தரம் 1ல் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது விஞ்ஞான, கணித் பிரிவுகளுக்கு வந்து சேரும் மாணவர்களின் தொகை குறைந்து காணப்படுவது மட்டுமன்று க.பொ.த (உ/த) பரீட்சையில் 3 பாடங்களிலும் சித்தி பெறும் மாணவர்கள் 50%த்திலும் குறைவாகவே காணப்படுகின்றனர்.

காலத்தின் தேவையறிந்து கல்விச் சீர்திருத்தங்கள் இடம் பெறுகின்ற போதிலும் விஞ்ஞான, கணிதப் பிரிவு கடினமான துறையாக ஏன் இன்னும் பெயர் பெற வேண்டும்? க.பொ.த (சா/த) பரீட்சைகளில் திறமைச் சித்தியுடன் க.பொ.த (உ/த)த்தில் நுழைகின்ற மாணவர்கள் ஏன் தமது உயர்தரப் பெறுபேற்றை திறமையாகப் பெறமுடியாது தள்ளப் படுகின்றனர்?

இவ்வினாக்களுக்கு விடைகாண வேண்டுமெனின் விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளராக, விஞ்ஞான ஆசிரிய ஆலோசகராக, உயர்தர விஞ்ஞான ஆசிரியர்களாக இருக்கின்ற ஒவ்வொருவரும் தமது நிறைவான பணியை ஒவ்வொரு விஞ்ஞான மாணவருக்கும் வழங்குவது இன்றியமையாததாகும்.

- மாணவர்களின் பிரச்சினைகளை இனங்கண்டு அவர்களை சரியான பாதையில் இட்டுச் செல்வது
- ஆலோசனை வழங்குவது
- வகுப்பறைகளில் முழுமையான கற்பித்தல் பணிகளில் ஈடுபடுவது
- பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள், செயன்முறைப் பட்டறைகள் என்பவற்றை ஒழுங்குபடுத்தல் என்பன மிகவும் அவசியமானதாகும்.
- பரீட்சை வினாத்தாள்களை தயாரித்து பரீட்சைகளை நடாத்துதல். அவற்றைத் திருத்தும் பணிகளில் ஈடுபடல்
- வினாக்களில் ஏற்படும் இடர்களைத் தீர்த்தல்
- நேர முகாமைத்துவத்தை பழக்குதல்
- உபகரணங்களைக் கையாள மாணவருக்கு சந்தர்ப்பம் வழங்குதல்
- மேலதிக வகுப்புக்களை ஒழுங்கு செய்தல்

என்பவற்றை ஆசிரியர்கள் திட்டமிட்டு நடைமுறைப் படுத்துவது அவர்களின் முக்கியமான பணியாகும்.

உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல் இணைந்த கணிதம் ஆகிய பாடங்களை கற்பிக்கின்ற ஆசிரியர்களின் சுமூகமான உறவுகள், கலந்துரையாடல்கள், குழுச்செயற்பாடுகள், கருத்துப் பரிமாற்றங்கள் அதாவது தரவட்டம், ஒரு மாணவனை விஞ்ஞானத் துறையில் முழுமனிதனாக மாற்றும் என்பதில் ஐயமில்லை.

இருப்பினும் மன்னார் வலய விஞ்ஞான, கணித உயர்தர மாணவர்கள் எதிர் நோக்கும் சவால்கள் என்ற அடிப்படையில் இங்கு 12 பாடசாலைகளில் கணித, விஞ்ஞானப் பிரிவுகள் காணப்படுகின்ற போதிலும் ஆசிரியர் பற்றாக்குறை இன்னும் தீராத நோயாகக் காணப்படுவது கவலைக்குரிய விடயமாகும்.

மன்னார்க் கல்வி வலயம் உயர்தரத்திற்கு விஷேடமாக கணித, விஞ்ஞானப் பிரிவுகளுக்கு வெளிமாவட்ட ஆசிரியர்களில் தங்கி நிற்கும் நிலை இன்றும் தொடர் கதையாகவே உள்ளது. எமது மாவட்டத்திலிருந்து ஒவ்வொரு வருடமும் விஞ்ஞானமானி கற்கை நெறிக்காக மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு செல்கின்ற போதிலும் பட்டதாரியாக வெளியேறுகின்ற போது ஆசிரியத் தொழிலை விரும்புவோரின் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளது. வெளிமாவட்ட ஆசிரியர்களின் 5 வருட கால எல்லை மாணவர்களின் கல்வியில் இடைவிலகல்கள் ஏற்படக் காரணமாக உள்ளது.

கல்வித் திட்டப்படி எதிர் காலத்தில் கலை வர்த்தகப் பிரிவுகளைக் குறைப்பதற்கான நடவடிக்கையாகத் தற்போது "தொழிநுட்பப்பாடம்" ஆரம்பிக் கப்பட்டுள்ளது. புதிய பாடம் என்பதாலும் விளக்கமின்மை மகிந்தோதய ஆய்வுகூடங்களின் கவர்ச்சித் தன்மை போன்ற காரணங்களினால் க.பொ.த (சா/த) கணித, விஞ்ஞான

பாடங்களில் திறமைச் சித்தி பெற்ற மாணவர்களும் தொழில் நுட்பப் பாடத்தை தேர்ந்தெடுக்க வாய்ப் பளிக்கப்படுகிறது.

இதனை விட புதிய பாடப் பரப்பாகிய ICT பாடம் எல்லாத் துறையினருக்கும் ஒரு பொதுவான பாடம் என்பதைக் கருதாது கணித, விஞ்ஞான பிரிவு மாணவர்கள் ICT யை ஒரு பாடமாகத் தெரிவு செய்வது விஞ்ஞான, கணிதத் துறைக்கு பெரும் பாதிப்பை உண்டுபண்ணுகிறது.

- உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல் ஆய்வுகூடங்களின் வளப்பற்றாக்குறை காணப்படுகிறது. இந்த வகையில் பாடசாலைகள் இடர்களை எதிர் நோக்குகின்றன.
- மாணவர் மத்தியிலும், பெற்றோர் மத்தியிலும் பாடசாலை மீதுள்ள அவநம்பிக்கை.
- பிரத்தியேக வகுப்புகளுக்கு முதலிடம் கொடுத்தல்
- பாடசாலை நேரங்களில் பிரத்தியேக வகுப்புகளுக்கு செல்லுதல்
- பாடசாலைகளில் நடைபெறும் பயிற்சிப் பரீட்சைகளுக்கு மாணவர்கள் முகம் கொடுக்காமை
- இதனால் நேரமுகாமைத்து வத்தை பரீட்சையில் சரியாகப் பேணமுடியாமை
- பாடசாலை மட்டக் கணிப்பீடு (SBA), செயற்றிட்டம் (Project), ஆங்கிலப் பரீட்சை, பொது சாதாரணப் பரீட்சை இவற்றை உதாசீனம் செய்தல்.
- பாடசாலை சட்டதிட்டங்களை மாணவர்கள் மதிக்கத் தவறுதல்.
- பரீட்சைக்குத் தோற்றும் மாண வர்கள் தங்களுக்கென விதிக்கப்பட்ட திகதிக்கு முன்பே பாடசாலைக்கு வருவதை நிறுத்துதல்.
- இதனால் ஆசிரியர்கள் தங்கள் பணிகளை சரியான முறையில் செய்யமுடியாதுள்ளது.
- ஆசிரியர்கள் மாணவர்களிடத் தில் பற்றற்றவர்களாக இருத்தல்
- முறையாக பாடத்தைத் திட்ட மிடாமை
- முழுமையாக பாடத்திட்டத்தை கற்பித்து முடிக்காமை
- செயன்முறைச் செயற்பாடு களில் கவனமின்மை
- ஆய்வுகூடத்தை சரியான முறையில் பயன்படுத்தாமை
- ஆசிரியர்கள் விடுமுறைகள் அதிகமாக எடுத்தல்
- பாடசாலைகளில் ஆசிரியர் களுக்கான வேலைப்பளு
- ஆசிரியருக்கும் மாணவர் களுக்குமிடையிலான முரண்பாடுகள்
- ஆசிரியரில் மாணவர்களுக்கு விருப்பமின்மை

இவையும் மாணவர்களுக்கு சவாலாக அமைகின்றன. இவ்வாறான சவால்களுக்கு முகம் கொடுக்கின்ற போதிலும் மன்னார் வலய கடந்த 5 வருடகால தேசிய பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் 2011ம் ஆண்டு மன்/ சித்திவினாயகர் இந்துக் கல்லூரியின் விஞ்ஞானப் பிரிவில் ஒரு மாணவனும், கணித பிரிவில் இரண்டு மாணவர்களும், 2015ம் ஆண்டு மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி யில் விஞ்ஞானப் பிரிவில் ஒரு மாணவியும் அதி சிறந்த பெறுபேற்றைப் பெற்று (Merit pass) பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். ●

# வட மாகாணத்தில் பெருகிவரும் வனவிலங்கு சரணாலயங்களும், தேசிய பூங்காக்களும்

திரு.டேவிட் B.A (HONS) PGDE Dip.in.S.Mg. MED SLPS
சுற்றாடல் முன்னோடி ஆணையாளர் மன்னார் கல்வி வலயம்

இன்று உலக நாடுகள் எதிர் நோக்கும் பாரிய சவாலாகக் கருதப்படுவது என்னவெனில் இறைவன் படைத்த இயற்கை மீதான மனிதர்களின் கண்மூடித்தனமான ஆதிக்கமும், ஆக்கிரமிப்பும், அழித்தல் முயற்சிகளுமாகும். அதிகரித்து விட்ட மக்கள் தொகைப் பெருக்கத்துக்கு ஏற்ப மனித தேவைகளும் பல்கிப்பெருகி வருகின்ற நிலையில் இயற்கை வளங்களை பல்வேறு தேவைகளுக்கான நுகர்கின்ற வேகமாக செயற்பாடானது ,இயற்கைத் தாயின் அல்லது சுற்றுச் சூழலின் சமநிலையை தலை கீழ் விகிதமாகி புரட்டியமோடக் கூடிய அபாய நிலையை தோற்றுவித்துள்ளது. இதனால், அண்மைக் காலமாக உலக நாடுகளில் இயற்கையின் சீற்றமானது வெள்ளைப் பெருக்கு, சூறாவளி வெப்பம், வரட்சி, மண்சரிவு, புவிநடுக்கம், பூகம்பம் சுனாமி போன்ற வடிவங்களில் சடுதியான நிகழ்ச்சி நிரல்கள் போன்று அவ்வப்பொழுது வெளிவீசத் தொடங்கியுள்ள நிகழ்வுகள் தொடர் கதையாகிவிட்டன. இந்த இயற்கை பேரழிவுகளின் எதிரொலியினால் உலக நாடுகள் தோறும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்களை உருவாக்குமளவுக்கு நிலமை மோசமடைந்து விட்டது.

இயற்கையின் பல பரிமாணங்களின் சீற்றங்களினால் விழிப்படைந்துள்ள உலக நாடுகள் இன்று ஒன்றுபட்ட வகையில் சூழலையும், இங்கு வாழுகின்ற உயிரினங்களையும் பாதுகாக்கும் நோக்கில் பல மகாநாடுகள் ஊடாக சூழல் பாதுகாப்பு சட்டங்களை உருவாக்கி, பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்றன. பல சூழல் சார்பான விசேட தினங்களை முன்மொழிந்து மக்கள் மத்தியில் சூழலின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றன.

இயற்கை அழகும், எண்ணற்ற வளங்களும் நிறைந்த நமது இலங்கை நாட்டில் இயற்கை சூழலை நேசிக்கும் எண்ணக்கரு 2000 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வருகின்றது. பிரித்தானிய ஆட்சியில் பிற்பட்ட காலத்தில் இலங்கையின் சுற்று சூழற்பாதுகாப்பு, வன ஜீவராசிகள் பாதுகாப்பு போன்ற விடயங்களில் சட்ட பூர்வமான பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

எனினும் இயற்கை மீதான மனித

நடவடிக்கை என்றுமில்லாத வகையில் அண்மைக்காலமாக அதிகரித்து வருவ தால் சூழலையும் இங்கு வாழும் உயிரினங்களையும் பாதுகாக்கும் நோக்கில் தேசிய மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் பல ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் அமுல் படுத்தப்பட்டு வருகின்றன

அத்துடன் இன்று சூழற்பாது காப்பு சார் மேலாண்மையானது, மேதகு ஜனாதிபதி அவர்களின் நேரடிக் கண் காணிப்பின் கீழ் நெறிப்படுத்தப் படுவதால் எதிர்காலத்தில் இலங்கை யின் சுற்றாடல் பாதுகாப்பானது நேர்க்கணியமான விளைவுகளை தோற்றுவிக்கும் என எதிர்வு கூற முடியும்.

இலங்கையின் வனக்கட்டமைப் பையும், இங்கு வாழும் ஜீவராசி களையும் பாதுகாக்கும் நோக்கில் பிரித்தானிய ஆட்சி காலத்தில் 1940ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 01ம் திகதி வன விலங்கு திணைக்களம் (Department of Wild Life Conservation) ஆரம்பிக்கப் பட்டது. இது தொடர்பான சட்டங்களும் விதிமுறைகளும் அமுல்படுத்தப்பட்டது. இயற்கைவன கட்டமைப்புக்குள் இசைந்து வாழும் ஜீவராசிகளின் பாதுகாப்புக் கருதி சில சரணாலயங்கள் உருவாக்கப் பட்டன இந்த வகையில் முதன்மையான வனஜீவராசிகள் சரணாலயங்களாக – வில்பத்து சரணாலயமும், யால சரணாலயமும் ஸ்தாபிக்கப்பட்டன. பின்னைய ஆண்டுகளின் நாடு தழுவிய ரீதியில் மேலும் பல சரணாலயங்கள் உருவாக்கப்பட்டன.

வட மாகாணத்தை பொறுத்த வரை, 30 ஆண்டுகளாக யுத்தம் நீடித்ததால் வன ஜீவராசிகள் தொடர்பான சிந்தனையும் செயற் பாடுகளும் கிடப்பில் போடப்பட்டி ருந்தன. வடக்கின் கணிச மான பிரதேசங்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த போராளிகள் வனபிரதேசங்களையும் ஜீவராசி களையும் நன்கு பாதுகாத்தார்கள் என்ற உண்மையை, காய்தல் உவத்தலுக்கு அப்பால் அனைத்து தரப்பினரும் ஒத்துக்கொண்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

வடக்கு மாகாணத்தில் யுத்தத்தி க்கு முன்னரான காலப்பகுதியில் வெவ்வேறு காலகட்டங்களில் இனங் காணப் பட்ட சில பிரதேசங்கள் வன விலங்கு பாதுகாப்புத் திணைக் களத்தால் சரணலாயங்களாக தொடர் ச்சியாக பிரகடனப்படுத்தப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது.

**அவற்றின் விபரம் பின்வருமாறு...**

- சுண்டிக்குளம் பறவைகள் சரணாலயம் – 1938ம் ஆண்டு
- கொக்கிளாய் பறவைகள் சரணாலயம் – 1951ம் ஆண்டு
- கட்டுரைக்குளம் வனவிலங்கு சரணாலயம் – 1954ம் ஆண்டு
- வவுனிக்குளம் வனவிலங்கு சரணாலயம் – 1963ம் ஆண்டு
- மடு வனவிலங்கு சரணாலயம் – 1968ம் ஆண்டு
- பாலைதீவு பறவைகள் சரணாலயம் – 1973ம் ஆண்டு

மேற்படி சரணாலயங்கள் 30 வருடங்களாக நடந்த யுத்த நெருக்கடிக் குள் சிக்கியிருந்தாலும் பெருமளவு சேத அபாயங்களை எதிர்கொள்ளவில்லை – என்பது ஆய்வாளர்களின் கணிப்பாகும்.

மேலும் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர், வடக்கு மாகாணத்தில் உயிர்ப் பல்வகைமை பாதுகாப்பின் அவசியம் கருதி சரணாலயங்களையும் தேசிய பூங்காக்களையும் விஸ்தரிப்பதில் வன விலங்கு பாதுகாப்புத்திணைக்களம் தனது கவனத்தை குவியப்படுத்தி யுள்ளது.

வடமாகாணத்தில் உள்ள மாவட்டங்கள் தோறும் பல்வகையான தாவர, விலங்கினங்கள் தனித்து வகையான பரந்து காணப்படுகின்றன. பிற நாடுகளிலிருந்து மாரி காலங்களில் புலம்பெயர்து வருகின்ற பறவைகள் கூடுதலாக வடமாகாண நீர்நிலைகள், காடுகளிலையிலேயே தமது சிறகுகளை ஒடுக்கிக் கொள்கின்றன. மேலும், மிக நீண்ட கடற்கரையை கொண்ட வடக்கு மாகாணமானது கரையோர கண்டல் தாவரங்களையும், மணல்திட்டுக் களையும், பரந்த ஈரநில பிரதேசங் களையும் கொண்ட சூழற்தொகுதி யையும் சிறப்பாக கொண்டுள்ளது.

இவ்வாறு பல தனித்துவமான சூழல்தொகுதியை கொண்ட வடக்கு மாகாணத்தில் சமகாலத்தில் வன விலங்கு சரணாலயங்கள், தேசிய பூங்காக்கள் என்பவற்றிற்கான இனங் காணலில் உள்ளீர்க்கப்பட்டு அதற் காகப் பிரேரிக்கப்பட்டுள்ளது.

போர் அபாயத்தில் இருந்து தப்பிப்பிழைத்த வனச் சூழலையும், உயிரினங்களையும் சட்டரீதியாக பாது காக்க வேண்டிய அவசிய தேவை எழுந்துள்ளதாக அரசாங்கத்தினால் கருத்து முன்வைக்கப்படுகின்றது.

மேலும் வடமாகாணச் சுற்று சூழல், வரலாற்று மையங்களுக்கு இசைவாக சுற்றுலாத்துறையையும் இம் மாகாணத்தில் அபிவிருத்தி செய்வதன் மூலமாக கவிநிலையான சூழல்கட்ட மைப்பை உறுதியாக பேணமுடியும் என்ற எண்ணக்கருவும் வலுவாக உள்ளது.

இந்த அடிப்படையில் வடக்கு மாகாண சரணாலயங்களை அவற்றின் இயல்புகளை மையமாக கொண்டு, வனவிலங்கு பாதுகாப்புத்திணைக்களம் மூன்று வகையாக அடையாளப் படுத்தியுள்ளது. இந்த அடையாளப் படுத்தலானது அகில இலங்கைக்கும் பொருத்தமானதாகும் அந்த மூன்று வகையீடுகளும் பின்வருமாறு:

- சரணாலயங்கள்
- தேசிய வன பூங்காக்கள்
- பாதுனகாப்பான வன ஒதுக்கீடுகள்

ஆகியனவாகும். இந்த அடிப் படையில் வடக்கில் மூன்று சரணா லயங்கள், தேசிய பூங்காக்களாக மாற்றம் பெறவுள்ளன

- சுண்டிக்குளம்(Chundi kulam)
- மடுவனம் (Madhu)
- பாலை தீவு (Palai theevu)

**தேசிய பூங்காக்கள் அந்தஸ்தை பெறவிருக்கும் இராமர் சேது அணையும், நெடுந்தீவும்**

**இராமர் சேது அணை (Adams Bridge)**

தலைமன்னாருக்கும், இராமேஸ் வரத்துக்கும் இடையேதொடர்ச்சியான

எட்டு மணல் தீவுகளை கொண்ட தீடைதொடர் முற்காலத்தில் இருந்து இராமர் சேது அணையென அழைக்கப் படுகின்றது. 30 கிலோ மீற்றர் நீளமான இந்த நீள் மணற்தீடையானது "ஆதாமின் பாலம்" என அழைக்கப் படுகின்றது. இலங்கையின் முதலாவது "எல்லை கடந்த தேசிய பூங்கா" வாக கருதப்படும் இராமர் சேது அணையை அண்டிய கடற்பரப்பில் கடலாமைகள், டொல்பின், சுறா, மற்றும் பலவகையாக மீன் இனங்கள் செறிவாக வாழ்கின்றன. தேசிய பூங்காவாக அங்கீகரிக்கப் பட்டுள்ள இராமர் சேது அணை இன்று சுற்றுலா மையமாக மாறி வருகின்றது .

**நெடுந்தீவு :**
***(Delft Island)***

யாழ்ப்பாண குடாநாட்டை அண்டியுள்ள எட்டு தீவுகளில், நெடுந்தீவு பல வரலாற்று வினோதங்கள் நிறைந்த தீவாக விளங்குகின்றது. இங்கு ஐரோப்பிய காலத்தின் குதிரைகள் பாரிய கட்டிடங்கள், பழம்பெரும் மீகாமன் கோட்டை, போன்றவற்றுடன் அராபிய வணிகர் காலத்துக்குரிய பெருக்கு மரமும் காணப்படுகின்றது. வித்தியாச மான கல்வேலிக் கலாசாரத்தை கொண்ட இத்தீவின் முக்கியத்துவம் கருதி தேசிய பூங்காவாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தினமும் இங்கே நூற்றுக்கணக்கான சுற்றுலாப்பயணிகள் செல்கின்றார்கள்.

போர் முடிவுக்கு வருமுன்னர் இலங்கையின் வடமேற்கு வலயமான மன்னார் மாவட்டத்தின் 2008ம் ஆண்டு நிறுவப்பட்ட ஒரு பறவைகள் சரணாலயமாக வங்காலை சரணாலயம் விளங்குகின்றது. வடக்கு மாகாண ஆள்புல எல்லைக்குள் சரணாலயங்களின் பரவல் மன்னார் மாவட்டத்திலேயே கூடுதலாக உள்ளது. மன்னார் மாவட்டத்தின் தெற்கு எல்லையை வரையறுக்கும் வில்பத்து வன தேசிய பூங்கா இன்று புத்தள மாவட்டத்துக்குள் அடங்கியிருந்தாலும், வன்னியர் ஆட்சிகாலத்தில் மன்னாரின் தென் வலய எல்லை இன்றிருப்பதை விட பல கிலோ மீற்றர் தெற்கு நோக்கி விரிவடைந்து காணப்பட்டது. இன்று கட்டுரைக்குளம், வங்காலை, இராமர் அணை, இறுதியாக விடத்தல் தீவின் வனச்சூழல் பிரதேசம் ஆகியன சரணாலயங்களக வரையறுக்கப் பட்டுள்ளன.

**வங்காலை சரணாலயம்:**
***(Vankalai Sanctuary)***

இலங்கையில் யுத்தம் முடிவுக்கு வருவதற்கு ஓராண்டு முன்பதாக மன்னார் மாவட்டத்தில் ஸ்தாபிக்கப் பட்ட வங்காலை சரணாலயம் முற்று முழுவதுமாக ஈர நில வலயமொன்றை வரையறுத்து எல்லையிடப்பட்டதாகும். எனினும் இச்சரணாலயம் தொடர்பான சர்வதேச அந்தஸ்துடைய அறிக்கை யொன்று 20.07.2010 அன்று பிரகடன படுத்தப்பட்டது.

இதன் பிரகாரம் வங்காலை சரணாலயத்தின் பரப்பளவு 4839 கெக்ரெயர் ஆகும் "ரம்சார்" (Ramsaar) ஈர நிலவலயமாகப் பிரகடனம் செய்யப்பட்ட இச் சரணாலயம் ஈரநிலம் தொடர்பான சர்வதேச உடன் படிக்கையின் கீழ் சர்வதேச முக்கியத் துவம் பெற்ற 1910 வது ஈரநிலமாக பெயரிடப்பட்டுள்ளது.

வங்காலை, புளியன் தீவு, சவுத்பார், பள்ளிமுனை, திருக்கேதீஸ்

வரம், சிறுநாகர்குளம் சந்தி ஆகிய மையங்களை வரையறுக்கும் இந்த பரந்த உவர்நில பகுதிக்கு மாரிகாலத்தில் சைபீரிய சமவெளிப் பறவைகள் வருகின்றன. இந்த பரந்த உவர்நில சமவெளி அமைந்துள்ள சரணாலயம் மக்களின் பார்வைக்கு கவர்ச்சியற்ற தாகவே தென்படுகின்றது. மன்னார் தீவைநோக்கி இரு தார் வீதிகளும், புகையிரத வீதியும் இச் சரணாலயத்தை ஊடறுக்கின்றன மேலும் இச்சரணா லயத்தின் தெற்கு எல்லை வங்காலை கிராமத்துக்கு நெருக்கமாக உள்ளதால் இக்கிராம மக்களின் தெற்கு நோக்கிய குடியேற்ற முயற்சிக்கான கனவு - வெறும் கனவாகவே போய்விட்டதான அங்கலாய்ப்பில் யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி சூசைஆனந்தன் இவர்கள் பத்திரிகை அறிக்கை வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. இன்று பறவையியல் ஆய்வு ஆய்வுக்களமாக இச்சரணாலயம் விளங்குகின்றது.

**கட்டுக்கரைகுளம் வன ஜீவராசிகள் சரணாலயம்:**

***(Wild Life sanctuary of kattu karai)***

1954ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் இலங்கை அரசின் வனவிலங்குப் பாதுகாப்பு திணைக்களத்தால் கட்டுக் கரைக்குளம் "வனவிலங்குகள், சரணா லயமாக" பிரகடனப்படுத்தப்பட்டது.

வடக்கில் யுத்த நிறுத்தம் நிலவிய காலத்தில் மன்னார் பெருநிலபரப்பில் யானைகள் தொடர் பான ஆய்வினை மேற்கொண்ட தென்னிலங்கை பல்கலைகழகம் ஒன்றின் பேராசிரியர் சாள்ஸ் சந்தியாப் பிள்ளை என்பவர் கட்டுக்கரைக் குளத்தின் வன ஜீவசராசிகள் பற்றி பல சுவையான தகவல்களை "(Status of the Elephant in Mannar Distirct)" என்னும் தலைப்பிலான ஆய்வறிக்கையில் பதிவு செய்துள்ளார்.

கட்டுக்கரைக்குளத்தின் பரந்த நீரேந்து படுக்கையில் பரவிச் செறிந்துள்ள வனப்பிரதேசத்தில் ஏராளமான பறவைகளும் மிருகங்களும் வாசம் செய்கின்றன. 33 வகையான பறவையினங்கள் அடர்ந்த வனத்தில் நிரந்தரமாக வாசம் செய்கின்றன. (Have record minimum 33 Resident Species from the Giants Tan A Done ) தேசிய ரீதியான கணிப்பீட்டில் இலங்கைக் காடுகள் நீர் நிலைகளில் உள்ள 16 வீதமான பறவைகள் இங்கேயே வாழ்கின்றன.

மடுபிரதேச காட்டு எல்லை வரை அகலித்துள்ள இச்சரணாலயப் பரப்பள வானது, இரண்டு ஆள்கூறுகளை கொண்டதாக வரையறுக்கப்பட்டு உள்ளது. கட்டுக்கரைக்குளத்தின் ஆள்புல எல்லையுடன் வரையறுக்கப் பட்ட சரணாலயம். இதன் பரப்பளவு 39000 ஹெக்டயர்.

**கட்டுக்கரைக்குள சரணாலயத்துடன் இணைந்த கிழக்கே பரந்து கிடக்கும் மடுறோட் சரணாலயம்**

இதன் பரப்பளவு 26677 ஹெக்டயர் ஆகும். மன்னார் மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பின் 15.3 விதமான நிலப்பரப்பினை கொண்ட கட்டுக்கரைக்குள வன ஜீவராசிகள் சரணாயலயம் உண்மையில் ஒரு வினோதங்களின் மையமாகவே விளங்கிவருகின்றது. இங்கு வருகின்ற ஏராளமானஉள்ளூர், வெளிநாட்டு

உல்லாச பயணிகளின் இரசனையில் இக்குளத்தின் வரலாற்று பின்னணியும், பிரமாண்டமான தோற்றப்பாடும் இங்கு வாழுகின்ற வன ஜீவராசிகளின் நடமாட்டமும் மன்னார் மாவட்டத்தின் உல்லாச பயணத்துறை வளர்ச்சியின் மைய விசையான முதன்மை தகுதியை கட்டுக்கரைக்குளமே கொண்டுள்ளது.


**இறுதியாக.....**

இன்றைய நவீன உலகில் சூழலியல் பாதுகாப்பு தொடர்பாக சர்வதேச ரீதியாகவும், தேசி மட்டங்களிலும் கூடுதலான கவனம் செலுத்தப்படுகின்றது. பாடசாலை ஆசிரியர்கள் இது தொடர்பான பரந்த தேடல் அறிவினை மேலும் விருத்தி செய்து கொள்வதோடு வகுப்பறை மட்டங்களில் இன்று அமுல்படுத்தப் பட்டு வரும் சுற்றாடல் சார் செயற்றிட்டங்கள் ஊடாக சூழலின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி இயற்கைச் சூழலை நேசிக்கும் மனப்பாங்கு உள்ளவர்களாக வழிப் படுத்துவது சமகாலத்தின் தேவையாக உள்ளது. ●

## எப்படியும் நன்மைசெய்...

*வீசு வீசு நீ குளிர்காற்றே*
*வல்ல இறைவன் அத்தனை அன்பற்றவரல்ல*
*நன்றிகெட்ட மனிதரைப்போன்று.*
*மனிதர்கள் அசாதாரணமானவர்கள்*
*முரண்பாடும் தற்புகழ்ச்சியும் உள்ளவர்கள்*
*எப்படியும் அவர்களை அன்பு செய்.*
*நீ நல்லது செய்தால் மனிதர்கள்*
*தன்னல மனப்பான்மையோடு ஏற்றுக்கொள்ளாமல்*
*உன்னைக் குறை கூறுவார்கள்*
*எப்படியும் நல்லதைச் செய்.*
*நீ வெற்றி பெற்றால் கெட்ட நண்பர்களையும்*
*உண்மையான எதிரிகளையும் வெல்லுவாய்*
*எப்படியென்றாலும் வெற்றி பெறு.*
*நேர்மையும் கபடமின்மையும் உன்னைத் துன்பப்படுத்தும்.*
*எப்படியும் நேர்மையாகவும் கபடமின்றியும் இரு.*
*இன்று நீ செய்த நன்மைகள் நாளை மறக்கப்படும்*
*எப்படியும் நன்மையைச் செய்.*
*மிகப்பெரிய எண்ணங்கள் கொண்ட மிகப்பெரிய மனிதர்கள்*
*மிகச்சிறிய எண்ணம் கொண்ட மிகச்சிறிய மனிதர்களால்*
*வீழ்த்தப்படலாம். எப்படியும் பெரியவற்றை எண்ணு.*
*உன்னிடமுள்ள நல்லவற்றை நீ உலகிற்கு கொடு.*
*நீ உதைக்கப்படுவாய்.*
*எப்படியும் உன்னிடமுள்ள நல்லவற்றை நீ உலகிற்குக் கொடு.*

# உயர்வான எண்ணங்கள்



ஒரு நாள் பள்ளியிலிருந்து வந்த தாமஸ் ஆல்வா எடிசன் கையில் ஒரு கவரில் உள்ள கடிதத்தை தன் அம்மாவிடம் மட்டுமே கொடுக்க வேண்டும் என தன் ஆசிரியர் கூறியதாக சொல்லி கொடுத்தான்.

அந்த கடிதத்தை அந்த தாய் கண்ணீரோடு சத்தமாக தன் மகன் கேட்கும்படி இப்படி படித்தாள் "உங்கள் மகனின் அறிவுத் திறமைக்கு முன் எங்கள் பள்ளி மிகவும் சிறியது அவனுக்கு கற்பிக்க திறமையான ஆசிரியர்கள் எங்களிட மில்லை அதனால் தயவுசெய்து நீங்களே உங்கள் மகனுக்கு கற்பிப்பது நல்லது" என்று

பல ஆண்டுகளுக்கு பிறகு எடிசனின் தாயாரும் காலமாகிவிட்டார். எடிசனும் அந்த நூற்றாண்டின் சிறந்த ஆராய்ச்சியாளராக கண்டுபிடிப்பாள ராகவும் ஆனார்...!

இப்படி இருக்கையில் ஒருநாள் தனது வீட்டின் பழைய சாமான்களை எடுத்து வைத்துக் கொண்டிருந்தபோது அவர் தன் அம்மாவிடம் முன்பொருமுறை பள்ளியிலிருந்து கொண்டுவந்து கொடுத்த கடிதம் எதேச் சையாக கண்ணில் பட அதை எடுத்து படித்துப் பார்த்தார்... அதில் இப்படி எழுதியிருந்தது "மூளை வளர்ச்சி குன்றிய உங் கள் மகனை இனிமேல் எங்கள் பள்ளிக்கு நீங்கள் அனுப்பவேண்டாம்" என்று...

இதைப்படித்த எடிசன் கதறி அழுதார். பின் அவரது டைரியில் கீழ்க்கண்டவாறு எழுதினார். "மூளை வளர்ச்சியற்ற தாமஸ் ஆல்வா எடிசன் தனது "தாயாலேயே" மாபெரும் கண்டு பிடிப்பாளனானான்" என்று. தன்பிள்ளைகள் மீதான "உயர்வான எண்ணங்கள்" அவர்களை மிக உயரத்துக்கு கொண்டு செல்லும்..!

குழந்தைகள் மனதில் தன்னம்பிக்கையை விதைப்போம்...

**கல்வி என்பது மனிதரிடம் ஏற்கனவே இருக்கின்ற பூரணத்துவத்தை வெளிக்கொணர்வதே ஆகும்**

**- சுவாமி விவேகானந்தர் -**

**கற்பவனாகவிரு. கற்பிப்பவனாகவிரு. கற்பவனுக்கு உதவுபவனாக இரு. - ஹதீஸ்**

**ஆசு + இரியன் - ஆசிரியன் ஆசு என்பது குற்றம், இருள் இரிதல் என்றால் நீக்குதல். எனவே ஆசிரியன் என்போன் உள்ளத்திலுள்ள குற்றத்தை அல்லது இருளை நீக்குபவன்.**

# தனது மகனின் ஆசிரியருக்கு ஆபிரகாம் இலிங்கன் எழுதிய மடல்

*அவன் கற்றுக் கொள்ள வேண்டும்*
*அனைத்து மனிதர்களும் நேர்மையானவர்கள் அல்ல*
*அனைத்து மனிதர்களும் உண்மையானவர்கள் அல்ல*
*என்பதை அவன் தெரிந்து கொள்ள வேண்டும்.*

*ஆனாலும்*
*மனிதர்களில் அயோக்கியர்களுக்கு இடையில்*
*உண்மையான கதாநாயகர்களும் இருக்கிறார்கள்*
*என்பதையும்*
*சுயநல அரசியல்வாதிகளுக்கு இடையில்*
*அர்ப்பணிப்பு மிக்க தலைவர்களும் இருக்கிறார்கள்*
*என்பதையும்*
*பகைவர்களுக்கு இடையில்*
*நண்பர்களும் இருக்கிறார்கள்*
*என்பதையும் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.*

*அவனுக்கு பொறாமைக் கணம் வந்துவிடாமல்*
*கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்*
*மௌனமாக இரசித்து சிரிப்பதன் இரகசியத்தை*
*அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்*
*எதற்கெடுத்தாலும் பயந்து சுருங்கிக் கொள்வது*
*கோழைத்தனம் என்பதைப் புரிய வையுங்கள்.*
*புத்தகங்கள் என்ற அற்புத உலகத்தின் வாசல்களை*
*அவனுக்கு திறந்த காட்டுங்கள்.*
*அதே வேளையில் இயற்கையின் அதிசயத்தை*
*இரசிக்கவும் அவனுக்கு கற்றுக் கொடுங்கள்.*

*வானில் பறக்கும் பறவைகளின் புதிர் மிகுந்த அழகையும்,*
*சூரிய ஒளியில் மின்னும் தேனீக்களின் வேகத்தையும்,*
*பசுமையான மலை அடிவார மலர்களின் வனப்பையும்,*
*இரசிப்பதற்கும் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.*
*ஏமாற்றுவதை விடவும் தோல்வியடைவது எவ்வளவோ மேலானது*
*என்பதைப் பள்ளியில் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.*

*மற்றவர்கள் தவறு என்று விமர்சித்தாலும்*
*தனது சுயசிந்தனை மீது அசைக்க முடியாத*
*நம்பிக்கை வைக்க*
*அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.*
*மென்மையான மனிதர்களிடம் மென்மையாகவும்*
*முரட்டுக் குணம் கொண்டவர்களிடம் கடினமாகவும்*

*அனுகுவதற்கு அவனுக்கு பயிற்சி கொடுங்கள்.*
*கும்பலோடு கும்பலாக கரைந்து போய் விடாமல்*
*எந்தச் சூழ்நிலையிலும் தனது சொந்த நம்பிக்கையின்படி*
*சுயமாகச் செயல்படும் தைரியத்தைக் கற்றுக் கொடுங்கள்.*


*அனைத்து மனிதர்களின் குரலுக்கும் அவன் செவிசாய்க்க வேண்டும்.*
*எனினும் உண்மை என்னும் திரையில் வடிகட்டி*
*நல்லவற்றை மட்டும் பிரித்து எடுக்க*
*அவனுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்.*
*துயரமான வேளைகளில் சிரிப்பது எப்படி என்று*
*அவனுக்கு கற்றுக் கொடுங்கள்.*

*கண்ணீர் விடுவதில் தவறில்லை என்றும்*
*அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.*
*போலியான நடிப்பைக் கண்டால் எள்ளி நகையாடவும்*
*வெற்றுப் புகழுரைகளைக் கண்டால் எச்சரிக்கையாக இருக்கவும்*
*அவனுக்குப் பயிற்சி கொடுங்கள்.*
*தனது செயற்திறனுக்கும் அறிவாற்றலுக்கும்*
*மிக அதிக ஊதியம் கோரும் சாமர்த்தியம் அவனுக்கு வேண்டும்.*
*ஆனால்,*
*தனது இதயத்திற்கும் தனது ஆன்மாவிற்கும்*
*விலைபேசுபவர்களை அவன் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது*
*பெருங்கும்பல் திரண்டுவந்து கூச்சலிட்டாலும்*
*நியாயம் என்று நான் நினைப்பதை நிலைநாட்ட*
*விடாமல் போராடுவதற்கு அவனுக்கு நம்பிக்கை கொடுங்கள்.*
*அவனை அன்பாக நடத்துங்கள்.*
*ஆனால் அதிக செல்லம்காட்டி சார்ந்திருக்க வைக்க வேண்டாம்.*
*ஏனென்றால் கடுமையான தீயில் காட்டப்படும் இரும்பு மட்டும்தான்*
*பயன் மிக்கதாக மாறுகின்றது.*
*தவறுகண்டால் கொதித்து எழும் துணிச்சலை*
*அவனுக்கு கற்றுக் கொடுங்கள்.*

*அதே வேளையில் தனது வலிமையை மௌனமாக*
*வெளிப்படுத்தும் பொறுமையை அவனுக்கு கற்றுக் கொடுங்கள்.*
*அவன் தன்மீதே மகத்தான நம்பிக்கை கொள்வான்.*
*இது ஒரு மிகப்பெரிய பட்டியல் தான்.*
*இதில் உங்களுக்கு சாத்தியமானதையெல்லாம்*
*கற்றுக்கொடுங்கள்*
*அவன் மிக நல்லவன்.*
*என் அன்பு மகன்.*

# வலயத்தின் தரவுகள் ஒரே பார்வையில்

## Geographical Area of Mannar Zone




## School Information 2016

| Division | 1AB | 1C | II | III | Total |
|---|---|---|---|---|---|
| Mannar | 7 | 9 | 12 | 12 | 40 |
| Nanatan | 3 | 1 | 8 | 14 | 26 |
| Musali | 1 | 5 | 5 | 15 | 26 |
| **Zone** | **11** | **15** | **25** | **41** | **92** |


# Information of Students - 2016

| Division | Male | Female | Total |
|---|---|---|---|
| Mannar | 7723 | 7976 | 15699 |
| Nanatan | 1681 | 1688 | 3369 |
| Musali | 2375 | 2332 | 4707 |
| Zone | 11779 | 11996 | 23775 |

# Details of Teachers -2016

| Division | Male | Female | Total |
|---|---|---|---|
| Mannar | 304 | 664 | 968 |
| Nanatan | 110 | 194 | 304 |
| Musali | 123 | 142 | 265 |
| Zone | 537 | 1000 | 1537 |

# கல்வியின் மூலம் எதிர்பார்க்கப்படும் அடிப்படை மானுடப் பண்புகள்





# நன்றி நவில்கின்றோம்



எமது மன்னார் கல்வி வலயத்தின் ஆசிரியர் மாநாட்டு விழாவின் போது வெளியீடு செய்யப்பட்ட வித்துவம் சிறப்பு மலர் முழுமைபெற்றதையிட்டு புளகாங்கிதம் அடைகின்றோம்.

எல்லாம் வல்ல இறைவனுக்கு முதற்கண் நன்றிகள். இந்நூலின் சிறப்புக்கு வழிகாட்டிய எமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி செலின் சுகந்தி செபஸ்ரியன் அவர்களுக்கும் மற்றும் ஆலோசனைகளை வழங்கிய பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் எமது நன்றிகள்.

வாழ்த்துக்கள் மற்றும் ஆசியுரைகளைத் தந்துதவிய கௌரவ வடமாகாண கல்வி அமைச்சர் அவர்களுக்கும், அவ் அமைச்சின் செயலாளர் அவர்களுக்கும் மற்றும் வடமாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கும் எம் இதயம் நிறைந்த நன்றிகள்.

இந்நூலுக்கான ஆக்கங்களைத் தந்துதவிய ஆசிரியர்களுக்கும், செவ்வை பார்க்க உதவிய ஆசிரியை செல்வி. A. D. டயானா, ஆசிரியை திருமதி. N. ஈஸ்வரன் ஆகியோருக்கும், நூலை மிகக்குறுகிய காலத்தில் முழுமைப்படுத்தி அச்சேற்றிய மன்னார் சைபர்சிற்றி பதிப்பகத்தினருக்கும் எமது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- மலர்க்குழு -

***"தந்தை தாய் ஆவானும் கார்கதி இங்கு ஆவானும்***
***அந்தம் இலா இன்பம் நமக்கு ஆவானும்***
***எந்தம் உயிர்தான் ஆகு வானும்***
***சரண் ஆகு வானும் குரு"***



Cyber City - 0715797597